REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 செப்டெம்பர் 25 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வருட. 91 இல. 227 | Monday 25, September, 2023 | 24 பக்கங்கள் | 50/-

## சிற்றுண்டிச்சாலைகளை ஒழுங்குபடுத்த தீர்மானம்

### பரிசோதனைக்கு உட்படுத்தவும் PHI திட்டம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளில் இயங்கும் சிற்றுண்டிச்சாலைகளை ஒழுங்கு படுத்தும் வேலைத் திட்டமொன்றை ஆரம் பிப்பதற்கு பொதுசுகாதார பரிசோதகர்கள் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. அச்சங்கத் தின் தலைவர் உபுல் ரோஹண இது தொடர்பில் தெரிவிக்கையில், 06

### வாகனங்களைத் தவிர்ந்த அனைத்து

# இறக்குமதி கட்டுப்பாடுகள் அடுத்த மாதமளவில் நீக்கம்



**அரச வருவாய் அதிகரிப்பு, பொருளாதார ஸ்திரத்தன்மை ஏற்படுத்தல் தொடர்பான மாநாட்டில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவிப்பு**

வாகன இறக்குமதியைத் தவிர தற்போது விதிக்கப்பட்டுள்ள அனைத்து இறக்குமதி கட்டுப்பாடு களையும் அடுத்த மாதமளவில் நீக்க வுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நாடு முகம் கொடுத்த பொருளா தார நெருக்கடிகளுக்கு மத்தியில் இறக்குமதி கட்டுப்பாட்டை தற்கா லிகமாக விதித்து, நாட்டின் பொரு ளாதாரத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கு அரசு செயற்பட்டதையும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேம சிங்க நினைவு கூர்ந்தார். தற்போது இறக்குமதி கட்டுப்பாடு எச்.எஸ். கோட் 600 பொருட்களுக்கு விதிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதில் எச்.எஸ்.கோட் 270 க்கும் அதிகமான அளவில் வாகன இறக்கு மதி தொடர்பாகவே விதிக்கப்பட்டுள் ளது.

அடுத்த மாதம் முதல் இந்த கட்டுப் பாட்டை தவிர ஏனையவற்றை நீக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

நாட்டின் புதிய வரிக் கொள்கை, சர்வதேச நாணய 06

## சர்வதேச மாநாடுகளில் பங்கேற்று நேற்று நாடு திரும்பினார் ஜனாதிபதி



ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவுக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடு திரும்பியுள்ளார்.

துபாயிலிருந்து வந்த எமிரேட்ஸ் விமான நிறுவ னத்துக்கு சொந்தமான ஈ.கே. 650 விமானம் மூலம், நேற்றுக் காலை 8.30 மணியளவில் அவர் நாடு திரும் பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஜி 77 மற்றும் சீன அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்பதற் காக கடந்த (13) ஜனாதிபதி ரணில் விக்கிரம 06

### ஓய்வுபெறும் கணக்காய்வாளர்களுக்கு

## ஓய்வூதியத்துடனான ரூ.25,000 50,000 ரூபாவாக அதிகரிப்பு

### பிரதமர் யோசனை சமர்ப்பிப்பு



(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஓய்வூதியம் பெறும் கணக்காய்வாளர்களுக்கு ஓய்வூதிய சம்பளத்துடன் வழங்கப்படும் 25,000 ரூபா கொடுப்ப னவை 50,000 ரூபாவாக அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவ டிக்கை எடுத்துள்ளது. இதற்கான யோசனையை பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் 06

## 'நிபா' அச்சுறுத்தல் இதுவரை இல்லை பாதுகாப்பில் பல்வேறு நடவடிக்கைகள்

### வெளிநாடுகளிலிருந்து காவுவதை தடுக்கவும் விழிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



"நிபா" வைரஸ் இதுவரை இலங்கைக்கு அச்சுறுத்தலாக இல்லையென்றும் அதிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர் பில் உலக சுகாதார அமைப்புடன் தொடர்ந்தும் பேச்சுவார்த் தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இதற்கு மேலதிகமாக சுகாதார அமைச்சின் செய லாளர், பணிப்பாளர் நாயகம் மற்றும் வைரஸ் 06

### பேர்லின் குளோபல் கருத்தரங்கில் பங்கேற்க

## ஜனாதிபதி ரணில் நாளை ஜெர்மன் பயணமாவார்

(லோரன்ஸ் செல்வநாய கம்)




ஜெர்மனியில் நடைபெற வுள்ள பேர்லின் குளோபல் கருத்தரங்கில் கலந்துகொள் வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாளை ஜெர்மனிக்கு பயணமாகவுள்ளார்.

கியூபாவில் நடைபெற்ற ஜி77 மாநாடு மற்றும் ஐக்கிய நாடுகள் பொதுச்சபை கூட்டத் தொடர் ஆகியவற் றில் கலந்துகொண்ட ஜனா திபதி நேற்றைய தினம் தமது பயணத்தை முடித்து நாடு திரும்பினார்.

இந்நிலையில், ஜெர்மனியில் நடைபெறவுள்ள பேர்லின் குளோபல் பேச்சு 06

## மாலைதீவுக்கு மாதாந்தம் 1.5 மில். முட்டைகள் ஏற்றுமதி

### மேலும் சில நாடுகளுக்கு ஏற்றவும் பேச்சு



லோரன்ஸ் செல்வநாயகம்

மாதாந்தம் இலங்கையிலிருந்து 1.5 மில்லியன் முட்டை கள் மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அடுத் தவருடம் முதல் மேலும் நான்கு நாடுகளுக்கு முட்டை களை ஏற்றுமதிசெய்வது தொடர்பில் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுவருவதாகவும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் முட்டைக்கான தட்டுப்பாடுகளை நிவர்த்திசெய்யும் வகையில் தேவையான அளவு தாய்க் கோழிகளையும், சூல் முட்டைகளையும் 06

### அரசியல் நோக்கங்களை நிறைவேற்ற சிலர் முயற்சி

## வளர்ந்து வரும் நாட்டை இனவாத நெருக்கடிக்குள் தள்ள வேண்டாம்



ஜனாதிபதியின் தொழிற்சங்க தொடர்பாடல் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய

நாட்டில் இனவாத மோதல்களை ஏற்படுத்தி தங்களது அரசியல் நோக்கங் களை ஈடேற்றிக் கொள்ள சில அரசியல் குழுக்கள் முயற்சித்து வருவ தாக, ஜனாதிபதியின் தொழிற்சங்க தொடர்பாடல் பணிப்பாளர் 06

## பங்களாதேஷிடம் பெற்ற கடனை மீளச்செலுத்திவிட்டோம் - செஹான்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

பங்களாதேஷிடமிருந்து இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாணய பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் பெறப் பட்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனின் இறுதி தவணையாக, இலங்கை 50 மில்லியன் அமெ ரிக்க டொலர்களை செலுத்தியுள்ளதாக நிதி இரா ஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள் ளார்.

பங்களாதேஷிடமிருந்து 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இந்த 200 மில்லியன் அமெரிக்க டொலரை இலங்கை கடனான பெற்றிருந் தது. இலங்கை, கடந்த வருடம் 06

## முதலாம் தவணைக்கு முன்பதாக இலவச பாடநூல்கள், சீருடைகள்,

### பகலுணவு மட்டுப்படுத்தப்படமாட்டாது



அடுத்த வருடம் முதலாம் தவ ணைக்கான பாடசாலை கல்வி நட வடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்பதாக, இலவச பாட நூல்களை மாணவர்களுக்கு வழங்கும் நடவ டிக்கைகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்ப்பதாக கல்வி அமைச் சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். பாடசாலை மாணவர்களுக்கான இலவச 06

### கனடாவில் இணை அமைச்சராக

## இலங்கையை பூர்வீகமாக கொண்ட விஜய் தணிகாசலம்



கனடாவின் ஒன்டாரியோ மாகாண போக் குவரத்துத் துறை இணை அமைச்சராக இலங்கையை பூர்வீக மாக கொண்ட விஜய் தணிகாசலம் பொறுப் பேற்றுள்ளார். முன் னதாக, இவர் ஒன் டாரியோ மாகாண 06

## ஆர்.எம் பார்க்ஸ் நிறுவனத்துக்கு எரிபொருள் விநியோக உரிமை

### உள்ளூர் சந்தையை விட குறைந்த விலையில் விற்பனை


அமெரிக்காவை தளமாகக் கொண்ட ஆர்.எம் பார்க்ஸ் நிறுவனம் அடுத்த மாதம் இலங்கையில் எரிபொருள் விநி யோகத்தை ஆரம்பிக்குமென மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். எரிபொருட்களை இறக்குமதி செய்து விநியோகிப்பதற்கும், விற்பனை செய் வதற்கும் இந்நிறுவனம் கடந்த ஜூன் 20இல், ஒப்பந்தம் கைச்சாத்திட்டது. இலங்கை கனியவள கூட்டுத்தாபனத் துக்கு சொந்தமான 150 எரிபொருள் நிலையங்கள் முதலில் இந்நிறுவனத் திற்கு வழங்கப்படும் எனவும் பின்னர் 50 எரிபொருள் நிலையங்களை சொந் தமாக திறக்க வாய்ப்பு கிடைக்குமென வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 06

## ரூ. 03 கோடி பெறுமதியான 2,70,000 போதை மாத்திரைகள்

### மன்னார் தாழ்வுப்பாடில் மீட்பு

(மன்னார்குறூப்நிருபர்)



மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாழ்வுபாடு பகுதியிலுள்ள காட்டுப் பற்றைக்குள், சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு இலட்சத்து எழுபதாயிரம் போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள் ளன. இது தொடர்பில் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மன்னார் தள்ளாடி இராணுவ புலனாய்வு பிரி வுக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக் கமைய மன்னார் பொலிஸ் குற்ற தடுப்பு புலனாய்வு 06



**10**

சுருக்கு வலைக்கான தடை

**இருதரப்பினருடன் பேசுவது அவசியம்**

## பொலிஸ் உத்தியோகத்தரென கூறி மாணிக்கக்கல் கொள்ளை: ஒருவர் கைது



பொலிஸ் உத்தியோகத்தரெனக் கூறி, மாணிக்கக் கல்லை கொள்ளையிட்ட சந்தேகத்தில் பிரதான நபரை கட்டுகஸ்தோட்டை பொலிஸார் (23) கைது செய்துள்ளனர்.

பக்கமூன பிரதேசத்தை சேர்ந்த 47 வயதுடைய நபரே, இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளார். கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் கடந்த (17) இச்சந்தேக நபர் மேலும் பலருடன் இணைந்து இக் கொள்ளைக்கு திட்டமிட்டமை தெரிய வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொள்ளையிடப்பட்ட மாணிக்கக்கல் சுமார் 12 இலட் சம் ரூபா பெறுமதியான நீல நிறக்கல் என தெரிவிக்கப்படு கிறது. மாணிக்கக்கல்லை வாங்க விரும்புவதாக கூறிய சந்தேக நபர், தொலைபேசியில் அழைப்பு 06

## உத்தேச 02 சட்டமூலங்களையும் உடனடியாக விலக்கிக்கொள்ளவும்

### சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்திடம் வேண்டுகோள்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

வர்த்தமானி மூலம் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் மற்றும் உத்தேச ஒன்லைன் முறைமையை பாதுகாத்தல் தொடர்பான சட்ட மூலம் ஆகியவற்றை, உடனடி யாக விலக்கிக்கொள்ளுமாறு இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் மத்திய செயற் குழு கூடி ஏகமனதாக இந்த தீர்மானத்தை மேற்கொண் டுள்ளதாக, அச்சங்கத்தின் தலைவர் சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார். 06

## மலேசியாவில் மூன்று இலங்கையர் மர்மமான முறையில் படுகொலை

### சந்தேக நபர்களான 02 இலங்கையர் தலைமறைவு



மூன்று இலங்கை யர்கள், மலேசியாவில் படுகொலை செய்யப்பட் டுள்ளதாக மலேசிய செய் திகள் தெரிவித்துள்ளன.

இப்படுகொலையில் இலங்கையர் இருவருக்கு தொடர்பிருக்கலாமென மலேசிய பொலிஸார் சந்தே கிப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர்களை கைது செய்வதற்கான விசாரணை களை, கோலாலம்பூர் பொலிஸார் ஆரம்பித் துள்ளனர். சென்டுல் பகுதியிலுள்ள இலங்கை 06

## பாண் விலையை நூறு ரூபாவரை குறைக்க முயற்சி

### பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவிப்பு



(லோரன்ஸ் செல்வநாயகம்)

பாணின் விலையை குறைப்பதற்கு உத்தேசித்துள்ள தாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அச்சங்கத்தின் தலைவர் என். கே. ஜய வர்தன தெரிவிக்கையில், 450 கிராம் பாணின் விலையை விரைவில் 100 ரூபா வரை குறைக்க எதிர்பார்த்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். பல்வேறு இறக்குமதி பொருட்களுக் கான கட்டுப்பாடுகளை தளர்த்துவதற்கு அரசாங் கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. 06

# நகர்வலம்






# இந்தியாவைப்போன்று இலங்கையும் இன்று அபிவிருத்தியை நோக்கி முன்னேறி வருகிறது

## ஹம்பாந்தோட்டை இந்திய துணைத்தூதரக துணைத்தூதுவர்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



இலங்கையும் இந்தியாவும் பிரித்தானியர்களின் ஆட்சியின் கீழ் செயற்பட்டு வந்த காரணத்தினால் இரு நாடுகளின் அபிவிருத்தி முன்னேற்றங்கள் தடைப்பட்டன. அதேபோல், நாடுகள் முன்னேறுவதற்காக இருந்த காலம் வீணடிக்கப்பட்டது. இந்தியா இன்று சகல துறைகளிலும் முன்னேறி வருவது போன்று இலங்கையும் இந்தியா போன்று முன்னேற்றம் அடைந்து வருகிறது. நாட்டை முன்னேற்றுவதே அரசியல்வாதிகளின் பொறுப்பாக இருக்க வேண்டும். இவர்கள் பணம் சம்பாதிப்பதற்காக மாத்திரம் வேலைசெய்வார்களேயானால் நாடு முன்னேற்றமடையாது என ஹம்பாந்தோட்டை இந்திய துணைத்தூதரகத்தின் புதிய துணைத்தூதுவராக பதவியேற்றுள்ள ஜெனரல் ஹர்விந்தர் சிங் தெரிவித்தார்.

ஹம்பாந்தோட்டை இந்திய துணைத்தூதரகத்தில் புதிதாக கடமைப் பொறுப்புகளையேற்றுள்ள புதிய துணைத் தூதுவருடனான ஊடகவியலாளர் சந்திப்பு (18) ஹம்பாந்தோட்டை துணைத் தூதரகத்தில் நடைபெற்றது. இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய புதிய துணைத்தூதுவர், இந்திய அரசாங்கம் இலங்கை மாணவர்களின் கல்விக்காக பாரியதொரு தொகைப் பணத்தினை செலவு செய்து வருகிறது. திறமையுள்ள மாணவர்களை இனங்கண்டு அவர்களது திறமைகளை நாட்டிற்கு பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவதற்கு ஏற்ற திட்டங்களை நடைமுறைப்படுத்த பிரதமர் நரேந்திர மோடி நடவடிக்கை எடுத்து வருகிறார். இந்தியாவின் இன்றைய கல்வி முன்னேற்றத்திற்கு காரணம் கல்வி அபிவிருத்தியாகும் என்றும் துணைத் தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

# நீர்கொழும்பு நகர மத்தியில் திருட்டுச் சம்பவம் அதிகரிப்பு

**நீர்கொழும்பு தினகரன் நிருபர்**

நீர்கொழும்பு நகர மத்தியில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு அன்றாடப் பொருட்களை கொள்முதல் செய்ய வருகின்ற சில்லறை வியாபாரிகளின் பொருட்களை மிகவும் சூட்சுமமான முறையில் திருடிக் கொண்டு செல்கின்ற சம்பவங்கள் கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகின்றன.

குறன, கட்டுநாயக்க மற்றும் சீதுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த

சில்லறை வியாபாரிகளின் பொருட்களே இவ்வாறு திருடப்பட்டு வருகின்றன. நீர்கொழும்பில் மழையுடன் சேர்ந்த காலநிலை நிலவுவதால் சில்லறை வியாபாரிகளின் பொருட்களை பாதுகாத்துக் கொள்வதில் அவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவ்வாறான நிலைமையில் இரண்டு தினங்களுக்கு முன்னர் நீர்கொழும்பு பிரதான வீதி சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தமது மோட்டார் சைக்கிளிலிருந்து சுமார் 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டதாக நீர்கொழும்பு குறன பிரதேசத்தைச் சேர்ந்த சில்லறை வியாபாரியொருவர் தெரிவித்தார்.

# திருட்டுக் குழுவினரை தேடி பொலிஸார் நடவடிக்கை

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

நபர் ஒருவரை கடத்திச் சென்று தங்க ஆபரணங்கள் மற்றும் பணம் என்பனவற்றை கொள்ளையிட்ட திருட்டு குழுவினரை தேடி அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இக்குழுவில் பொலிஸ் பரிசோதகர் ஒருவரும் "சுது புதா" என புனைப் பெயரில் உள்ள நபர் ஒருவரும் இருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். கடத்திச் செல்லப்பட்டுள்ள நபரிடமிருந்து 03 இலட்சம் ரூபா பணம், 02 கையடக்க தொலைபேசி மற்றும் தங்க ஆபரணங்களையும் திருடர்கள் கொள்ளையடித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடத்தல் குழுவினரை கைது செய்வதற்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

துபாய் "SAEEDA FOUNDATION" ஏற்பாட்டில்


# அல்ஹுமைஸறா தேசிய பாடசாலையில் இன்று புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

## பிரதம அதிதியாக ஏ.எச்.எம். பௌஸி எம்.பி பங்கேற்பு

**(அஜ்வாத் பாஸி)**

பேருவளை, சீனன்கோட்டை அல்ஹுமைஸறா தேசிய பாடசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள பல நோக்கு திட்டங்கள் கொண்ட மூன்று மாடி கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இன்று (25) பாடசாலை வளாகத்தில் வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இப்றாஹீம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எச்.எம். பௌஸி பிரதம அதிதியாக கலந்து சிறப்பிப்பார். இந்நிகழ்வில் துபாயில் இயங்கும் கல்வி அபிவிருத்திக்கான வளங்கள் நிறுவனமான "SAEEDA FOUNDATION" நிறுவனத்தின் இலங்கை இணைப்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான நௌஸர் பௌஸி விசேட அதிதியாக கலந்து சிறப்பிப்பார். மேற்படி நிறுவன இலங்கை இணைப்பாளர் நௌஸர் பௌஸியிடம் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் மற்றும் ஊர் பிரமுகர்கள் விடுத்த வேண்டுகோளின்பேரிலேயே மேற்படி மூன்று மாடி கட்டடத்திற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும். இந்நிகழ்வில் களுத்துறை மாவட்ட கல்வித்திணைக்கள பணிப்பாளர்கள் உட்பட பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாகவும் அதிபர் மேலும் தெரிவித்தார்.




இதேவேளை, மேற்படி நிறுவனத்தின் ஏற்பாட்டில் பேருவளை பொல்கொட்டுவ ரோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் மற்றும் தர்கா நகர் அல்ஹம்ரா மகா வித்தியாலயம் ஆகியவற்றிலும் புதிய வகுப்பறை கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா இன்றைய தினம் நடைபெறவுள்ளது. இந்நிகழ்விலும் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். பௌஸி மற்றும் நௌஸர் பௌஸி ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உதவிகள்

**ருஸைக் பாரூக்**

இலங்கை ஸ்ரீ ஜெய் ப்ரத்யங்கிரா குருபீடம் குறைந்த வருமானம் பெறும் 300 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களை மற்றும் 100 பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு எஸ். விநாயகர் குருக்கள் தலைமையில் அண்மையில் கொழும்பு பொரளை YMBA கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்த வைபவத்தில் பிரதம அதிதியாக ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் மற்றும் ஜனாதிபதி செயலக பிரதானி சாகல ரத்நாயக்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு உலர் உணவுப் பொருட்கள் மற்றும் பாடசாலை உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.



நிகழ்வில் ஜனாதிபதியின் தொழிற்சங்கங்களின் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய, பௌத்த, இந்து, இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்கள், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்கள், குரு பீட உறுப்பினர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்களும் கலந்து கொண்டனர்.

# சவூதி அரேபியாவின் தேசிய தினத்துக்கு 'அல் ஹிமா' அமைப்பு வாழ்த்து

சவூதி அரேபிய நாட்டின் முடிக்குரிய இளவரசர் முகம்மத் பின் சல்மான் அவர்கள் மேற்கொள்கின்ற செயற்பாடுகளும் வியூகங்களும் அரசியல் திட்டங்களும் எதிர்காலத்தில் முஸ்லிம் சமூகத்திற்கான ஒரு பலமான ஒரு இஸ்லாமிய சாம்ராஜ்யத்தை உருவாக்குகின்ற அளவு இஸ்லாமிய வல்லரசை நோக்கி செல்கின்ற நிலையை நாங்கள் விளங்கிக் கொள்ளலாமென சவூதி அரேபியாவின் 93ஆவது தேசிய தினத்தை முன்னிட்டு 'அல்ஹிமா' இஸ்லாமிய நலன்புரி அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். நூறுல்லாஹ் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து அவர் தனது செய்தியில், இலங்கையில் இருக்கின்ற முஸ்லிம்கள் உண்மையில் முகம்மத் பின் சல்மான் அவர்களுடைய செயற்திட்டங்களில் திருப்திகாண்கின்ற ஒரு நிலையை நாங்கள் காணுகின்றோம். காரணம்; உலக முஸ்லிம்களுக்கு ஒரு பலமான




சக்தி, வலுவான ஒரு அரசியல் தலைமைத்துவம், உலகத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நாடு என்ற வகையில் சவூதி அரசாங்கத்தின் செயல் திட்டங்கள் பாராட்டப்பட வேண்டிய ஒரு நம்பிக்கை வைக்கக்கூடிய நிலையிலே சென்று கொண்டிருக்கின்றது.

நவீன கால உலக செயல்திட்டங்களோடும் நவீனகால உலக பரிமாற்றங்களோடும் ஒன்றுபட்டு செயல்படக்கூடிய அனைத்து மனித சுதந்திரங்களையும் கொடுத்து ஒரு நல்ல ஒரு சமூக கட்டமைப்பை உருவாக்குவதில் சவூதி அரசின் செயற்பாடு அதன் நடவடிக்கைகள் உண்மையில் பாராட்டப்பட வேண்டும். வரலாற்றில் நாம் காணுகின்ற ஒரு உண்மைதான் எங்களுடைய அதிகபட்ச நம்பிக்கை எங்களுடைய அதிகபட்ச எதிர்பார்ப்பு எல்லாம் சவூதி அரசு மீது இருப்பதாகும். குறிப்பாக இலங்கையில் இருக்கின்ற முஸ்லிம்களுக்கு சவூதி அரசின் அரசியல் பலம் ஒரு முக்கியமான அளவுகோலும் எடுத்துக்காட்டும் எங்களுடைய மன தைரியத்தை காக்கின்ற ஒரு செயற்பாடாகும்.

சவூதி அரேபியாவின் தேசிய தினம் கொண்டாடப்படுகின்ற இந்த நாளில் அந்நாட்டின் முன்னேற்றத்திற்கும் ஒற்றுமைக்கும் இச்சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களாகிய நாம் பிரார்த்திப்போமென அச்செய்தியில் ஷெய்க் நூறுல்லாஹ் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 25 மாவட்டங்களையும் ஊடறுத்து

# சுமார் 2194 கி.மீட்டர் தூரம் சைக்கிளில் பயணித்து சாதனை; நப்ஸானுக்கு புத்தளத்தில் வரவேற்பு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**

புத்தளம் லெகூன் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டு, ஒரு மாத காலப்பகுதிக்குள் இலங்கையின் 25 மாவட்டங்களையும் ஊடறுத்து சுமார் 2194 கி.மீட்டர் தூரம் சைக்கிளில் பயணித்து சாதனை படைத்துள்ள லெகூன் அமைப்பின் உறுப்பினர் புத்தளம் தில்லையடி சதாமியாபுரத்தை சேர்ந்த என்.எல்.எம். நப்ஸானுக்கு புத்தளத்தில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

புத்தளம் நிந்தனியில் பொதுமக்களால் இவர் வரவவேற்கப்பட்டு ஊர்வலமாக புத்தளம் கொழும்பு முகத்திடலுக்கு முன்பாக அமைந்துள்ள மர்ஹூம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

லெகூன் அமைப்பின் தலைவர் எம்.ஐ.எம். இல்ஹாம் தலைமையில் அங்கு நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம், புத்தளம் நகர சபை செயலாளர் கீத்தானி ப்ரீதிக்கா, ஐ.மீடியா பணிப்பாளர் கவிஞர் மரைக்கார் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

சாதனையை நிலைநாட்டிய நப்ஸானுக்கு அதிதிகள்



விருது வழங்கி கௌரவித்தனர். தொடர்ந்து நப்ஸான் அவர்கள் புத்தளம் மற்றும் தில்லையடி பிரதேசங்களுக்கு ஊர்வலமாக அழைத்து செல்லப்பட்டார். இலங்கை பாதுகாப்பு துறையினர், சாதனை படைத்த நப்ஸானுக்கான பாதுகாப்பு விடயங்களை இலங்கை முழுவதிலும் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சைக்கிள் பயணம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல், முடியும் நாள் வரை சிறப்பாக பாதுகாப்பு வழங்கினர். இலங்கை பாதுகாப்பு துறையினருக்கு லெகூன் அமைப்பு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

புத்தளம் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில்

# வெள்ள அனர்த்தம் ஏற்படுவதை தடுக்கும் நடவடிக்கை முன்னெடுப்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**

புத்தளம் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் வெள்ள அனர்த்தம் இடம்பெறுவதை தடுக்கும் முகமாக புத்தளம் வெஸ்டன் சோல்டன் வீதி ஊடாக களப்புடன் இணையும் கால்வாய் துப்புரவு செய்யப்பட்டது.

கடந்த வருடம் பெய்த கடும் மழை காரணமாக புத்தளத்தில் பல இடங்களிலும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டன. எனினும், தற்போது தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் வெள்ள அனர்த்தம் ஏற்படுவதை கட்டுப்படுத்தும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த அடிப்படையில், புத்தளம் நகர சபைக்குட்பட்ட வெஸ்டன் சோல்டன் வீதியூடாக சிறு கடலுக்கு நீர் சென்றடையும் பிரதான கால்வாயை துப்புரவு செய்வது தொடர்பாக கள ஆய்வு செய்து உடனடி தேவையாக கால்வாய் ஒன்றை வெட்டுவதற்காக இனங்காணப்பட்ட இடத்தில் கால்வாய் ஒன்றும் வெட்டப்பட்டது.

புத்தளம் மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சிந்தக அமல் மாயாதுன்ன மேற்படி வேண்டுகோளை விடுத்திருந்தார். இதன்போது , புத்தளம் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சிந்தக அமல் மாயாதுன்ன, புத்தளம் நகர சபை செயலாளர் எல்.பீ.ஜீ. பிரீத்திகா, புத்தளம் பிரதேச செயலாளர் (பதில்) சம்பத் வீரசேகர உட்பட அதிகாரிகள் பலரும் உரிய இடத்திற்கு சமூகமளித்திருந்தனர். மேலும், புத்தளம் நகர சபைக்கு உட்பட்ட நகர் பகுதிகளில் உள்ள அனைத்து பிரதான கால்வாய்களும் ஏற்கனவே துப்புரவு செய்யப்பட்டுள்ளதோடு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் அனர்த்தம் இடைக்கால கொடுப்பனவாக 8,90,000 டொலர்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கை கடற்பரப்பில் அனர்த்தத்தை ஏற்படுத்திய எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விவகாரம் தொடர்பில் முதற்கட்ட நட்ட ஈட்டை, மீபா நிறுவனம் நாட்டுக்கு வழங்கியுள்ளதாக நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்தார்.

மேற்படி நிறுவனம் இலங்கைக்கு 8,90,000 டொலர்களை வழங்கியுள்ளதுடன் மீனவர்களுக்கு நட்ட ஈடாக வழங்குவதற்கு மேலும் 16 மில்லியன் ரூபாவை திறைசேரியின் கணக்கில் வைப்பிலிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலின் காப்புறுதி நிறுவனமே, இக் கொடுப்பனவுகளை இலங்கைக்கு வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேற்படி கப்பலில் பரவிய தீ அனர்த்தத்தினால் நாட்டிலுள்ள கடற்கரை பிரதேசங்கள் பாதிப்படைந்துள்ளதுடன், அந்த கடற்கரை பிரதேசங்களை சுத்தப்படுத்துவதற்கு கடற்கரை சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபைக்கு ஏற்பட்ட செலவினமாக இந்த தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மீனவர்களுக்கான நட்ட ஈட்டை வழங்குவதற்கு இடைக்கால கொடுப்பனவாகவும் 16 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# கலைஞர்கள், ஊடகவியலாளர்களுக்கு சீன அரசின் உதவியுடன் 1996 வீடுகள்

**552 மில்.யுவான் ஒப்பந்தம் அடுத்த மாதம் கைச்சாத்து – அமைச்சர் பிரசன்ன ரணதுங்க**

குறைந்த வருமானம் பெறுபவர்கள், கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்காக சீன அரசாங்கத்தின் உதவியுடன் கட்டப்படும் 1996 வீடுகளுக்கான ஒப்பந்தம் அடுத்த மாதம் கைச்சாத்திடப்படவுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்தது.

அடுத்த மாதம் சீனாவின் பீஜிங்கில் நடைபெறும் "Belt and Road Initiative" (BRI) உச்சிமாநாட்டில், இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படும் என்று அமைச்சு கூறியது.

1996 வீட்டு அலகுகளில் இந்நாட்டின் படைப்பாற்றல் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு 108 வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். பழதுறு வத்த பகுதியில் இவ்வீட்டுத் தொகுதி நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதன்படி குறைந்த வருமானம் பெறுவோருக்கு 1888 வீடுகள் ஒதுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்காக சீன அரசாங்கம் நாட்டுக்கு 552 மில்லியன் யுவான் நிதியுதவியை வழங்கவுள்ளது.

இத்திட்டத்திற்காக செலவிடப்படும் வரிப்பணம், காணி சுவீகரிப்புக்கான செலவு, காணி அபிவிருத்திக்கான செலவு, வடிவமைப்பு வேலைக்கான செலவு மற்றும் அடிப்படை விலைப்பட்டியல் தயாரிப்பதற்கான செலவு, டெண்டர் பணிக்கான செலவு மற்றும் கழிவுநீர் வசதிகளின் செலவு என்பன அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும். இது தொடர்பான பரிமாற்றக் கடிதத்தில் சீன மக்கள் குடியரசும் இலங்கை அரசும் கடந்த ஜனவரி 09 இல்,கைச்சாத்திட்டுள்ளன.

# மாணவர்களின் காலை உணவு திட்டத்தை அதிகரிக்க திட்டம்

**உலக உணவுத்திட்ட அனுசரணையில் ஏற்பாடு**



பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் காலை உணவுத் திட்டத்தை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கிணங்க தற்போது 11 இலட்சம் மாணவர்களுக்கு வழங்கப்படும் இக்காலை உணவுத்திட்டம், 22 இலட்சம் வரை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக உலக உணவுத் திட்டம் அனுசரணை வழங்கவுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார். பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடநூல் விநியோக ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு பேசும்போதே, அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போது 2024 ஆம் ஆண்டுக்கு அவசியமான பாடப்புத்தகங்களில் 50 வீதமானவை அச்சிட்டு முடிக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டார்.

தனியார் துறையினருக்கு வழங்கப்படவுள்ள பாடப்புத்தகங்களை அச்சிடும் நடவடிக்கை இரண்டு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், டிசம்பர் 15 ஆம் திகதியளவில் பாடப்புத்தகங்களை அச்சிடும் அனைத்து பணிகளும் நிறைவு செய்யப்படுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
Inland Revenue Department

## வரிசெலுத்துநர்களுக்கான அறிவித்தல்

## வருமான வரி

கொடுப்பனவுக் கால குறியீடு - 22230

| வரி வகை குறியீடுகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| கூட்டிணைந்த வருமான வரி (CIT) | 02 | பங்குடமை வரி (PIT) | 09 | தனிநபர் வருமான வரி | 05 |

தனிநபர்கள், கம்பனிகள் கூட்டுத்தாபனங்கள் மற்றும் ஏனைய அனைத்து ஆட்களுக்கும் 2022/2023 வரிமதிப்பீட்டாண்டிற்கான வருமான வரியினை

2023, செப்தம்பர் 30 ஆகும்

இறுதிக் கொடுப்பனவுத் திகதிக்கு முன்னர் செலுத்தவும்

கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்கும் வரை காத்திருக்க வேண்டாம்

- செலுத்த வேண்டிய வரிகளை இணையவழி வரிக் கொடுப்பனவு தளத்தினூடாக (OTPP) செலுத்தவும்
  மேலதிக விபரங்களுக்கு - 2022.05.17 ஆம் திகதிய PN/PMT/2022-01 ஆம் இலக்க அறிவித்தல்களைப் பார்க்க www.ird.gov.lk இற்கு செல்லவும்.
  http://www.ird.gov.lk/en/Lists/Latest%20News%20%20Notices/Attachments/423/PN_PMT_2022-01_17052022_E.pdf
- இதற்கு மேலதிகமாக, CIT, IIT & PIT கொடுப்பனவுகள் இலங்கை வங்கியின் எந்தவொரு கிளையிலும் மேற்கொள்ளப்படலாம்
  உங்கள் வரிசெலுத்துநர் அடையாள இலக்கத்தை (TIN) காசோலையின் பின்பக்கத்தில் எழுதவும். மேலும் கொடுப்பனவு நறுக்குகளின் பின்பகுதியில் மேலதிக தகவல்கள் காணப்படுகின்றன.
- கொடுப்பனவு நறுக்குகள் கிடைக்காத சந்தர்ப்பத்தில், வங்கியில் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது DIN இலக்கமானது பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
  - வாடிக்கையாளர் ஆதரவு மற்றும் ஊக்குவிப்பு பிரிவில் (தொலைபேசி இல. : 0112134281, 2134282, 2134283, 2134284) அல்லது
  - இ-சேவை ஊடாக https://eservices.ird.gov.lk/Payment/PayingInSlip/Index

வருமான வரிக் கொடுப்பனவை செலுத்தாது விடுதல் அல்லது பிந்திய கொடுப்பனவின் மீதான தண்டங்கள் மற்றும் வட்டி தள்ளுபடி செய்யவோ அல்லது குறைக்கப்படவோ மாட்டாது என்பதை அறிந்துகொள்ளவும்

இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை அறிந்துகொள்ள உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வலைத்தளத்தைப் பார்வையிடவும்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

IRD 1944

வரிகள் - வளமான எதிர்காலத்திற்காக

www.ird.gov.lk https:www.facebook.com/irdcolsl


# எல்லைகளை ஆராய்தல்: TikTok இன் சமூக வழிகாட்டுதல்கள் தொடரின் தூரநோக்குப் பார்வை

**குறும் வீடியோக்களுக்கான உலகின் முன்னணி தளமான TikTok, இன்றைய டிஜிட்டல் உலகில் உலகளவில் படைப்பாற்றலுக்கான மையமாக மாறியுள்ளது மற்றும் பலரின் கவனத்தையும் ஈர்க்க முடிந்துள்ளது. ஆனால், படைப்பாற்றல் வளரும்போது, பாதுகாப்பான, ஏற்றுக்கொள்ளப்பட்ட மற்றும் மகிழ்ச்சிகரமான பயனர் சூழலைப் பாதுகாக்கும் வழிகாட்டுதல்களின் தேவையும் அதிகரிக்கிறது.பொறுப்பான உள்ளடக்கத்தைப் பாதுகாக்கும் அதேவேளையில் படைப்பாற்றலை வளர்ப்பதில் TikTok இன் அர்ப்பணிப்பு அதன் சமூக வழிகாட்டுதல்களை உருவாக்க வழிவகுத்தது. இந்தக் கட்டுரை இந்த வழிகாட்டுதல்கள், TikTok சமூகத்தில் அவற்றின் தாக்கம் மற்றும் படைப்பாற்றல் சுதந்திரத்தை எவ்வாறு ஆதரிக்கிறது என்பதைப் பற்றி ஆழமாக சிந்திக்கிறது.**













### படைப்பாற்றலை உருவாக்குதல்: TikTokஇன் சமூக வழிகாட்டுதல்களின் வரிசையின் அடித்தளம்

TikTok இன் சமூக வழிகாட்டுதல்களின் தொகுப்பு தளத்தின் உள்ளடக்க நிர்வாகத்தின் அடித்தளமாக செயல்படுகிறது, மற்றும் பாதுகாப்பான சூழலில் பயனர்கள் தங்களை நம்பகத்தன்மையுடன் வெளிப்படுத்துவதற்கான கட்டமைப்பை வழங்குகிறது. கலை, சுதந்திரம் மற்றும் கலாச்சார விழுமியங்களுக்கிடையே சமநிலையை ஏற்படுத்த கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது, இந்த வழிகாட்டுதல்கள் பொறுப்பான படைப்பாற்றலுக்கான TikTok இன் அர்ப்பணிப்புக்கு சரியான சான்றாகும். அவை பாவனையாளர்களுக்கு அவர்களின் திறமைகளை ஆராய்வதற்கும், அவர்களின் ஆர்வங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், உலகளாவிய பார்வையாளர்களுடன் இணைவதற்கும் சுதந்திரத்தை வழங்குகின்றது, அதே நேரத்தில் உள்ளடக்கம் மரியாதைக்குரியது, பாதுகாப்பானது மற்றும் அனைவரையும் வரவேற்பதை உறுதிப்படுத்துகிறது.

### பாதுகாப்பான மற்றும் ஆக்கபூர்வமான சமூகத்திற்கான மாற்றம்

இந்த ஆண்டு ஏப்ரல் 21 முதல் நடைமுறைக்கு வந்த TikTok இன் சமூக வழிகாட்டுதல்கள் தொடரின் புதிய Update, மாறிவரும் டிஜிட்டல் சூழலை எதிர்கொள்ளும் வகையில் TikTok இயங்குதளத்தின் திறனை வெளிப்படுத்துகிறது. பாதுகாப்பு மற்றும் படைப்பாற்றலில் நேரடிக் கவனம் செலுத்துவதன் மூலம், இந்த வழிகாட்டுதல்கள் பாவனையாளர்கள் தங்கள் படைப்பாற்றலை ஆராயக்கூடிய உள்ளடக்க சூழலை அனுமதிக்கும் அதே வேளையில் பொறுப்பான நடைமுறைகளைப் பயிற்சி செய்ய ஊக்குவிக்கிறது. புத்தாக்கம் மற்றும் சமூக விழுமியங்களுக்கு மதிப்பளிக்கும் சூழலை உருவாக்குவதற்கான TikTok இன் உறுதிப்பாட்டை இந்த வளர்ச்சி பிரதிபலிக்கிறது.

TikTok இன் சமூகம் சார்ந்த கருத்தாக்கத்தின் மையமானது படைப்பாற்றல் எல்லைகளுக்குள் செழித்து வளர்கிறது. இந்த வழிகாட்டுதல்களின் தொகுப்பு, கலாசார உணர்திறன்கள், நெறிமுறைகள் மற்றும் சமூக விதிமுறைகளை மதிக்கும் போது, மனித வெளிப்பாட்டின் பல்வேறு அம்சங்களை ஆராய பாவனையாளர்களை ஊக்குவிக்கிறது. இந்த வரம்புகளைக் கடைப்பிடிப்பதன் மூலம், பாவனையாளர்கள் தங்களின் தனித்துவமான தூரநோக்கு பார்வைகள் மற்றும் மாறுபட்ட TikTok சமூகத்துடன் பொருந்தக்கூடிய உள்ளடக்கத்தை உருவாக்க முடியும்.

### கல்வி மற்றும் விழிப்புணர்வு: பொறுப்பான படைப்பாற்றலுக்கான ஆதாரங்களைப் பயன்படுத்துதல்

படைப்பாற்றலைக் கூர்மைப்படுத்துவதில் பாவனையாளர் கல்வியின் முக்கியத்துவத்தை TikTok அங்கீகரிக்கிறது. TikTok இயங்குதளம் பாவனையாளர்கள் சமூக வழிகாட்டுதல்களை முழுமையாகப் புரிந்து கொள்ளவும் ஏற்றுக் கொள்ளவும் பல ஆதாரங்களை வழங்குகிறது. இந்தக் கல்வி முன்முயற்சிகள் மூலம், TikTok அதன் சமூகத்தை பொறுப்பான உள்ளடக்க உருவாக்கத்திற்கு வழிவகுத்து, ஆக்கபூர்வமான பயணத்தை மேலும் அர்த்தமுள்ளதாக மாற்றுகிறது.

இணக்கம் மற்றும் மனித தலையீட்டைக் கண்காணிக்க மேம்பட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் போது பாவனையாளர் அனுபவத்தை உறுதி செய்வதற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. இது வழிகாட்டுதல்களை மீறும் உள்ளடக்கத்தை அடையாளம் கண்டு நடவடிக்கை எடுக்க உதவுகிறது, அதே நேரத்தில் ஆக்கபூர்வமான வெளிப்பாட்டைத் தடுக்கக்கூடிய போலியான விடயங்களைக் குறைக்கிறது.

### பொறுப்பான படைப்பாற்றலின் தாக்கம்: இணைய கலாசாரத்தை வடிவமைத்தல்

TikTok இன் சமூக வழிகாட்டுதல்கள் விதிகளை விட அதிகம். புவியியல் எல்லைகளில் மக்களை ஊக்குவிக்கும், மகிழ்விக்கும் மற்றும் இணைக்கும் உள்ளடக்கத்திற்கு அவை பாவனையாளர்களுக்கு வழிகாட்டுகின்றன. இந்த சமூக வழிகாட்டுதல்களின் தொகுப்பு, பொறுப்பான படைப்பாற்றலின் எதிர்மறையான போக்குகளைக் குறைத்து, பாவனையாளர்களுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கிறது.

### முடிவு: வரம்புகளை மதிக்கும் போது படைப்பாற்றலை கட்டவிழ்த்து விடுதல்

படைப்பாற்றலுக்கு எல்லையே இல்லாத யுகத்தில், TikTok இன் சமூக வழிகாட்டுதல்கள் உறுதியாக உள்ளதுடன், பொறுப்பான, மரியாதைக்குரிய மற்றும் துடிப்பான உள்ளடக்கத்தை உருவாக்குவதற்கான வழியை விளக்குங்கள். இந்த தொடர் வழிகாட்டுதல்கள் மூலம், படைப்பாற்றல் மற்றும் பொறுப்பான வடிவமைப்பாளர்கள் கற்பனை சக்தியுடன் பிறக்கிறார்கள். TikTok இன் அர்ப்பணிப்பு உலகெங்கிலும் உள்ள பாவனையாளர்கள் தங்கள் தனித்துவமான வெளிப்பாட்டை பாதுகாப்பான, உண்மையான மற்றும் ஆன்லைனில் வழங்குவதற்கான வாய்ப்பை வழங்குகிறது.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 09ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 09

**குறள் தரும் சிந்தனை**



பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்

*உலக நடைமுறைகள், பண்பாளர்களைச் சார்ந்து இயங்க வேண்டும். இல்லையேல் அந்த நடைமுறைகள் நாசமாகிவிடும்.*

# பொருளாதார முன்னேற்றத்தில் நம்பிக்கை தரும் நகர்வுகள்

கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள்ளாகி இருந்த நாட்டை முழுமையாக மீட்டெடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி, ஒத்துழைப்புக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதன் நிமித்தம் முன்னெடுக்கப்பட்ட ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்கள் மற்றும் சந்திப்புக்களின் அடிப்படையில் இலங்கைக்கு உதவி, ஒத்துழைப்புக்களை நல்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்தது. அதனை அடிப்படையாகக் கொண்டு கடந்த மார்ச் (2023) மாதம் இந்நிதியத்துடன் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டது.

அந்த உடன்படிக்கையின் அடிப்படையில் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்க இணக்கம் தெரிவித்துள்ள சர்வதேச நாணய நிதியம், அதன் முதற்தொகுதி நிதியுதவியாக 333 மில்லியன் டொலர்களை கடந்த மார்ச் மாதமே வழங்கியது.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி கட்டம் கட்டமாக மீட்சி பெற்று வந்த இந்நாட்டுக்கு இந்நிதியத்தின் இந்த இணக்கப்பாடும் கடனுதவியும் பாரிய பக்கபலமாக அமைந்துள்ளன.

அத்தோடு உலகின் பல நாடுகளும் சர்வதேச நிதி நிறுவனங்களும் இலங்கைக்கு உதவி ஒத்துழைப்புக்களை வழங்க முன்வரவும் சர்வதேச நாணய நிதியத்தினுடனான இந்த உடன்பாடு உதவியுள்ளதோடு நாடு பொருளாதார ரீதியில் மறுமலர்ச்சிப் பாதையில் பயணிக்கவும் வழிவகுத்துள்ளது.

பொருளாதார ரீதியில் நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. அந்த வகையில் சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்டுள்ள வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் குறித்து மீளாய்வு செய்வதற்காக அந்நிதியத்தின் சிரேஷ்ட தலைமை நிர்வாக அதிகாரி பீட்டர் ப்ரூயர் தலைமையிலான குழுவினர் கடந்த 14 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். அவர்கள் நாளைமறுதினம் 27 ஆம் திகதி வரையும் மீளாய்வுக் கூட்டங்களை முன்னெடுக்க உள்ளனர். ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி என்பவற்றின் உயரதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் இக்கூட்டங்கள் இடம் பெற்று வருகின்றன.

அரச வருமானங்களை அதிகரிப்பது குறித்து இந்தக் கூட்டங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியும் பாதுகாப்பு ஆலோசகருமான சாகல ரட்நாயக்கா, 'மக்கள் மீது மேலும் பொருளாதார சுமையை சுமத்தாது அரச வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது' என்றுள்ளார்.

இது மக்களால் பெரிதும் வரவேற்கப்படக்கூடிய நடவடிக்கையாகும். பொருளாதார நெருக்கடியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்று நம்பிக்கை அளிக்கும் வகையில் பொருளாதார மறுமலர்ச்சி பாதையில் நாடு பிரவேசித்துள்ளது. ஆனாலும் பொருளாதார நெருக்கடிக் காலத்தில் மக்கள் எதிர்கொண்ட தாக்கங்களும் அழுத்தங்களும் இன்னும் முழுமையாக நீங்கிவிடவில்லை. இந்நிலையில்தான் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானி சாகல ரட்நாயக்கா இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

அதேநேரம் சர்வதேச நாணய நிதியத்துடன் எட்டப்பட்டுள்ள இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. பொருளாதார மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களின் பயனாக பணவீக்கம் ஒற்றை இலக்கத்திற்கு வீழ்ச்சி அடைந்துள்ளது. வெளிநாட்டுக் கடன்களை மீளச்செலுத்தும் நிலைக்கு நாடு முன்னேற்றமடைந்துள்ளது. அதன் பயனாக பங்களாதேசத்திடம் பெறப்பட்டிருந்த 200 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கடன் மூன்று கட்டங்களில் மீளச் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளது. தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வுக் கூட்டங்கள் வெற்றிகரமாக எதிர்கொள்ளப்பட்டுள்ளன. மீளாய்வு தொடர்பான பேச்சுவார்த்தைகளும் கலந்துரையாடல்களும் சாதகமான முறையில் அமைந்துள்ளன. இந்நிலையில் இம்மீளாய்வு கூட்டங்கள் நாளைமறுதினம் 27 ஆம் திகதி நிறைவடைய இருக்கிறது. அதனைத் தொடர்ந்து இந்நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்ட கடன் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட இருக்கின்றது.

இதன் ஊடாக இந்நிதியத்தின் இரண்டாம் கட்டக் கடன் தொகை கிடைக்கப் பெறுவதோடு இந்நாடு பெற்றுக்கொள்ளும் பொருளாதார ரீதியிலான அனுகூலங்கள் மேலும் அதிகரிக்கும். இது மக்களுக்கான பிரதிபலன்களையும் நிவாரணங்களையும் மேலும் அதிகரிக்க வழிவகுக்கும். பொருளாதார நெருக்கடி காலத்தில் முகம்கொடுத்த நெருக்கடிகள், அசௌகரியங்கள் முழுமையாக நீங்க வேண்டும். அதுதான் மக்களின் பிரதான எதிர்பார்ப்பாக உள்ளது. அவர்களது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி ஒத்துழைப்புக்கள் நிச்சயம் பக்கபலமாகும். அத்தோடு பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்பவும் இது பாரிய ஒத்துழைப்பாக இருக்கும்.

ஆகவே நாட்டைக் கட்டியெழுப்பவென முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். அது கட்சி அரசியல் நலன்களுக்கு அப்பால் பொருளாதார ரீதியில் நாட்டை கட்டியெழுப்புவதற்கான பங்களிப்பாக இருக்க வேண்டும். அது மக்கள் நெருக்கடிகளை எதிர்கொள்ளாத வாழ்வுக்கு வழிவகுக்கக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

# பிள்ளைகளுக்கு பரிசில்கள் வழங்கி வெற்றிகளை ஈட்டச் செய்வது பெற்றோர் இழைக்கும் தவறு!

பரிசில்கள் வழங்குவதன் மூலம், பிள்ளைகளுக்கு வேண்டிய விடயங்களை அவர்களைக் கொண்டு செய்விப்பது தவறாகும். இவ்வாறான பழக்கங்களுக்கு அடிமையான பிள்ளைகளின் முழு எதிர்காலமும் பாதிக்கப்பட்ட பல உதாரணங்கள் உள்ளன.

பரிசில்கள் கிடைக்காத எந்தவொரு செயலையும் செய்வதற்கு சில மாணவர்கள் முன்வருவதில்லை. பெற்றோரின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாமல் போன சில பிள்ளைகள் இறுதியில் பரிசில்களும் கிடைக்காமல் இக்கட்டான நிலையை அடைகின்றனர். உதாரணமாக, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தால் பரிசில்களை வாங்கித்தருவதாகக் கூறி ஆசை காட்டும் பெற்றோர் மத்தியில், சித்தியடையாமல் போகும் பிள்ளைகளின் நிலைமை என்ன? பிஞ்சு நெஞ்சில் தவறை விதைக்கும் பெற்றோரின் செயல்களால் பிள்ளைகள் உளத்தாக்கங்களுக்கு ஆளாகின்றனர்.



பிள்ளைகளுக்கு 'பரிசில்களே வழங்கக் கூடாது' என்பது இதன் பொருள் அல்ல. பிள்ளைகள் வெற்றிகளைப் பெறும் போது, அவர்களை இலக்கை அடைய வைப்பதற்காக இடையிடையே பரிசில்கள் வழங்குவது தவறில்லை. எனினும் தொடர்ந்து எல்லாவற்றிற்கும் பரிசில்கள் வழங்குவது பொருத்தமான விடயமும் அல்ல. சிலவேளை படிப்படியாக பிரிசில்களை அதிகரிக்க வேண்டி ஏற்படலாம். கடைசியில் இளைஞரானவுடன் அவர் கேட்கின்ற எல்லாவற்றையும் கொடுக்க வேண்டிய தேவை ஏற்படும். பிள்ளையால் அடைய முடியாத இலக்குகளுக்காக பரிசில்கள் வழங்குவேன் எனக் கூறுவது தவறு. இது பொருத்தமற்ற செயலாகும். இறுதியில் அது பிள்ளையின் எதிர்காலத்தைப் பாதிப்பதாக அமையும்.

படிக்கின்ற பிள்ளைகளுக்கு பொருட்களை பரிசாக வழங்குவதற்குப் பதிலாக வாழ்த்துதல், ஊக்குவித்தல், அன்பு காட்டுதல் போன்றவை பெறுமதிமிக்க பரிசில்களாகும். இவற்றின் மூலம் நல்ல பயன்களைப் பெற்றுக் கொள்ளலாம். நல்ல வேலைகளைச் செய்யும் போது பரிசில் வழங்குவதைவிட அதனைப் பாராட்டுதல், வாழ்த்துதல் போன்றவை மேலும் நல்ல வேலைகளைச் செய்ய ஊக்குவிக்கும்.

எனினும் இங்கு ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய ஒரு முக்கிய விடயம் உண்டு. மற்றப்பிள்ளைகளுடன் ஒப்பிட்டு, மற்றவர்களுக்கு மனத்தாக்கம் ஏற்படக்கூடிய வகையில், பாராட்டுதலோ, பரிசில்கள் வழங்குவதோ கூடாது. அவ்வாறான செயல்கள் மற்றப் பிள்ளைகளிடம் இருக்கும் ஆற்றலை மழுங்கடிக்கச் செய்யும்.

பரிசில்களைப் போன்றே அடிக்கடி தண்டனை வழங்கக்கூடாது. மிகச் சிறிய வயதிலே உடல் ரீதியான தண்டனைகள் வழங்குவது பொருத்தமானதல்ல. பல பெற்றோர்கள் பிள்ளைகளது தவறுகளைத் தடுப்பதற்காக பிள்ளைகளால் தாங்க முடியாதளவு தண்டனைகளை வழங்குவர். குறிப்பாக அதிகாரக் குழந்தை வளர்ப்பைக் கடைப்பிடிக்கும் பெற்றோர்கள் இவ்வாறு நடந்துகொள்வார்கள். சிறிய குற்றத்திற்கும் பாரிய தண்டனைகளை வழங்கிவிடுவார்கள்.

இதனால் குழந்தைகள் எதிர்ப்பைக் காட்டுபவர்களாக மாறிவிடுவதுடன், குழப்படி, கட்டுக்கடங்காமல் போதல் என்ற நிலைக்குள்ளாகுவர். மேலும், சினம், ஆக்ரோஷம், ஒதுங்கி வாழுதல் போன்ற விளைவுகள் ஏற்படும். இவ்வயதுப் பிள்ளைகள் பிழைகள் செய்வது தெரிந்து கொண்டால், சில பிள்ளைகள் தமது அம்மா, அப்பா, தம்பி, தங்கை போன்றவர்களைக் கூட அடிப்பார்கள். விளையாட்டுப் பொருட்களை உடைப்பார்கள். பால் போத்தலை வீசி எறிவார்கள். செய்ய வேண்டாம். எனக் கூறும் விடயங்களையே செய்வார்கள்.

குழந்தையின் வளர்ப்பில் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் விளக்கம் பெறவேண்டிய மிக முக்கியமான அம்சம்தான், ஒரு குழந்தையின் வளர்ச்சிப் பருவங்கள் பற்றி அறிந்து கொள்வதுடன், அதில் இடம்பெறும் விருத்திகள் தொடர்பாகவும் விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

அவ்வாறில்லாவிட்டால், முறையற்ற நடவடிக்கைகளை குழந்தை வளர்ப்பில் அறியாமல் கடைப்பிடித்து, பிறழ்வான, சமூகத்திற்கு உதவாத, ஆரோக்கியமற்ற குழந்தைகளை விளைவாகப் பெறவேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை ஏற்படுவதனை தவிர்க்க முடியாது போய்விடும். அந்தவகையில், ஒரு பிள்ளையின் பிறப்பிலிருந்து கட்டிளமைப்பருவம் வரை இடம்பெறும் மாற்றங்களையும் வித்தியாசங்களையும் அறிந்து கொள்வதானது, அப்பிள்ளையை முறையாக வளர்ப்பதற்கு உந்துதலளிக்கின்றது. விருத்தியைப் பொறுத்தவரையில் ஒரு பிள்ளை உளபாலியல் கட்டங்களைக் கடந்து செல்ல நேரிடுவதால், இக்கட்டங்களிலே தண்டனைகளால் கட்டுப்படுத்தாது, சுதந்திரமாக வளர விடுவது இப்பிள்ளையின் எதிர்காலத்திற்கு நன்மையளிக்கிறது என்றால் அது மறுப்பதற்கில்லை.

## சிறார்களுக்குத் தண்டனை வழங்குவதும் ஆபத்தான செயல்!



வளர்ப்பு செயல்பாட்டில் தண்டனை என்பது மிக முக்கியமான கூறு அல்ல, இதன் பொருள் குழந்தைகளில் அவர்களின் நடத்தையின் தவறான தன்மை, குற்ற உணர்வு, அவமானம் மற்றும் வருத்தம் பற்றிய புரிதலைத் தூண்டுவதாகும். கல்வியின் அளவை சரியாகப் பயன்படுத்தினால் மட்டுமே இந்த இலக்கு அடையப்படுகிறது. எனவே, ஒரு கல்வி நிறுவனத்தில் ஒரு குழந்தையின் தண்டனையைப் பயன்படுத்துவதற்கு முன், கல்வியாளர் கண்டிப்பாக: நிலைமையை முழுமையாகப் புரிந்து கொள்ளுங்கள். குழந்தை ஏன் அதைச் செய்தது (யாராவது அவரை வற்புறுத்தியிருக்கலாம் அல்லது கட்டாயப்படுத்தியிருக்கலாம்), அவர் என்ன நோக்கங்களால் வழிநடத்தப்பட்டார் (தன்னைத் தற்காத்துக் கொண்டார்) போன்றவை. இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப் பொறுத்து, குற்றத்திற்கான பயனுள்ள மற்றும் பொருத்தமான தண்டனையைத் தேர்ந்தெடுப்பது அவசியம்;.

எனவே, பிள்ளை வளர்ப்பானது பெற்றோர்களால் மேற்போன்ற தவறான அணுகுமுறைகள் களையப்பட்டு, முறையாகக் கைக்கொள்ளப்படும் போதுதான் அது சமூகத்தில் சிறந்த பிரஜையாக உருவாகி அதன் எதிர்பார்ப்புக்களை ஈடுசெய்வதுடன், சமூகத்தில் ஆரோக்கியமான பரம்பரை ஒன்றினைக் கட்டியெழுப்புவதற்கான தொடர்ந்தேர்ச்சியான செயன்முறையில் அதுவும் ஒரு பங்காளியாக தான் தனது வளர்ப்பில் பெற்றோர் மூலமாகப் பெற்ற அறிவையும், அனுபவத்தையும் பயன்படுத்தும். இதனைத் தெளிவாக உணர்ந்து பெற்றோர்கள் தனது பிள்ளைக்கு காத்திரமான வழிகாட்டல்கள் மற்றும் அணுகுமுறைகள் மூலமாக வளர்ப்பதற்கான நடவடிக்கையில் கரிசனை செலுத்துதல் வேண்டும்.

தாய் மற்றும் தந்தை! உங்கள் குழந்தையின் கதைகளில் மிகுந்த கவனத்துடன் இருங்கள், அவருடைய உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் உங்களுக்கு தெரிவிக்க அவர் எடுக்கும் முயற்சிகளை புறக்கணிக்காதீர்கள்! தண்டனைகள் கற்பனையாக கூட மாறட்டும், ஆனால் உணர்ச்சி அனுபவங்கள் உண்மையானவை! குழந்தையுடன் பேசுங்கள், சிக்கல்களின் சிக்கலை பின்னர் அவிழ்ப்பதை விட மொட்டில் உள்ள சிக்கலை அடையாளம் காண்பது நல்லது.

**இந்துஷா சிவராசா**
**கல்வி, பிள்ளைநலத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்**

# கொழும்பு துறைமுக நகரத்தின் ஐக்கிய அரபு இராச்சிய ஊக்குவிப்பு நிகழ்வில் உரையாற்றும் டேவிட் கெமரூன்

கொழும்பு துறைமுக நகரம் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற முதலீட்டு வாய்ப்புக்கள் மற்றும் ஊக்கச் சலுகைகள் குறித்து அறிவூட்டுவதற்காக, ஐக்கிய அரபு இராச்சியத்தில் ஊக்குவிப்பு நிகழ்வொன்றை ஆரம்பிக்கவுள்ளது. இந்த நிகழ்வு முக்கிய உலகளாவிய சந்தைப்படுத்தல் பிரசாரத்தின் ஆரம்பமாக அமைந்துள்ளதுடன், துறைமுக நகரத்தில் கிடைக்கும் பல்வேறு முதலீட்டு வாய்ப்புகளை ஆராய உலகம் முழுவதிலுமிருந்து முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

ஐக்கிய அரபு இராச்சியம், இந்திய பசிபிக் பிராந்தியத்திற்கு இடையிலான உறவுகளை வலுப்படுத்துதல் மற்றும் இந்த புதிய போக்கு அதிகரிக்கும் வேகத்தின் பின்னணியில் இலங்கையின் வகிபாகம் குறித்து இடம்பெறவுள்ள பிரத்தியேகமான அமர்வில் ஐக்கிய இராச்சியத்தின் முன்னாள் பிரதமர் டேவிட் கெமரூன் உரையாற்றவுள்ளார்.

இந்தியபசிபிக் பிராந்தியம் உட்பட பல கூட்டாளர்களுடன் ஒரே நேரத்தில் நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய சர்வதேச செயல்பாட்டாளராக ஐக்கிய அரபு இராச்சியத்தின் வகிபாகத்தை இந்த கலந்துரையாடல் வெளிப்படுத்தும். 2040 ஆம் ஆண்டளவில் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 50 சதவீதத்திற்கும் அதிகமாக ஆசியாவே பிரதிநிதித்துவப்படுத்தும் என எதிர்பார்க்கப்படுவதுடன், 21 ஆம் நூற்றாண்டின் புதிய பொருளாதார உலகளாவிய வலுமையமாக ஆசியா வேகமாக வளர்ச்சி கண்டு வருகிறது.



இதன் பின்னணியில் ஐக்கிய அரபு இராச்சியமானது இந்தியபசிபிக் பிராந்தியத்துடனான தனது தொடர்புகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன், இலங்கை அதன் வர்த்தக மற்றும் முதலீட்டு சலுகைகளுடன், குறிப்பாக செயல்படவிருக்கும் பல பில்லியன் டொலர் மதிப்பு மிக்க கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் இந்த கூட்டாண்மையில் முக்கிய பங்கை வகிக்கும்.

கொழும்பு துறைமுக நகரத்தின் ஐக்கிய அரபு இராச்சிய ஊக்குவிப்பு நிகழ்வு, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு (CPCEC) அண்மையில் அதன் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த வணிகங்களுக்கான (BSI) வழிகாட்டுதல்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்று குறிப்பிடத்தக்க சாதனை இலக்கினை எட்டியுள்ளது.

உலகளாவிய ரீதியில் போட்டியிடும் திறன் வாய்ந்த விசேட பொருளாதார வலயமாக கொழும்பு துறைமுக நகரத்தை மாற்றுவதற்கான அர்ப்பணிப்பினை இது அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. கொழும்பு துறைமுக நகரத்தின் மூலோபாய அமைவிடம் அதன் மதிப்புமிக்க சொத்துக்களில் ஒன்றாகும். 'தெற்காசியாவிற்கான நுழைவாயில்' என நிலைநிறுத்தப்பட்டுள்ள இந்நகரம், பிராந்தியம் முழுவதும் வர்த்தகம், வாணிபம் மற்றும் சுற்றுலா ஆகியவற்றுக்கான முக்கிய மையமாக செயல்பட தயாராக உள்ளது.

# மட்டுநகரில் மூன்று தினங்கள் நடைபெற்ற கிழக்கின் மாபெரும் ஓவியத் திருவிழா

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கிழக்குப் பல்லைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகமும் இணைந்து கிழக்கின் ஓவியத் திருவிழாவை நடத்தின. இந்த ஓவியத்திருவிழா மூன்று தினங்கள் நடைபெற்று நேற்று முன்தினம் சனிக்கிழமை நிறைவடைந்தது.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் இந்த ஓவியத் திருவிழா நடைபெற்றது. கடந்த 21 ஆம் திகதி ஆரம்ப நாள் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட கலாசார இணைப்பாளர் மவர்ச்செல்வன் ஓவியத் திருவிழாவை ஆரம்பித்து வைத்தார். இதில் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் பேராசிரியர் பாரதி கெனடி, கட்புல கலைத்துறைத் தலைவர் பிரகாஷ், கலாநிதி சு.சீவரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் இறுதி நாள் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட செயலக உதவி மாவட்ட செயலாளர் நவேஸ்வரன் கலந்து கொண்டார்.


இந்த ஓவியத் திருவிழாவை மூன்று தினங்களில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவடங்களிலுள்ள பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட சுமார் பத்தாயிரம் பேர் பார்வையிட்டுள்ளனர்.



கிழக்குப் பல்லைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் இங்கு வைக்கப்பட்டிருந்த ஓவியங்களை வரைந்துள்ளனர். இந்த ஓவியங்களில் சிலவற்றை பணம் செலுத்தி சிலர் வாங்கியும் சென்றுள்ளனர். மட்டக்களப்பு மாவட்ட வரலாற்றில் திறந்தவெளியில் ஓவியத் திருவிழா நடைபெற்றமை இதுவே முதற் தடவையென மட்டக்களப்பு மாவட்ட கலாசார இணைப்பாளர் மவர்ச்செல்வன் தெரிவித்தார்.

இறுதிநாளிலும் பெருமளவிலானோர் இந்த ஓவியத் திருவிழாவை மிகவும் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

**எம்.எஸ்.எம்.நூர்தீன்**
**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**



# சுவாமி விவேகானந்தர் எல்லோரையும் அரவணைத்து செல்லக்கூடியவர்

## மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஸ்ணமிஷன் முகாமையாளர்

ஹட்டன் விசேட நிருபர்

சுவாமி விவேகானந்தர் எல்லா மக்களையும் அரவணைத்து செல்லக்கூடிய ஒரு அன்பான நெறியினை பரப்பினார் என மட்டக்களப்பு ஸ்ரீ ராமகிருஸ்ணமிஷன் முகாமையாளர் நீலமாதவானந்த மகாராஜ் தெரிவித்தார்.

நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கொட்டகலை டெலிகிளையார் பாடசாலையில் ஸ்தாபிக்கப்பட்ட சுவாமி விவேகானந்தரின் சிலை அங்குரார்ப்பண வைபவம் பாடசாலையின் அதிபர் எஸ். அலெக்சாந்தர் தலைமையில் நேற்று (24) அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆலயத்தில் நடைபெற்ற பூஜை வழிபாடுகளை தொடர்ந்து அதிதிகள் மேள தாள வாத்தியங்கள் இசை முழங்க அழைத்து வரப்பட்டு அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது. அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; எந்த ஒரு மதத்திலும் இன்னொரு மதத்தை அழித்து விட்டு முன்னேற முடியும் என்ற கருத்து இருக்கக்கூடாது. ஒவ்வொருவருக்கும் அவர்களின் மதம் பெரியது. குறிப்பாக அவர் இந்து மதத்தினை சொல்லுகின்ற போது மக்கள் தங்களுடைய உணர்வினாலே, சிந்தனையினாலே எல்லாவற்றையும் கடவுளுக்காக செய்யக்கூடியவர்கள்.

இந்து மதத்தின் தலையாய சிறப்பு, நாம் எல்லாவற்றையும் கடவுளுக்காக படைப்பது புதிய உடுப்பு வாங்கினால் கடவுள், புதிய பாத்திரம் வாங்கினால் கடவுள் எல்லாவற்றையும் கடவுளுக்காக படைப்பது.

நமது மதம் எங்கே ஆரம்பிக்கின்றது என்றால் நம்முடைய சமயலறையிலேயே ஆரம்பிக்கின்றது, எல்லா இடத்திலும் அதனுடைய பயிற்சி இருக்கின்றது. அதனால் அதனை தர்மம் என்றார்கள்.

சுவாமி விவேகானந்தர் கூறும் போது; இந்து மதத்தவன் தன்னுயிரை மதத்திற்காக விடுவானே தவிர மற்றவர்களை துன்பப்படுத்த மாட்டான். யோசித்து பாருங்கள் நம்முடைய கோயில்களில் எல்லோரும் நன்றாக இருக்கட்டும்,

எல்லோரும் நோய் நொடியின்றி வாழட்டும் ஒவ்வொரு பிரார்த்தனையிலும் ஒவ்வொரு தோத்திரத்திலும் அமைந்துள்ளன.

ஆகவே இந்து மதம் ஒருத்தருக்கு மாத்திரம் சொந்தமானதன்று உலகம் தழுவியது. வாழ்வியல் வழிமுறைகளை சொல்கிறது. வலிமையோடு வாழுங்கள்,

சிந்தனைகளை விரிவாக்கம் செய்து ஒரு வட்டத்துக்குள் இருந்து விடுபட்டு பரந்து வாழ வேண்டும் அதனை தான் சுவாமி விவேகானந்தரின் போதனைகளில் அமைந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.



# பஸ் வண்டியுடன் ஆட்டோ நேருக்கு நேர் மோதி விபத்து

## இருவர் ஸ்தலத்திலேயே பலி; பெலிகமுவையில் சம்பவம்

தம்புள்ள தினகரன் நிருபர்



யாழ்ப்பாணப் பிரதேசத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ் வண்டியொன்றுடன் ஆட்டோவொன்று நேருக்கு நேர் மோதியதால் ஏற்பட்ட கோர விபத்தில் படுகாயமடைந்த ஐவரில் இருவர் ஸ்தலத்திலேயே பலியானதுடன் மேலும் மூவர் கலேவெல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து தம்புள்ள டென்ஸில் கொப்பேகடுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக கலேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

இச் சம்பவம் தம்புள்ள குருநாகல் பிரதான ( ஏ6 ) வீதியில் கலேவெல பொலிஸ் பிரிவிலுள்ள பெலிகமுவ என்ற இடத்தில் நேற்று (24) அதிகாலை 6.00 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

ஒரு பெண் அவரது கணவர் மற்றும் மகள் ஆகியோருடன் இவரது உறவினர் ஒருவருமாக ஐவர் ஓட்டோவில் பயணித்ததாகவும் விபத்தில் அப்பெண்ணின் கணவரும் ஓட்டோ சாரதியுமே பலியாகியிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ள டென்ஸில் கொப்பேகடுவ வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட மூவரின் நிலைமை கவலைக்கிடமாகக் காணப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் பின்னர் கண்டி வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப் பட்டதாக தம்புள்ள வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழிலிருந்து எம்பிலிப்பிட்டிய நோக்கிப் பயணித்த பஸ் வண்டியுடன் சிலாபம் ஆரச்சிக்கட்டுவ பிரதேசத்திலிருந்து தம்புள்ள நோக்கிப் பயணித்த ஆட்டோவுமே இவ்வாறு நேருக்கு நேர் மோதி விபத்திற்குள்ளாகியிருப்பதாக சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற் கொண்டு வரும் கலேவெல பொலிஸார் தெரிவித்தனர்.

# சவூதி அரேபியாவின் சுதந்திர தினத்தை சிறப்பாக கொண்டாட வாழ்த்துகிறேன்

சவூதி அரேபியாவின் சுதந்திர தினத்தை சிறப்பம்சங்களுடன் கொண்டாட வாழ்த்துவதாக ஜம்இய்யதுஷ் ஷபாப் நிறுவனப் பணிப்பாளர், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா உதவிப் பொதுச் செயலாளரும் சர்வமத அமைப்பின் உறுப்பினருமான தேசமான்ய கலாநிதி அஷ்ஷெய்க் எம்.எஸ்.எம். தாஸிம் தெரிவித்தார்.

சவூதி அரேபியாவின் பல்வேறு பகுதிகளை மன்னர் அப்துல் அஸீஸ் பின் அப்துர் ரஹ்மான் அல்பைஸர் அல் சவூத் சிறந்த முறையில் ஒருங்கிணைத்ததை நினைவு கூரும் விதமாக தேசிய தினம் கொண்டாடப்படுகிறது. மேன்மை தங்கிய இமாம் முஹம்மத் பின் சவூத் முதன் முதலில் சவூதி அரசை நிறுவியதை நினைவு கூரும் விதமாக நிறுவன நாள் கொண்டாடப்படுகிறது.

அரேபியக் குடா நாட்டில் சவூதி மிகப் பெரிய நாடாகும். இஸ்லாத்தின் பல்வேறு சிறப்புக்களைக் கொண்ட நாடு. புனித இரண்டு ஹரம் சரீப்களைக் கொண்ட கோடான கோடி மக்கள் புனித கஃபாவின் பக்கம் முன்னோக்கி வணக்க வழிபாடுகளை மேற்கொண்டு, ஹஜ்கடமைகளைஅங்கு சென்று நிறைவேற்ற வேண்டும்.

மாமனிதர் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் பிறந்த நாடு. அல்குர்ஆன் இறக்கியருளப்பட்ட இடம். இன்னும் சிறப்புக்களை அடுக்கிக் கொண்டே போகலாம். இவ்வேளையில் சவூதி அரேபியாவின் மன்னர் ஸல்மான் பின் அப்துல் அஸீஸ், பட்டத்து இளவரசர் முஹம்மது ஸல்மான், சவூதி மக்கள் மற்றும் இலங்கைக்கான சவூதி தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஃதானி உட்பட அனைவருக்கும் பிரார்த்தனைகளுடன் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சவூதி அரேபியா பாரிய பொருளாதார வளர்ச்சியை கண்டு வருகிறது. பட்டத்து இளவரசர் நாட்டை நவீன மயமாக்கும் திட்டத்தினை மிகச் சிறப்பாக செய்து வருகின்றார். இவையனைத்தும் பாராட்டுக்குரிய விடயமாகும்.எமது நாட்டில் கூட சவூதி அரசின் பாரிய வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை சிறப்பம்சமாகும் என்றும் அவர் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.



# பலாங்கொடையில் முக்கிய நிகழ்வுகள்

பலாங்கொடை தினகரன் நிருபர்

பலாங்கொடை ஐக்கிய கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டிலான நிகழ்வுகள் எதிர்வரும் அக்டோபர் மாதம் இரண்டாம் திகதியும் மூன்றாம் திகதியும் அபுசாலிபுர புதிய வீடு அமைப்பு திட்டத்தில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அன்றைய தினம் ஆயுர்வேத வைத்திய சேவை பாடசாலை மாணவர்களின் ஓவியப்போட்டி தையல் கண்காட்சி மற்றும் பிரதேச செயலக காரியாலயத்தின் ஏற்பாட்டில் பிறப்பு சான்றிதழ் அடையாள அட்டை சம்பந்தமான நடமாடும் சேவை உட்பட பல்வேறுபட்ட நிகழ்வுகள் இடம் பெற உள்ளதாக ஏற்பாட்டுக் குழுவின் சார்பில் ஏ.டி.எம். ரஷீம் தெரிவித்தார்.

கிராம அபிவிருத்தி வாரத்தை முன்னிட்டு இரு தினங்கள் நடைபெறும் இந்த நிகழ்வில் இப்பகுதி பொதுமக்கள் மற்றும் அதிதிகள் கலந்து சிறப்பிக்குமாறும் அதன் மூலம் பயனடையுமாறும் ஏற்பாட்டுக் குழுவினர் வேண்டியுள்ளனர்.

# இறக்குவான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணெய் இன்றி பொதுமக்கள் அவதி

பலாங்கொடை தினகரன் நிருபர்

இறக்குவான எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் மண்ணெண்ணெய் வரவழைப்பது இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் பகுதி பொதுமக்கள் மண்ணெண்ணெய் இன்றி பல அசௌகரியங்களுக்கு ஆளாகியுள்ளதாக இறக்குவான பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக குறைந்த வருமானம் பெறும் பொதுமக்களும் தோட்டப் பகுதி மக்களும் மற்றும் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபடும் பொதுமக்களும் சிறு கைத்தொழில்களில் ஈடுபடும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இறக்குவான நகரில் உள்ள ஒரேயொரு எரிபொருள் நிலையம் இதுவாகும். கடந்த ஒரு வருட காலமாக பிரதான எரிபொருள் நிலையத்திற்கு மண்ணெண்ணெய் வரவழைப்பது சம்பூரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதால் இந்த நிலைமை உருவாகியுள்ளதாக அவர்கள் சுட்டிக் காட்டினர். இது சம்பந்தமாக இறக்குவான எரிபொருள் நிலையத்தின் உரிமையாளரிடம் வினவிய போது, இப்பகுதியில் மண்ணெண்ணெய் பாவிப்பதில் பொதுமக்கள் அதிகளவு குறைந்துள்ளனர். இதன் காரணமாக எங்களது விற்பனையும் வீழ்ச்சி அடைந்துள்ளது என்றார்.

# ஐந்து வருடங்களாக மண் சரிவால் பாதிக்கப்பட்ட மக்கள்

## நீர், மின்சாரம் இன்றி அவதி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இறக்குவானைத் தேர்தல் தொகுதியின் ஒப்பநாயக்க இம்புல்தென்ன பிரதேசத்தில் மண்சரிவால் கடந்த ஐந்து வருடங்களாக குடியேற்றப்பட்ட மக்கள் நீர், மின்சாரம் உட்பட அடிப்படை வசதிகள் இன்றி பெரும் கஷ்டங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

2016 ஆம் ஆண்டு பிரதேசத்தில் இடம்பெற்ற கடும் மழை மற்றும் மண்சரிவு காரணமாக அக்கரெல்ல பொல்வத்தை ஹேன மற்றும் இன்னும் பல பிரதேசங்களில் மண்சரிவு காரணமாக அபாயகரமான விதத்தில் வாழ்ந்து வந்த 61 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இப்பிரதேசத்தில் குடியேற்றப்பட்டனர்.

எனினும், இன்று வரை தங்களின் வீடுகளுக்கான மின்சாரமோ நீர் வசதியோ வழங்கப்படவில்லை என இவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இந்நிலைமையால் தமது பாடசாலை செல்லும் பிள்ளைகள், வயோதிபர்கள் தமது கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள பெரும் அல்லல்படுகின்றனர் என பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்விடயமாக ஒப்பநாயக்க பிரதேச செயலகத்தின் அதிகாரிகளிடம் வினவிய போது, இம்மக்களது நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதாகவும் நிதித்தட்டுப்பாடு காரணமாகவே இப்பணிகளை நிவர்த்தி செய்ய முடியாது இருந்ததாகவும் தனியாக ட்ரான்ஸ்போமர் அமைத்து இப்பகுதிக்கான மின்சாரம் வழங்கப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்தனர்.

# நுவரெலியாவில் அங்கவீன அமைப்பின் பூர்த்தி விழா நிகழ்வு



நுவரெலியா மாநகர சபைக் குட்பட்ட அங்கவீனமுற்றவர்கள் அமைப்பின் ஏழாவது வருட பூர்த்தி விழா நுவரெலியா "சிண்டா" பாடசாலையில் (23) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் நுவரெலியா பிரதேச அபிவிருத்தி வங்கியின் முகாமையாளர் மற்றும் நுவரெலியா மாவட்ட சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தர் மற்றும் பொதுமக்கள், ஊடகத் துறையினர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கலை கலாசார நிகழ்வுகள் மற்றும் அங்கவீன மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வின் விசேட தேவையுடையவர்களின் நடனம் மற்றும் பாடல்கள் போன்றவை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ.ரமேஸ்)


EMPLOYEES' TRUST FUND BOARD
සේවා නියුක්තයන්ගේ භාර අරමුදල් මණ්ඩලය
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

க.பொ.த. உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள மாணவர்களுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிற் பயிற்சிப் பாடநெறியொன்றை தொடர்வதற்குத்

தேவையான நிதியுதவியை வழங்கும் நலன் திட்டம்-2023


தேசிய தொழில் தகைமை (NVQ) மட்டம் 3 மற்றும் 4 அங்கீகாரமுள்ள தெரிவுசெய்யப்பட்ட 54 பாடநெறிகளுக்கு

ரூ. 25,000/= பெறுமதியான புலமைப் பரிசில்

விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி 27 ஒக்.

ETF அங்கத்துவத்தைப் பெற்றுள்ள உங்கள் பிள்ளைக்கு

தொழில்வாய்ப்புக்கு நிதியுதவி எம்மிடமிருந்து



- அடிப்படைத் தகைமைகள்
- மேற்குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின்
- விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்.
- பாடநெறிக் கட்டணங்களைச் செலுத்துதல்
- தேர்ந்தெடுக்கப்பட்ட கற்கைநெறிகள் உட்பட

2022 உயர் தரப் பரீட்சைக்குத் தோற்றிய அனைவருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

தொலைபேசி இலக்கம் ▸ 0117747200 | 0112503917
0117747281 | 0117747282
(புலமைப் பரிசில் பிரிவு)

மின்னஞ்சல் முகவரி ▸ nipunathasaviya@etfb.lk

மேலதிக தகவல்களுக்கு :
www.etfb.lk இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

தலைவர்/பிரதம நிறைவேற்று அதிகாரி
ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை

# வடமராட்சி வடக்கில் தொழிற்பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ்






வடமராட்சி வடக்கில் NAITA வின் தொழிற்பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர், பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி, Naita மாவட்ட முகாமையாளர், undp திட்ட உத்தியோகத்தர்கள், பிரித்தானிய உயரஸ்தானிகரக அதிகாரிகள் , cecd நிறுவன உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 'நிபா' அச்சுறுத்தல்...

தொடர்பான விசேட நிபுணர்கள் மேற்படி வைரஸ் நாட்டுக்குள் பிரவேசிக்காமல் தடுப்பதற்கான செயற்றிட்டங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் அமைச்சர் தெரிவத்துள்ளார்.

எந்த வகையிலும் நாட்டிற்குள் மேற்படி வைரஸ் தொற்று நோயாளியொருவர் இனங்காணப்படுவாரானால் அது தொடர்பில் மேற்கொள்ளவேண்டியநடவடிக்கைகள் சம்பந்தமாக அவர்கள் முக்கிய பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் தெரிவிக்கையில், விமான பயணிகள் மூலம் மேற்படி வைரஸ் நாட்டுக்குள் ஊடுருவலாம்.

அவ்வாறு வைரஸ் தொற்றுள்ள ஒருவர் நாட்டுக்குள் பிரவேசிக்கலாம் என்ற எச்சரிக்கை நிலை காணப்படுவதாகவும் இது தொடர்பில் சுகாதார துறை விசேட கவனம் செலுத்தியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அதேபோன்று யாத்திரிகர்களாக வெ ளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கையர்கள் மூலம் அந்த வைரஸ், நாட்டுக்குள் பிரவேசிப்பதைத் தடுப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் தொடர்பிலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி...

வார்த்தையில் பங்கேற்க அவர் செல்கிறார். தற்போதைய உலகளாவிய அரசியல் மற்றும் பொருளாதார சவால்களுக்கு தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கான உயர் மட்ட பேச்சுவார்த்தையாக இது அமையவுள்ளது. இக்கருத்தரங்கின் முதலாம் நாள் அரச தலைவர்களின் பேச்சுவார்த்தை அமர்வின் ஜனாதிபதி ஆரம்ப உரையாற்றவுள்ளார். ஜனாதிபதி இந்த விஜயத்தின் போது ஜெர்மனியின் சான்செலர் ஒலாப் சோல்ஸ் மற்றும் ஏனைய அரசியல் மற்றும் வர்த்தக துறை சார்ந்த தலைவர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி பேச்சுவார்த்தைகளில் ஜெர்மனிய சான்செலர் ஒலாப் சோல்ஸ், ஐரோப்பிய கவுன்சிலின் தலைவர் சார்ள்ஸ் மைக்கல் மற்றும் பெல்ஜிய பிரதமர் அலெக்ஸான்டர் டி குரோ ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

## பங்களாதேஷிடம்...

பாரிய பொருளாதார நெருக்கடியை சந்தித்திருந்தது.இதையடுத்து, தமது அனைத்து வெளிநாட்டு கடன் செலுத்துகைகளையும் ஒத்திவைத்திருந்தது.

இந்நிலையில், இக்கடன் தொகையில் கடந்த ஒகஸ்ட் 17 ஆம் திகதி 50 மில்லியன் அமெரிக்க டொலரையும், கடந்த 02 ஆம் திகதி 100 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் இலங்கை திருப்பிச் செலுத்தியிருந்தது.

அத்துடன், இக்கடனின் இறுதி தவணையாக 50 மில்லியன் அமெரிக்க டொலரை கடந்த (21) இலங்கை செலுத்தியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார். இக்கடன் தொகைக்கு வட்டியாக 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் இலங்கை செலுத்தியுள்ளது.

அத்துடன் பங்களாதேஷிடமிருந்து பெற்றுக்கொண்ட 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன், தற்போது வட்டியுடன் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

முதலில் ஒப்புக்கொள்ளப்பட்ட திகதியை விட ஒன்றரை வருடங்கள் கடந்துள்ளபோதும், இக்கடன் செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முதலாம் தவணைக்கு...

நூல்களை பிரதேச மத்திய நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைத்தே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதற்கிணங்க ஹோமாகம பிடிபன பிரதேசத்தில் உள்ள பிரதான பாடநூல் களஞ்சிய சாலையிலிருந்து பிரதேச மத்திய நிலையங்களுக்கு பாடநூல்கள் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர்,

மட்டுப்படுத்தப்பட்ட அளவு மாணவர்களுக்கு மாத்திரமே பாடசாலை சீருடைகளை வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக குற்றச்சாட்டுகளும் பொய்ப் பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதனை முற்றாக நிராகரிக்கிறேன். இது உண்மைக்குப் புறம்பான தகவல். அடுத்த ஆண்டுக்கான பாடசாலை சீருடை மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான பகல் உணவு ஆகியவற்றை உரிய காலத்தில் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை, இந்த வருட இறுதிக்குள் தவறவிடப்பட்ட அனைத்து கல்வி நடவடிக்கைகளையும் இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான பௌதீக வளங்களை பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பாடசாலை புத்தகங்கள் அச்சடிப்பதற்கான விடயும் தொடர்பில் கருத்து தெரிவித்த அவர், குறைந்த செலவில் கடந்த வருடங்களுடன் ஒப்பிடும்போது குறித்த காலத்திற்கு முன்பதாகவே நூல்கள் அச்சிடும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன. இதன் மூலம் 4000 மில்லியன் அரசாங்கத்திற்கு மீதமாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உத்தேச 02 சட்ட...

மேற்படி இரண்டு சட்டமூலங்களும் மனித சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் சட்ட ஆதிபத்தியத்துக்கு பெரும் பாதிப்பாக அமைவதாகவும் அது நிறைவேற்றப்படக்கூடாதென்றும் அந்த சங்கம் கேட்டுள்ளது. சமூகத்தில் அழுத்தங்களைப் பிரயோகிக்கக்கூடிய மேற்படி இரண்டு சட்டமூலங்களுக்கும் எதிராக உச்ச நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல்செய்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அந்த சங்கத்தின் தலைவர், அந்த இரண்டு சட்டமூலங்களின் உள்ளடக்கங்களும் சட்டமாக கொண்டுவரப்படுமானால் நாட்டு மக்களின் உரிமைகள் முழுமையாக பாதிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். இவ்விரண்டு சட்டமூலங்களையும் சட்டங்களாக கொண்டு வருவதற்கு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டாமென்றும் அச்சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்

## மலேசியாவில் மூன்று...

தம்பதியருக்கு சொந்தமான வீடொன்றில் நேற்றிரவு (22) இந்த கொலைகள் இடம்பெற்றதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

குறித்த வீட்டில் வாடகை அடிப்படையில் தங்கியிருந்த தம்பதியின் 20 வயதுடைய மகனும், இரண்டு இலங்கையருமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

சுமார் 02 நாட்களுக்கு முன்னர் இவ்வீட்டுக்கு மேலும் இரு இலங்கையர் வந்திருந்ததாகவும், அவர்கள் இந்தக் கொலைகளை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் மலேசிய பொலிஸார் நடத்திய ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அயலவர்கள் வழங்கிய தகவலின்படி வீட்டை சோதனை செய்த பொலிஸார், மூவரின் சடலங்களையும் கண்டெடுத்துள்ளனர். தலைமறைவாகியுள்ள இரண்டு இலங்கையரின் புகைப்படங்களை பொலிஸார் ஊடகங்களுக்கு வெளியி ட்டுள்ளனர். மலேசிய பொலிஸார் சம்பவம் தொடர்பில் அந்நாட்டிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்துக்கு அறிவித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. கொலை செய்யப்பட்ட இலங்கையர் மற்றும் சந்தேக நபர்கள் தொடர்பில் எவ்வித தகவலும் தெரிவிக்கப்படவில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

படுகொலை செய்யப்பட்ட மூவரும் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் தலையில் பிளாஸ்டிக் பைகளால் கழுத்துவரை மூடிக்கட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மாலைதீவுக்கு...

இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனால், எதிர்வரும் ஜனவரி முதல் முட்டை உற்பத்தி அதிகரித்து முட்டை விலைகள் மேலும் குறைவடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். கண்டி கண்ணொருவ விலங்கு உற்பத்திப்பண்ணையில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அமைச்சர், தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு இணங்க இந்த வருடத்தின் ஆகஸ்ட் மாதத்திற்குள் முட்டை உற்பத்தியில் தன்னிறைவு காணமுடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளை, முட்டைகளை ஏற்றுமதி செய்வதற்காக சிங்கப்பூர், மலேசியா, கொரியா மற்றும் ஐக்கிய அரபு நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது.

நத்தார் பண்டிகைக் காலத்தில் முட்டைக்கான கேள்வி அதிகரித்த நிலையில் டிசம்பர் மாதம் வரை முட்டை இறக்குமதியை தொடர்ந்து மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதன்பின்னர் முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டிய தேவையிருக்காது.

நாட்டில் முட்டைக்கான பற்றாக்குறை காணப்படும் போதும் 1.5 மில்லியன் முட்டைகள் மாலைதீவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முட்டைக்கான கேள்வி வேறு நாடுகளுக்கு செல்வதை பாதுகாக்கும் வகையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் கோழி இறைச்சியின் விலை 200 ரூபாவால் குறைவடைந்துள்ளது. அடுத்த வருடத்தில் இந்த விலை மேலும் குறைவடையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## வளர்ந்து வரும்...

நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

முப்பது வருட யுத்தம் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் விளைவாக நாடு அரசியல் பொருளாதார ரீதியில் சரிவடைந்து கிடந்த நிலையில், தற்போது ஓரளவு முன்னேற்றம் கண்டு வரும்போது நாட்டுக்குள் மீண்டும் இனவாத மோதல்கள் அவசியமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் தற்போதைய நிலையை அறிவிக்கும் நோக்கில் சிவில் அமைப்புக்கள் கொழும்பில் (22) ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்.

சில அரசியல் குழுக்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் தங்களது அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் நோக்கில், பல்வேறு செயற்பாடுகளில் தலையீடு செய்து வருகின்றனர்.

செனல் 4 விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்திற்குள்ளும் சில தலையீடுகள் காணப்படுகின்றன. சில அரசியல் குழுக்கள் பல்வேறுபட்ட நிலைப்பாடுகளை முன்வைக்கின்றன. அது தொடர்பிலான சரியான விசாரணையை நடத்த அரசாங்கம் முன்வரவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதியின் தலையீட்டின் கீழ் அது குறித்து ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர்கள் தலைமையிலான குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு அது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும். அதேபோல், தெரிவுக்குழு வை நிறுவுமாறு ஆளும் தரப்பும் கோரிக்கை விடுத்திருந்தது. இக்குழுவில், விருப்பமானவர்கள் சுதந்திரமாக தங்களது கருத்துக்களை தெரிவிக்க முடியும். இருப்பினும் அந்த தகவல்களை சமூகமயப்படுத்தும் போது கவனமாக செயற்பட வேண்டியது அவசியம். இதுகுறித்த விசாரணைகள் அவசியமில்லை என்று எவரும் வலியுறுத்தவில்லை.

பாதுகாப்பு அமைச்சு அந்தக் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளது. இருந்தபோதும் எதிர்க்கட்சி போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நாட்டில் பாரிய அழிவினை ஏற்படுத்தியது. அதனால் அதனை மேற்கொண்டவர்களை கண்டறிய வேண்டியது அவசியம். அதற்காக சர்வதேச ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதும் தவறாகாது.

சில குழுக்கள் நாட்டுக்குள் அரசியல் பிரச்சினைகளை தோற்றுவிக்க முயற்சிக்கின்றன . குருந்தூர் மலை விகாரை மற்றும் திலீபனின் நினைவு தினம் அனுஷ்டிப்பு உள்ளிட்ட விடயங்களில் இது தெரிய வந்துள்ளது.

அதனால் அரசியல் நோக்கங்களுக்காக நாட்டை படுகுழியில் தள்ளிவிட முற்படாதீர்கள் என கேட்டுக்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார். இந்த ஊடக சந்திப்பில் சிவில் அமைப்புக்கள் மற்றும் தொழிற்சங்க ஒருங்கிணைப்பாளர் துசித பெரேரா, லக்வனிதா அமைப்பின் சட்ட ஆலோசகர் கௌசலி சமரதுங்க, சிவில் சங்கம் மற்றும் தொழிற்சங்க அமைப்பின் உறுப்பினர் சுப்பையா ஆனந்தகுமார் உள்ளிட்டவர்களும் கலந்து கொண்டனர்.

# வவுனியா ஏ9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் பலி

**வவுனியா விசேட நிருபர்**



வவுனியா, ஏ9 வீதி, பறண்நட்டகல் சந்தியில் இன்று (22.09) இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளதாக ஓமந்தைப் பொலிசார் தெரிவித்தனர்.

ஓமந்தையில் வெதுப்பம் நடத்தி வரும் சிவசேகரம் தினேசன் என்பவர் வவுனியாவில் இருந்து ஓமந்தைக்கு தனது மோட்டார் சைக்கிளில் செல்லும் போது, பறண்நட்டகல் சந்தியில் உள்ள பேருந்து தரிப்பிடத்தில் நிறுத்தியிருந்த பேரூந்தை முந்தி செல்ல முற்பட்ட போது எதிர் திசையில் இருந்து வந்த பட்டா ரக வாகனம் ஒன்று மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டது.

இதன் போது மோட்டார் சைக்கிளில் சென்ற சி தினேசன் சம்பவ இடத்திலேயே பலியானதுடன், அவரது சடலம் வவுனியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

குறித்த விபத்து தொடர்பான விசாரணைகளை ஓமந்தை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

# மீசாலை வடக்கில் ரயிலுடன் மோதுண்டு பெண் மரணம்

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை வடக்கு பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை ரயிலுடன் மோதுண்டு வயோதிப பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்ற புகையிரதத்துடன் காலை 4.15 மணியளவில் மீசாலைக்கும்புத்தூர்ச்சந்திக்கும் இடைப்பட்ட ரயில் பாதையில் வயோதிப பெண் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதில் மீசாலை வடக்கைச் சேர்ந்த 67வயதான கி.நாகேஸ்வரி என்ற வயோதிப பெண்ணே உயிரிழந்துள்ளார். மேற்படி மூதாட்டி தற்கொலை செய்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## சிற்றுண்டிச்சாலைகளை ...

எதிர்வரும் காலங்களில் நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் இயங்கும் சிற்றுண்டிச் சாலைகளில் பரிசோதனைகளை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள உபுல் ரோஹண, பாடசாலைகள் இயங்கும் சிற்றுண்டிச்சாலைகளை கடும் பரிசோதனைக்கு உட்படுத்துவது அவசியமாகும். ' பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளின் கொள்கைகள் தொடர்பில் உறுதியாக எழுத்து மூல ஆவணங்கள் இல்லை. இத்தகைய சிற்றுண்டிச்சாலைகளில் மாணவர்களுக்கு தரமற்ற உணவுகள் வழங்கப்படுகின்றன.இதனால் தேவையற்ற சிக்கல்கள் உருவாகியுள்ளன. அந்தவகையில் சிற்றுண்டிச்சாலைகளில் விற்பனை செய்ய வேண்டிய உணவுப்பொருட்கள் தொடர்பில் வழிகாட்டல் ஒன்று விநியோகிக்கப்பட்டுள்ளது. சுற்றுநிருபமாக அது வழங்கப்பட்டுள்ளதுடன் பாடசாலைகள் மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத உணவுப்பொருட்கள் அதனை விற்பனை செய்யும் முறைமைகள் தொடர்பில் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## இறக்குமதி...

நிதி வசதியை பெற்றுக் கொள்ளும் திட்டம், அரச வருமானத்தை அதிகரிப்பது மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தல் தொடர்பான நடவடிக்கைகள் குறித்து அறிஞர்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தும் மாநாடொன்றில் உரையாற்றும் போதே, இக்கருத்தை அவர் தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் அண்மையில் நடைபெற்ற இம்மாநாட்டில் ஜனாதிபதி செயலகம், இலங்கை மத்திய வங்கி, நிதி அமைச்சு என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் (அரச வருமானம்) எம். ஜே.குணசிறி, வட மத்திய மாகாண தலைமை செயலாளர் சந்திரசிறி பண்டார ஆகியோரும் மாநாட்டில் கலந்து கொண்டிருந்தனர்.

## சர்வதேச மாநாடுகளில்...

சிங்க கியூபாவின் ஹவானாவுக்கு பயணமானார்.

கியூபாவுக்கான விஜயத்தை நிறைவு செய்த பின்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் வருடாந்த அமர்வில் கலந்துகொள்வதற்காக கடந்த 17 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரை சென்றடைந்தார்.

## ஓய்வூதியத்துடனான...

அமைச்சரான பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பித்துள்ளார்.

பாராளுமன்றத்தின் புதிய நிகழ்ச்சிநிரலில் இந்த யோசனை உள்ளடக்கப்படுவதுடன் அடுத்து வரும் பாராளுமன்ற அமர்வின் போது, இந்த யோசனையை நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பில் கடந்த ஆகஸ்ட் 28 ஆம் திகதி அமைச்சரவைக்கு மகஜர் ஒன்றை சமர்ப்பித்துள்ளார். அதற்கு கடந்த செப்டெம்பர் 04 இல், கூடிய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசியலமைப்பின் 153 (2) சரத்துக்கு இணங்க கணக்காய்வாளர்களுக்கு அரசாங்கத்தின் கூட்டு நிதியத்திற்கு வழங்கப்படும் வகையில், மேற்படி ஓய்வூதிய கொடுப்பனவுடன் குறித்த கொடுப்பனவை வழங்குவதற்கு இந்த யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

## இலங்கையை...

சபையில் உறுப்பினராக பதவி வகித்திருந்தார். இவரது பெற்றோர் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறையை சேர்ந்தவர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆர்,எம் பார்க்ஸ்...

கடந்த ஆகஸ்ட் மாத இறுதியில் எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்த சீனாவின் சினோபெக் நிறுவனம், இரண்டு பிரதேசங்களில் தற்போது விநியோகத்தை முன்னெடுத்துள்ளது.

சினோபெக் தற்போது சகல வகையான எரிபொருளையும் தமது போட்டியாளர்களைவிட 03 ரூபா குறைவாக வழங்குகிறது.

ஆர்.எம்.பார்க்ஸ் நிறுவனத்துக்கும் உள்ளூர் சந்தையிலுள்ள விலையை விடவும் குறைந்த விலையில் எரிபொருளை வழங்க வாய்ப்பு வழங்கப்படுமெனவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## ரூ. 03 கோடி..

பிரிவினருடன் இணைந்து மேற்கொண்டதேடுதல்நடவடிக்கையிலே, தாழ்வுபாடு பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

இரண்டு பொதிகளில் சுற்றப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த போதை மாத்திரைகளின் தற்போதைய சந்தை மதிப்பு, 03 கோடி ரூபா என்பதுடன் போதை மாத்திரை கடத்தலுடன் தொடர்பு பட்டதாக தாராபுரம் பகுதியை சேர்ந்த 22 வயதான சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

## பொலிஸ் உத்தியோகத்தரென கூறி ...

விடுத்து, தனது சகா ஒருவருடன் காரில் சென்று மாணிக்கக் கல்லை பரிசோதித்துக் கொண்டிருந்தார்.

அப்போது, மோட்டார் சைக்கிளில் பொலிஸ் அதிகாரி போல் வேடமணிந்து வந்த மற்றுமொரு சந்தேக நபர், மாணிக்கக்கல் உரிமையாளரை அச்சுறுத்தி கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## பாண் விலையை...

இந்த வகையில் பாண் உற்பத்திக்கான மூலப் பொருட்களின் வரிகள் குறைக்கப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் விரைவில் எடுக்குமானால் 450 கிராம் பாணின் விலையை 100 ரூபா வரை குறைக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் மாவட்டத்தில்;

# விவசாய குடும்பங்களை வலுவூட்டும் வாழ்வாதாரத் திட்டம் முன்னெடுப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**



உலர் வலய விவசாயத் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களை கொண்ட குடும்பங்களை வலுவூட்டுவதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் திட்டம் குறித்து அரசாங்க அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தும் நிகழ்வு அண்மையில் அநுராதபுரம் மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

சுமார் 1 3 ஏக்கர் விவசாயக் காணிகள் உள்ள சுமார் 100 விவசாய குடும்பங்களை உள்ளூர் மட்டத்தில் உணவுப் பாதுகாப்பை வலுப்படுத்துவதே இந்த வேலைத் திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் கீழ், கிணறு வசதி உள்ள சுமார் 100 விவசாய குடும்பங்களுக்கு சூரிய ஒளி மின்சாரம் தயாரிக்க தேவையான உபகரணங்கள் பற்றிய விளக்கமும் இதன் ஊடாக வழங்கப்படவுள்ளதோடு இந்த திட்டம் ஜூலை 2023 முதல் ஜூன் 2024 வரை செயல்படுத்தபடவுள்ளது. அநுராதபுரம் மாவட்டத்தின் மூன்று பிராந்திய செயலகப் பிரிவுகளான மிஹிந்தலை, திறப்பனை மற்றும் மத்திய நுவர கம்பளாத்த ஆகிய பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னோடித் திட்டமாக இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் மீலாத் தின போட்டி நிகழ்வுகள்

**ருஸைக் பாரூக்**



நபி (ஸல்) அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கொழும்பு ஸாஹிரா கல்லூரி இஸ்லாமியச் சங்கம் ஒழுங்கு செய்துள்ள படசாலைக்கிடையிலான மீலாத் தினப் போட்டிகள் பேராசியர் எம். ட. ஏ. புர்கான் மண்டபத்தில் அதிபர் ரிஸ்வி மரிக்கார் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

போட்டியில் கிராத், கட்டுரை, கையெழுத்து, கஸீதா, விவாதம், சொற்பொழிவு மற்றும் பல போட்டிகள் நடைபெற்றன.

இப்போட்டி நிகழ்வில் தெற்கு, மேல், மத்திய மாகாணங்கள் மற்றும் பிற மாகாணங்களில் இருந்து 55 பாடசாலைகளைச் சேர்ந்த 1045 போட்டியாளர்கள் கலந்துகொண்டனர். மேலும் இந்தப் போட்டிகளை நடத்துவதற்குத் தேவையான ஏற்பாட்டையும் ஊக்குவிப்பையும் அளித்த கல்லூரி ஆளுநர் சபை மார்க விவகார குழுத் தலைவர் மௌலவி எம். ட. ஏ. ஆரிபுக்கு பாடசாலை அதிபர் நன்றி தெரிவித்தார்.

இந்த போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ்கள், வெற்றிக் கிண்ணங்கள் மற்றும் மதிப்புமிக்க பரிசுகளும் வழங்கப்படும் என்றும் அதிபர் தெரிவித்தார்.

# இராஜாங்க அமைச்சர் டிடி சனக்கவின் மாமனார் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

இனந்தெரியாத துப்பாக்கிதாரியொருவரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி இராஜாங்க அமைச்சர் டிடி சனக்கவின் மாமா உயிரிழந்துள்ளார்.

காலி பகலடிக்ஷன் வீதிப் பிரதேசத்தில் நேற்று இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்துள்ள நபர் புடவை நிறுவனமொன்றின் உரிமையாளரென்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


துப்பாக்கிச்சூட்டையடுத்து படுகாயமடைந்த அவர் அம்பியூலன்ஸ் மூலம் கராபிட்டிய வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படும்போது உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிரிழந்தவர் காலி உட்வட் மாவத்தையைச் சேர்ந்த 61 வயதுடையவர் என்றும் காரொன்றில் பயணம் செயது கொண்டிருந்தவேளை இவர் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகியுள்ளதாகவும் துப்பாக்கிச்சூட்டை நடத்திய நபர் தப்பியோடியுள்ளதாகவும் அவர் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

# குடும்பத்தகராறு காரணமாக கணவன் குத்திக் கொலை

## மனைவி கைது, நுவரெலியாவில் சம்பவம்

**தலவாக்கலை குறூப் நிருபர்**



கணவனை கத்தியால் குத்தி கொன்ற சம்பவம் தொடர்பில் மனைவி நேற்று (24) கைது செய்யப்பட்டதாக நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர். நுவரெலியா மாகஸ்தோட்ட, விஜிதபுர பிரதேசத்தில் வசித்து வந்த பஹிதரன் சந்திரசேகரன் (33) என்ற நபர் குடும்பத் தகராறு காரணமாக நேற்று முன்தினம் (23) இரவு கத்திக்குத்துக்கு இலக்காகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது நுவரெலியா விஜித்தபுர மார்கஸ்தோட்டத்தில் தனது வீட்டில் கணவன் மனைவிக்கிடையே நேற்று முன்தினம் இரவு ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது. இதனையடுத்து மனைவினால் மேற்கொள்ளப்பட்ட கத்தி குத்து தாக்குதலுக்கு இலக்காகிய கணவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அத்துடன் இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரான பாத்திமா ரிஸ்வானா என்ற மனைவி கைதுசெய்த நுவரெலியா பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பல் வைத்திய பீட மாணவன் மரணம்

**அக்குறணை குறூப் நிருபர்**

பேராதனைப் பல்கலைக்கழக பல் வைத்திய பீட மாணவன் ஒருவர் திடீர் சுகயீனம் காரணமான விடுதியில் வைத்து (22) காலமானார்.

மன்னார் பிரதேசத்தைச் சேர்ந்த ட. சாகித்தியன் (வயது 22) என்ற பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பல்வைத்திய பீட இரண்டம் வருடத்தில் கல்வி பயிலும் மாணவனே இவ்வாறு மரணமானவராவார்.

இவர் தனியார் விடுதி ஒன்றில் தங்கி இருந்த போதே இரவு நேரம் நோய் வாய்ப்பட்டு பேராதனை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சில மணித்தியாலங்களில் மரணமடைந்துள்ளார்.

இது தொடர்பாக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# அம்பலந்துவ ஜனாஸா சங்கத்தின் சேவைகளை விஸ்தரிக்க திட்டம்

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

பாணந்துறை, அம்பலந்துவ ஜனாஸா நலன்புரிச் சங்கத்தின் சமூக சேவை வேலைத் திட்டங்கள் பரவலாக்கப்படவுள்ளன. இதற்கான பௌதீக மற்றும் நிதி வளங்களை விருத்தி செய்வதற்காக முதல் திட்டமாக 'கிடுகு' விற்பனை திட்டம் ஒன்றை சங்கம் ஏற்பாடு செய்திருந்தது. இந்த நிகழ்வு நேற்று 24 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை அம்பலந்துவ இல்மா முஸ்லிம் வித்தியாலய முன் வளாகத்தில் இடம்பெற்றது.

அம்பலந்துவ ஜனாஸா நலன்புரி சங்கம் பிரதேசத்தில் நிகழும் ஜனாஸாக்களுக்கு அவசியமான கபன் துணி வகை, கூடாரம், கதிரைகள், பிளஷ் லைட் உள்ளிட்ட பொருட்களை மக்களுக்கு இலவசமாக வழங்கி உதவி வருவதுடன் மேலும் பல உதவிகளை அவசியமானபோது ஏற்பாடு செய்து கொடுப்பதாகவும் சங்கத்தின் செயலாளர் எம்.என்எம். முஸம்மில் தெரிவித்தார். இந்த சங்கம் பிரதேசத்தில் பொது நிகழ்வுகளில் பங்களிப்பு செய்து வருகின்றது. பிரதேச பாடசாலையின் நுழைவாயில் முகப்புக்கான டைல் பதிக்கும் பணியை சிரமதான அடிப்படையில் சங்கம் செய்து கொடுத்துள்ளதாகவும் செயலாளர் மேலும் தெரிவித்தார்.





ஆரோக்கியமான வாழ்வு என்ற தலைப்பில் இலவச மருத்துவ முகாம் உடப்பில் நேற்று(24) இடம் பெற்றது. திவ்விய ஒளி கலை மன்றத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இந்நிகழ்வில் ஓம் சாந்தி கலையகம், பிரம்ம குமாரிகள் இராஜ யோக நிலையத்தின் சார்பாக பல வைத்தியர்கள் கலந்துகொண்டு மருத்துவ உதவிகளை வழங்கினார்கள். சிறப்புரையை வைத்திய கலாநிதி விஜயஸ்ரீ சந்திரமோகன் ஆற்றினார். உடப்பு குறூப் நிருபர்


## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 செப்டெம்பர் 26ஆம் திகதிளன்று ஏல விற்பனையினூடாக 50,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123L295 | LKA18224C299 | LKA36424I274 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 20,000 | 15,000 | 15,000 | 50,000 |

ஏல விற்பனைத் திகதி : 2023 செப்டெம்பர் 26
தீர்ப்பனவுத் திகதி : 2023 ஒக்டோபர் 02
வழங்கப்படும் திகதி : 2023 செப்டெம்பர் 29
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2023 செப்டெம்பர் 26, செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்.எஸ்.பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**



## NOTICE
## UNIVERSITY OF VAVUNIYA, SRI LANKA
## VACANCIES FOR THE POST OF TEMPORARY POSITIONS

**WALK-IN INTERVIEW**

Walk-in interview for the following posts will be held on **3rd October 2023** at **9.30 am** in the Boardroom of the University of Vavuniya, Pambaimadu, Vavuniya,

1. Faculty of Business Studies
   Department of Finance & Accountancy
   i. Temporary Assistant Lecturer in Banking & Insurance
2. Information Technology Centre
   i. Temporary Instructor

Applicants who are interested in the above post are requested to visit University of Vavuniya Website **http://www.vau.ac.lk** to obtain further details.

**Registrar / University of Vavuniya**
**22.09.2023**



## இலங்கை மக்களிடம் மன்னிப்புக் கோரல்

வீரசூரிய முதியன்சேலாகே சுகத் நந்தன வீரசூரிய ஆகிய நான் பின்னகொல்ல, புப்போவ, தல்விட்டவில் நடத்திச் செல்கின்ற விற்பனை நிலையத்தில் கெப்லீன் வில்லைகளை விற்பனை செய்தல் மற்றும் சாட்சிப்படுத்திய குற்றத்தை இழைத்தமைக்காக 2023.08.07 வழக்கு இல: 83638/23 இன் கீழ் குருநாகல் நீதிவான் நீதி மன்றத்தினால் குற்றத்திற்காக ரூ. 45000/= தண்டத்தொகைக்கு ஆளானேன் என்பதை பொதுமக்களுக்கு இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.



## இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் திணைக்களத்தின் இணைத்தயளத்தில் (www.doenets.lk) பதிவிறக்கம் செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.

| தொடர் இல. | பரீட்சை | நடைபெறும் திகதி | இடம் |
|---|---|---|---|
| 01 | இலங்கை சட்டக் கல்லூரி சாதாரண நுழைவுப் பரீட்சை - 2023 | 2023 செப்டெம்பர் 30 | கொழும்பு |

அனுமதி அட்டைகளைப் பதிவிறக்க முடியாத விண்ணப்பதாரிகள் அல்லது மேலதிக விபரங்கள் தேவைப்படும் விண்ணப்பதாரிகள் இருப்பின் தமது முழுப் பெயர், முகவரி, தேசிய அடையாள அட்டை இலக்கத்துடன் நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையைத் தொடர்புகொள்ளவும்.

**தொலைபேசி : 011-2785230/ 011-3661244/ 011-3661246**
**தொலைநகல் : 011-2784232**

**எச்.ஜே.எம்.சி. அமித் ஜயசுந்தர**
பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

**5/5/2/AD/2023**
**நிறுவனம்சார் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,**
**இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**
**2023 செப்டெம்பர் மாதம் 25ஆம் திகதி**



தேசிய லொத்தர் சபை National Lotteries Board — வெள்ளிக்கிழமை 2023.09.22 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5245 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,007,160.00 — ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 3 8 0 6 7 9

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1593 — 22/09/2023 — Double Chance 34683 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 408,469,316.00 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — ஆங்கில எழுத்து X — சுப்பர் இலக்கம் 15 — வெற்றி இலக்கங்கள் 38 44 48 78

தன நிதானய — தேதி 2023/09/22 — சீட்டிழுப்பு இலக்கம் 1275 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 111,526,748.00 — ஆங்கில எழுத்து C — வெற்றி இலக்கங்கள் 09 21 57 73 — விஷேசட ஆங்கில எழுத்து C — Double Chance இலக்கம் 15922

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-09-22 — சீட்டிழுப்பு இலக்கம் 554 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,284,778.40 — வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 06 11 35 55 — விசேட இலக்கினம் தனுசு

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3487 — சீட்டிழுப்பு திகதி 2023.09.22 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,908,705.60 — ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 31 36 62 67 — விசேட எழுத்து T — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 29853

Lucky 7 லக்கி — திகதி 22.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0071 — வெற்றி இலக்கினம் மேஷம் — L7 இலக்கம் 3 3 — வெற்றி இலக்கங்கள் 3 0 6 0 1 7 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,025,341.76

தேசிய லொத்தர் சபை National Lotteries Board — சனிக்கிழமை 2023.09.23 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5246 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 28,072,736.00 — ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 0 2 1 3 8 0

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1594 — 23/09/2023 — Double Chance 39485 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 408,603,180.00 — அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — ஆங்கில எழுத்து X — சுப்பர் இலக்கம் 14 — வெற்றி இலக்கங்கள் 08 14 34 49

தன நிதானய — தேதி 2023/09/23 — சீட்டிழுப்பு இலக்கம் 1276 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 111,785,629.60 — ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 21 24 50 66 — விஷேசட ஆங்கில எழுத்து M — Double Chance இலக்கம் 11429

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு திகதி 2023-09-23 — சீட்டிழுப்பு இலக்கம் 555 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,299,326.40 — வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 19 21 34 58 — விசேட இலக்கினம் மீனம்

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3488 — சீட்டிழுப்பு திகதி 2023.09.23 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 61,908,705.60 — ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 05 20 24 39 — விசேட எழுத்து G — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 50825

Lucky 7 லக்கி — திகதி 23.09.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0072 — வெற்றி இலக்கினம் மீனம் — L7 இலக்கம் 3 8 — வெற்றி இலக்கங்கள் 1 5 4 1 3 0 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,064,596.72

# அதிபர் மகேசனின் காலகட்டமே கொழும்பு விவேகானந்த கல்லூரியின் பொற்காலம்



முன்னாள் அதிபர் அமரர் சு.மகேசனின் காலகட்டமே கல்லூரி வளர்ச்சியின் பொற்காலமாக போற்றப்படுகின்றது. கல்லூரியின் முக்கிய பிரச்சினையாக இருந்த இடப்பற்றாக்குறையை நீக்கி புதிய கட்டடங்களை அமைப்பதற்காக இரவு பகலாக வீடு வீடாக சென்று நிதி சேகரிப்பதில் ஈடுபட்ட அவர்இ கல்வி மறுசீரமைப்பு நடவடிக்கைகளிலும் புதிய யுக்திகளை வகுத்து செயற்படுத்தி வெற்றி கண்டார்.

அவரது காலகட்டமான 1978 ஆம் ஆண்டு பெண்களுக்கான கீழைத்தேய பாண்ட் வாத்தியக்குழு ஸ்தாபிக்கப்பட்டதுடன்இ இக்குழு அகில உலக இந்து மாநாட்டின் போதும் நேபாள மன்னரின் இலங்கை விஜயத்தின்போதும் பங்கேற்று பாடசாலைக்கு புகழையீட்டிக் கொடுத்தது.

இதனைவிட 1981 ஆம் ஆண்டு இங்கிலாந்து மகாராணியாரின் இலங்கை விஜயத்தின்போது அவரது வரவேற்பில் கலந்துகொண்ட ஒரேயொரு தமிழ் பாடசாலை என்ற கௌரவத்தையும் தன்வசப்படுத்திக்கொண்டது.

கல்வித்துறையில்....

உயர் தர விஞ்ஞான பிரிவை ஆரம்பித்தமை.(1974)

அன்றைய நாளில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கல்வித் திட்டத்திற்கமைய தொழில் முன்னிலைப் பாடம்,அழகியல் (சங்கீதம்,நடனம்,நாடகம்) ஆகிய பாடங்களுக்கான வகுப்பறை வசதிகளை ஏற்படுத்தியமை.

இதன் மூலம் 1975 இல் முதன்முறையாக தே.க.பொ.த(N.C.G.E) பரீட்சையில் தோற்றிய56 மாணவர்களில் 36 பேர் உயர் தரக்கல்வி(H.N.C.E)

கற்கத் தகுதி பெற்றனர். அதே ஆண்டில் வரலாற்றின் முதன்முறையாக(G.C.E A/L) வர்த்தகப் பிரிவிலிருந்து பல்கலைக்கழக அனுமதியும் பெற்றனர்.

ஆங்கிலக்கல்வியை மேம்படுத்த அவரே களமிறங்கி உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தைப் போதித்தார்.

69 வரையான வகுப்பு மாணவர்களுக்கு தேர்ச்சி' பெற்ற முன்னாள் மாணவர்கள் மூலம் விசேட மேலதிக வகுப்புகளை நடாத்தினார்.

1976 இல் பாடசாலையின் பொன்விழாவையும், பரிசளிப்பு விழாவையும் நடாத்தி மாணவர்களை உற்சாகப்படுத்தியதோடு பாடசாலையையும் பிரபலப்படுத்தினார்.

விளையாட்டுத்துறையின் முன்னேற்றத்திலும் அதீத கவனம் செலுத்தினார். விளையாட்டு மைதானம் இல்லாத போதும் பாடசாலை மட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்டிருந்த மாணவர்களின் விளையாட்டுத் திறன்களை மாவட்ட மட்டத்திற்கு உயர்த்தினார்.மெய் வல்லுனர் போட்டிகளை சுகததாச விளையாட்டு அரங்கில் முதன்முறையாக நடாத்தி மாணவர்களை உற்சாகப்படுத்தினார். ஆசிரியர்,மற்றும் காரியாலய உதவியாளர்கள் பற்றாக் குறையை நீக்க கல்விக் காரியாலயங்களில் கையேந்தி நிற்கவில்லை.

மாறாக திறமை வாய்ந்த முன்னாள் மாணவர்களின் உதவியையே பெற்றார். (அபிவிருத்திச் சங்கத்தினூடாக சிறு கொடுப்பனவும் வழங்கப்பட்டது.)

சாரணர்,சாரணிய இயக்கங்களை நவீனமயப் படுத்தி மாணவர் ஒழுக்க விழுமியங்களை மேம்படுத்தினார். அவர்களைச் சமூக விழாக்களில் தொண்டரணியாக களமிறக்கி,விவேகானந்தாவின் நற்பெயரைச் சமூக மயப்படுத்தினார்.

விழியுணர்வற்றோருக்கான தமிழ் மொழி மூலமான கற்றலுக்கு வாய்ப்பளித்த முதல் தமிழ் பாடசாலை என்ற பெருமையும இவரது காலத்திலேயே கிடைத்தது. முன்னாள் அதிபர் அமரர் மகேசனின் நினைவுதின நிகழ்வு எதிர்வரும் 2023.09.26ஆம் திகதி மாலை 4 மணிக்கு விவேகானந்த கல்லூரியின் பிரதான மணடபத்தில் நடைபெறும்.

# வடமாகாணத்தில் வீடற்ற 25,000 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள்



வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் வீட்டுத்திட்டம் தொடர்பில் (22.09.2023) இடம்பெற்ற கலந்துரையாடலில் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் குறைந்த வருமானம் பெறும் நிரந்தர வீடற்ற குடும்பங்களை இனங்கண்டு வீட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு வடமாகாண ஆளுநர் உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறிப்பாக நிரந்தர வீடமைப்புத் திட்டத்தில் உட்கட்டமைப்பு தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறும், மக்கள் வாழ்வதற்கு ஏற்ற இடங்களை உடனடியாகக் கண்டறிந்து அதற்கான திட்டங்களைத் தயாரித்து தம்மிடம் ஒப்படைக்குமாறும் ஆளுநரால் அறிவுறுத்தப்பட்டது.

நிரந்தர வீடொன்றை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் 5 மில்லியன் ரூபாவை செலவிடவுள்ளது. வீடொன்றுக்கு தேவையான வசதிகளையும் அரசாங்கம் மேற்கொள்ளும் என கூறப்படுகின்றது. இவ்வீடுகளின் கூரைகளைப் பயன்படுத்தி சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தைப் பெறுவது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் வடமாகாண ஆளுநர் கூறியுள்ளார்.

கடந்த காலங்களில் வடமாகாணத்தில் அமுல்படுத்தப்பட்ட சில வீட்டுத்திட்டங்கள் இறுதிக் கட்டம் வரை நடைமுறைப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன்படி கடந்த காலங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுத் திட்டங்களில் சுமார் 6000 நிரந்தர வீடுகள் பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்டு பயனாளிகளுக்கு வழங்க முடியாத நிலையில் காணப்படுகின்றது. இவ்வாறான தோல்வியடைந்த வீட்டுத்திட்டங்களைப் போலல்லாது இந்த 25,000 வீடமைப்புத் திட்டத்தை தயாரிப்பதில் பணிகள் முடியும் வரை அதிகாரிகள் மிகவும் திட்டமிட்டு சரியான முறையில் செயற்பட வேண்டுமென ஆளுநர் அறிவுறுத்தினார்.

மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் ஆகியோர் இத் திட்டத்திற்காக செயற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட சில வீட்டுத்திட்டங்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர்கள் கௌரவ ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

அவற்றைக் கேட்டறிந்த ஆளுநர் இவ்வீடமைப்புத்திட்டமானது ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் நோக்கங்கள் மற்றும் இலக்குகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வகையில் தயாரிக்கப்படும் என்று கூறினார்.

கடந்த காலங்களில் பகுதியளவு கட்டப்பட்டு கைவிடப்பட்ட வீடுகள், இத்திட்டத்தின் கீழ் பணிகளை முடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து உடனடியாக ஆய்வு செய்ய வேண்டும் என்றும் ஆளுநர் அறிவுறுத்தினார்.

## வடக்கின் உதயம்

# வவுனியா வடக்கு பிரதேச சபைக்கு கிடைத்த உயரிய அங்கீகாரம்



ஓமந்தை விஷேட நிருபர்

இலங்கை பொது நிதி கணக்குகள் சங்கத்தினால் (APFASL) வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கிடையில் 2022ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைகள் கணக்குகள் மற்றும் செயலாற்றுகை தொடர்பான போட்டியில் வடக்கு மாகாண சபைக்குட்பட்ட 29 பிரதேச சபைகளுக்குள் வவுனியா வடக்கு பிரதேச சபை மாகாணத்தில் முதலாவதாக தெரிவு செய்யப்பட்டு தங்க விருதினை (Golden Award) பெற்றுள்ளது.

இவ் நிகழ்வு நேற்றையதினம் (22.09.2023) அனுராதபுரத்தில் உள்ள வடமத்திய மாகாண கேட்போர் கூட மண்டபத்தில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் இலங்கை பொது நிதி கணக்குகள் சங்கத்தின் (APFASL) தலைவர் செயலாளர் மற்றும் இவ் நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினர் மற்றும் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் பிரதி செயலாளர் (நிதி), பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்கள்,

உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

யுத்தத்தால் அதிகம் பாதிக்கப்பட்ட வவுனியா வடக்கு பிரதேசத்தில் அரச நிறுவனங்களின் இவ்வாறான செயற்பாடானது பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும்.

# தொண்டர் தாக்கப்பட்டமைக்கு சிவகுரு ஆதீனம் கண்டனம்

இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர் சபையின் தேசிய கண்காணிப்பாளர் கடமை நேரத்தில் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு சிவகுரு ஆதீனம் கண்டனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட கண்டன அறிக்கையில்; இலங்கை முதலுதவிச்சங்க இந்துசமய தொண்டர்சபை கடந்த 47வருடங்களாக முதலுதவிப் பணிகளையும்,ஆன்மிகப் பணிகளையும் சிறப்பாக ஆற்றி வருகின்ற ஒரு அமைப்பு. இந்து ஆலயங்களில் திருவிழாக் காலங்களில் இப் பணிகளை ஆற்றி வரும் வகையில் இம்முறை நல்லூர்க் கந்தன் பெருமானின் மஹோற்சவ காலத்திலும் பணியாற்றியமை பாராட்டத்தக்கது.

எமது சிவகுரு ஆதீன திருவிழாவிலும் இவர்கள் தொண்டாற்றியிருந்தனர். முதலுதவிச்சங்க உறுப்பினர்கள் ஒழுக்கத்திலும், பண்பாட்டிலும், மனித விழுமியங்களைப் பின்பற்றுவதிலும், மற்றவர்களை மதிப்பதிலும் சிறந்து விளங்குகின்றனர்.

இந்நிலையில் நல்லூர் கந்தனின் தேர்த் திருவிழா அன்று தொண்டர் சபையைச் சேர்ந்த தேசிய கண்காணிப்பாளர் யாழ் மாநகரசபை முன்றலில் இரத்தம் வருமளவிற்கு கடுமையாக தாக்கப்பட்டுள்ளார். அதுவும் கடமையில் ஈடுபட்டிருந்த தன்னலமற்ற தொண்டர் ஒருவர் மோசமாக தாக்கப்பட்டமையை நாம் வன்மையாக கண்டிக்கிறோம். அநீதியான வன்முறையான, மனிதாபிமானமற்ற இச் செயலை செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமலிருப்பதனை உரியவர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என மேலும் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழில். இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன்





யாழ்.விசேட நிருபர்

இந்தியாவின் பிரபல இசையமைப்பாளர்களில் ஒருவரான சந்தோஸ் நாராயணன் யாழ்ப்பாணத்திற்கு நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை வருகை தந்துள்ளார். யாழ் வருகை தந்த சந்தோஸ் நாராயணனை ஈழத்தின் புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான் பஞ்சமூர்த்தி குமரன் உள்ளிட்டவர்கள் வரவேற்றனர்.

யாழ்.கோண்டாவில் உப்புடம் விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வை தொடர்ந்து, மங்கள வாத்தியத்துடன் கோண்டாவிலில் அமைந்துள்ள சந்தோஸ் நாராயணன் மனைவியின் பூர்வீக இல்லத்திற்கு அழைத்து செல்லப்பட்டனர். அதேவேளை சந்தோஸ் நாராயணன் அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில் பெரியளவிலான இசை நிகழ்ச்சியை நடாத்த திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுபோக செய்கைகளில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க பணிப்பு

(பரந்தன் குறூப் நிருபர் )

கிளிநொச்சி இரணைக்மடுக்குளத்தின் கீழ் கடந்த 2022ம் மற்றும் கடந்த 2023ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட சிறுபோக பயிர்செய்கைகளில் இடம்பெற்ற முறைகேடுகள் மற்றும் நீர்வரிப் பங்குகள் மாற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளருக்கு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் கீழ் கடந்த 2022 ஆம் ஆண்டில் பெரும்போக அறுவடை நிறைவு பெற்றதன் பின்னரும் குளத்தில் முழுமையாக நீர் தேங்கிய நிலையில் காணப்பட்டதையடுத்து 21ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் இரணைமடு குளத்தின் கீழான நீர்ப்பாசன எல்லைப் பரப்பு தவிர்ந்த கோரக்கண்கட்டு, பெரிய பரந்தன், குமரபுரம் ஆகிய பகுதிகளிலும் மானாவாரி வயற்காணிகளை கொண்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு குறித்த பிரதேசங்களுக்கு பரீட்சார்த்தமாக சிறுபோக செய்கைகளுக்கும் அனுமதிகள் வழங்கப்பட்டிருந்தன.

இந்த நிலையில் கோரக்கண்கட்டு பகுதியில் கடந்த 2022 ஆம் ஆண்டு சிறுபோகச் செய்கையில் நீதியற்ற முறையில் பாரபட்சமாகவும் சிறுபோக பங்குகள் வழங்கப்பட்டதாகவும் குறித்த பகுதி கமக்கார அமைப்பின் தலைவர் மற்றும் அதன் நிர்வாகத்தினரை சேர்ந்தவர்களை அவர்களது உறவினர்கள் மாத்திரமே ஒதுக்கீடு செய்த நிலப்பரப்புகளில் பயிர்செய்கை மேற்கொண்டதாகவும்; இதனால் தாங்கள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் குறித்த பிரதேச விவசாயிகள் மாவட்ட அரச அதிபர் மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு தலைவர் மற்றும் துறை சார்ந்த திணைக்களங்களுக்கு முறைபாடு செய்திருந்தனர்.

இதனை அடுத்து இது தொடர்பில் மாவட்ட அரச அதிபரால் மேலதிக அரச அதிபர் தலைமையிலான குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. குறித்த விசாரணைகளில் மேற்படி குற்றச்சாட்டுக்கள்; கண்டறியப்பட்டதை அடுத்து முறைகேடுகளில் ஈடுபட்ட விவசாய அமைப்புக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளருக்கு கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார். இதேவேளை கடந்த 2023 ஆம் ஆண்டு சிறுபோக பயிரிச் செய்கையின் போது இரணைமடுக்குளத்தின் கீழுள்ள புலிங்க தேவன் முறிப்பு கமக்கார அமைப்பினரால் சுமார் 716 ஏக்கர் வரையான சிறுபோக பங்குகள் பயிர்செய்கை குழு கூட்டத் தீர்மானங்களுக்கு மாறாகவும் கமநல சேவை நிலையங்களுக்கிடையில் பங்கு மாற்றம் செய்யப்படாமலும் வெளியிடங்களுக்கு தண்ணீர்ப்பங்குகள் முறையற்ற விதத்திலே கொண்டு செல்லப்பட்டமை மற்றும் வாழ்வாதார செய்கைகளில் ஈடுபட்டுவரும் ஏழை விவசாயிகளுக்கு சொந்தமான பங்குகள் கமக்கார அமைப்பினரால் தடுத்து நிறுத்தப்பட்டு அவை இரகசியமான முறையிலே பெருந்தொகை பணத்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமையும் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளன. அதாவது இவ்வாறான முறைகேடுகள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட அரச அதிபரால் ஏற்கனவே குழு ஒன்று நியமிக்கப்பட்டு இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. குறித்த முறைப்பாட்டின் அடிப்படையிலும் மேற்படி தண்ணீர்ப்பங்குகள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை குறித்த பிரதேச விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய பங்குகளை வழங்காது அதனை தடுத்து விட்டு அதனை வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டமை என பல்வேறு முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளன.

# களுவாஞ்சிகுடி ஸ்ரீ வீரபத்திரர் ஆலய வருடாந்த உற்சவம்

**களுவாஞ்சிகுடி வரலாற்று புகழ்மிகு ஆலயமாக ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் திகழ்கின்றது. இவ்–வாலயத்தின் உற்சவமானது எதிர்வரும் நேற்று ஆரம்பித்தது. உற்சவம் 29 –10–2023 ஆம் திகதி தீர்த்தத்துடன் நிறைவு பெறும்.**

ஆலயத்தின் வரலாறு

1107ஆம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து வந்த மகோன் மன்னனின் வருகையின் பின் தமிழ் பகுதிகளில் காணப்பட்ட ஆண்டவனின் அருள் தங்கிய இடங்கள் எனக் கூறப்படும் சிறப்புமிகு ஆலயங்களை அதாவது பண்டைய திருப்படைக் கோவில்களை பரிபாலனம் செய்வதற்காக வேளாளர் குலத்தினரை நியமித்தான். அதன் பிரகாரம் களுவாஞ்சிகுடி பகுதியில் மகோன் மன்னனால் கவுத்தன்குடி மக்களை கோவில் போரதீவு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயிலை பரிபாலனம் செய்வதற்காக குடியமர்த்தினான் என பழைய சரித்திரம் கூறுகின்றது.

கவுத்தன்குடி மக்களின் ஆதிமூல குல தெய்வமாகிய வீரபத்திரர் சுவாமியினையும் காலம் தவறாது வழிபட்டு வந்தனர். கவுத்தன்குடி வம்சத்தில் மூதாட்டியாகிய 'வவுணி' என்ற பெண் வீரபத்திர சுவாமியின் வழிபாட்டிற்கான பத்தாசிகளையும் பேழைகளையும் கொங்கு நாட்டிலே இருந்து இலங்கைக்கு கொண்டு வந்ததார். அதுவும் முதன் முதலில் பருத்தித்துறைக்கு கொண்டு வந்தார். பின்னர் திருகோணமலையூடாக மண்முனைத்துறைக்கு கொண்டு வந்தார். பின்னர் பட்டிருப்பு துறையினூடாக வந்து களுவாஞ்சிகுடியை வந்தடைந்தார். கவுத்தன்குடி மக்களின் ஆதிமூல குலதெய்வமாகிய வீரபத்திரர் சுவாமியின் சடங்கு முறைகள் தொடர்பாக வவுணி கொண்டு வந்து கொடுத்த பத்தாசியைப் படித்து பட்டன்மார்கள் சடங்கு முறைகளை செய்து வந்தனர்.

'வவுணி' சாமிப்பெட்டியை பட்டன்மார்களிடம் ஒப்படைத்த வரலாற்றுக் கதையினை சடங்கு காலங்களில் அல்லது உற்சவ காலங்களில் தமது பாடல்களிலேயே பாடினார்கள்.

1107 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கவுத்தன்;குடி மக்களின் பட்டன்மார்களால் கொத்துப் பந்தலிட்டு வழிபட்டு சடங்குகளை கவுத்தன்மார்கள் நடாத்தி வந்துள்ளதுடன் ஆண்டுகளுக்கு ஒரு முறை இடம்பெறும் சடங்குகளில் கவுத்தன்மார்கள் ஆலயத்திலே தங்கியிருக்கும் வழமையும் காணப்பட்டவை சிறப்புமிக்கவையாகும். பட்டன்மார்களினைத் தொடர்ந்து சடங்கு செய்பவர்களினை பெரியகவுத்தன், சின்னக்கவுத்தன் என அழைக்கும் வழமை காணப்பட்டமையை அண்ணன் பெரிய கவுத்தனும், தம்பி சின்ன கவுத்தனும் என அழைக்கப்பட்டு இருவரும் ஒற்றுமையாக சடங்கு சம்பிரதாயங்களை செய்து வந்துள்ளனர். இருப்பினும் பல ஆண்டுகளுக்கு முன்னர் சின்னப்பட்டன் தனது சாமிப்பெட்டியை எடுத்து வந்து சின்னப்பட்டன் கடற்கரை வீதியில் வைத்து வழிபட்டார். இதனால் களுவாஞ்சிகுடி ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம் பெரிய கவுத்தன்குடி மக்களால் வழிநடத்தப்பட்டு வருகின்றது.

கவுத்தன்மார்கள் பத்தாசிகளை ஆர்வத்துடன் படித்து தீய சக்திகள், நோய், பிணிகளை நீக்கும் முறைகளை சடங்கு முறைகளை வைத்து கற்றுக் கொண்டதுடன் மரத்தினை குடைந்து தோலினால் நூலுடன் சேர்த்து உருவாக்கப்பட்ட சவணிக்கை உடுக்கு ஆகியன அடித்து வீரபத்ர சுவாமி தாலாட்டும் பாடி மகிழ வைத்ததோடு கிராமத்தில் உள்ள மக்களும் கட்டுரைத்து பேய், பிணி சூனியங்களை அகற்றி வந்தமை என சிறப்பான ஒன்றாகும். தக்கனை அளித்தன் வரலாற்று பிரகாரம் வீரபத்திர பெருமானுக்கு பலி கொடுப்பது வழமையாக காணப்பட்டது. இந்த நடைமுறை ஆரம்ப காலத்தில் எமது கவுத்தன் மக்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. அந்த அடிப்படையில் வீரபத்திரர், வீரம்மாகாளி ஆகியோருக்காகவும் வீரபத்திரனின் தளபதியான இருளன், மருளன் ஆகியோருக்கும் வெள்ளை சேவல் ஆட்டின் செவி பாணிச் சேவல் ஆகியன பலியாக கொடுக்கும் வழமை நிலவி வந்துள்ளது. இதன்போது ஆலயத்தில் கடமையாற்றி காலம் சென்ற கவுத்தமர்களின் பெயர்களைச் சொல்லி என் குருநாதன்.... (ஓகோ) கன்னி கவுத்தனுக்கு காக் கொண்டு வாரேன்.... (அன்னிக்கே) என்றவாறாக சின்னப்பு கவுத்தன்; முதல் கந்தசாமி கவுத்தன் வரை இருபத்தொரு கவுத்தமர்களின் பெயர்களைச் சொல்லி அன்னைக்கே கூறும் வளமை காணப்பட்டதனை அறிய கிடைக்கின்றன. இவ்வாறான ஆரம்ப கால பகுதியில் இருபத்தொரு கவுத்தன்மார்களால் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதுடன் பின்னர் பலி கொடுக்கும் முறை தடை செய்யப்பட்டதனை தொடரந்து சடங்கு முறை நீக்கப்பட்டு ஆகம முறைப்படி திருவிழாவாக மாற்றம் செய்யப்பட்டு தொடர்ச்சியாக நடைபெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கவையாகும்.

**கலைச்சுடர் இலக்கியவித்தகர் நாராயணபிள்ளை நாகேந்திரன் ஓய்வு நிலை அதிபர்**




## மானுடவியல்

### சுந்தரர்– சிவனின் அற்புதங்கள்



134

இறைவன் தந்த ஊன்றுகோலை துணையாக கொண்டு, பழயனூர் சென்று இறைவனை மகிழந்து "முத்தா முத்திரவல்ல□" என தொடங்கும் பதிகம் பாடி அங்கிருந்து காஞ்சிபுரம் வந்தடைந்தார். ஸ்ரீகாஞ்சி காமாட்சி அம்மனை முதலில் தரிசித்துவிட்டு, "திருக்கச்சி ஏகம்பனே" என்று மகிழ்ந்து பாடிய படி ஏகம்பரஸ்வரரை வீழ்ந்து வணங்கி, காமாட்சி அம்மனையும் வேண்டினார்.

வன்தொண்டரான சுந்தரரின் துன்பம் கண்டு சிவபெருமானிடம் சுந்தரருக்கு கருணைகாட்ட வேண்டினார் காஞ்சி காமாட்சி அன்னை. காமாட்சி அம்மையின் விருப்பத்தை ஏற்று நம்பியாரூரரின் இடது கண் பார்வையை இறைவன் தந்தார். அன்னையின் கருணையால் இறைவன் ஒரு பார்வை யாவது தந்தாரே என்ற மகிழ்ச்சியில் "ஆலந்தானுகந்து அமுது செய்தானை" என்ற திருபதிகத்தை பாடினார் சுந்தரர். சில மாதங்கள் காஞ்சியில் தங்கினார். பிறகு திருவாரூர் தியாகராஜப் பெருமான் நினைவு வரவே மீண்டும் பயணத்தை தொடங்கினார். அங்கிருந்து வழியில் உள்ள பல ஊர்களுக்கு சென்று அங்கு இருக்கும் பல சிவாலயங்களுக்கு சென்று வணங்கி பதிகம் பாடினார். இடது கண் பார்வை கிடைத்த மகிழச்சி இருந்தாலும், தன் உடல் நோய் தீர்க்க இறைவன் எப்போது அருள் செய்வாரோ என நினைத்து ஏங்கினார் ஆருரர். திருத்துருத்தி என்கிற ஊரில் உள்ள சிவபெருமானை தரிசி்த்தார். தன் உடல்நோய் என்று தீருமோ என்றார். அதற்கு இறைவன், "நீ இந்தக் கோயிலின் வடபக்கத்தில் உள்ள குளத்தில் நீராடி வா உன் உடற்பிணி தீரும்." என்றார் இறைவன். அவ்வாறு குளத்தில் சுந்தரர் முழ்கி கரை சேர்ந்த போது, சுந்தரரின் உடல்பிணி மறைந்து சுந்தரர் எனும் பெயருக்கேற்ப சுந்தர உடலை பெற்றார். அங்கிருந்து தம் சொந்த ஊரான திருவாரூர் வந்தடைந்த சுந்தரருக்கு வலது கண் பார்வையும் தந்தருளினார் சிவ பெருமான். சுந்தரர் திருவாரூர் கோயிலில் தங்கியிருந்தார். அதற்குள் சிலர், சுந்தரர் திருவொற்றியூரில் சங்கிலியாரை இரண்டாவது திருமணம் செய்த விஷயம் பரவையாருக்கு சொல்லிவிட்டார்கள். பரவையார் பெரும் ஆத்திரம் கொண்டார். நம்பியாரூரரை கண்டதும் அவரை உள்ளே அனுமதிக்காமல் கதவை சாத்தினாள் பரவை. நம்பியாரூரர் மனம் கலங்கி கோயிலுக்கு சென்று தன் நண்பரான சிவ பெருமானிடம் முறையிட்டார். "நீ சங்கிலியை திருமணம் செய்து இருக்கக்கூடாது. செய்துவிட்டாய். இனி இதை பற்றி பேசியும் எந்த பயனும் இல்லை. சரி உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?". என்றார் இறைவன். "எனக்காக பரவையிடம் சமாதானம் பேச வேண்டும்" என்றார் சுந்தரர். தன் நண்பனுக்காக மகேஸ்வரனே பரவையை சந்திக்க அவள் வீட்டுக்கு கோயில் அர்ச்சகர் உருவில் சென்றார். கதவை தட்டினார் அர்ச்சகர். "யாரது" என்றபடி கதவை திறந்தாள் பரவை. அர்ச்சகரை பார்த்து, "என்ன விஷயம்?" என்றாள். (தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.




கொழும்பு விஷ்வ இந்து பரிஷத்தின் ஏற்பாட்டில் 8 முறையாக நடைபெறும் விநாயகர் சதுர்த்தி விஷர்ஜன விழா இரண்டாம் நாள் நிகழ்வு செவ்வாய்க்கிழமை மாலை செட்டியார் தெரு முத்து விநாயகர் முன்றலில் பிச்சை கிருஷ்ணா உபயமாக விழாக்குழு தலைவர் இராஜுபாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் விஜய்ஆனந்த் சுவாமி, ரவிகுருசாமி மற்றும் கனகதுர்க்கை அம்மன் அறநெறிப் பாடசாலை குழுவினர் கலந்து சிறப்பித்தனர். சிறப்புப் பூஜைகளை தொடர்ந்து விபூதி பிரசாதம் வழங்கி வைப்பதையும் காணலாம்.



கொழும்பு செட்டியார் தெரு ஸ்ரீ முத்து விநாயகர் சுவாமி திருக்கோயில் ஆவணி சதுர்த்தி அலங்கார சித்திர இரத பவனி திங்கட்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. வசந்த மண்டபத்தில் நடைபெற்ற பூஜையைத் தொடர்ந்து விநாயகர் உள்வீதி வலம் வருவதையும், சுவாமி அழகிய சித்திரத்தேரில் எழுந்தருளி வீதியுலா செல்வதையும் காணலாம்.

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19836) ஸ்ரீமந் நாராயணன் யார்?** காக்கும் கடவுள்

**19837) மும்மூர்த்திகளில் ஒருவர் யார்?** ஸ்ரீமந் நாராயணன்

**19838) த்வைதம் மற்றும் வைணவ நெறிகளின் தலைவர் யார்?** ஸ்ரீமஹா விஷ்ணு

**19839) மஹா விஷ்ணுவின் வேறு பெயர்கள் என்னென்ன?** பரமாத்மா, வேணுகோபாலன், ஸ்ரீராமபிரான், ஸ்ரீஅரங்கநாதர், வேங்கடவன், கோவிந்தராஜன், வெங்கடேசப் பெருமாள், சீனிவாசன் என ஆயிரம் ஆயிரமாக சொல்லி கொண்டே போகலாம்.

**19840) திருமாலின் ஆயிரம் பெயர்களை எவ்வாறு அழைப்பார்கள்?**

விஷ்ணு சஹஸ்ரநாமம்

**19841) ஸ்ரீமந் நாராயணனுக்கு உகந்த நாட்கள் எவை?**

புதன் மற்றும் சனிக்கிழமை சிறப்பு.எந்நாளும் வழிபடலாம்.

**19842) ஸ்ரீமந் நாராயணனுக்கு உகந்த மலர்கள் எவை?**

தாமரை, மருக்கொழுந்து, பவளமல்லி, துளசி அதி சிறப்பு.

**19843) ஸ்ரீமந் நாராயணனுக்கு உகந்த ஆயுதங்கள் எவை?**

சங்கு , சக்கரம் , மற்றும் கதாயுதம்

**19844) பஞ்சாயுதங்களை கொண்டவராக விளங்குபவர் யார்?**

ஸ்ரீமந் நாராயணன்

**19845) பரந்தாமன் புரட்டாசி மாதம் திருவோண நட்சத்திரதன்று எடுத்த அவதாரம் என்ன அவதாரம்?**

வாமன அவதாரம்.

**19846) புரட்டாசி துவிதியை திதியன்று எடுத்த அவதாரம் என்ன அவதாரம்?**

பலராமன் அவதாரம்,

**19847) புரட்டாசி மூல நட்சத்திரத்தில் எடுத்த அவதாரம் என்ன அவதாரம்?**

சரஸ்வதி தேவி அவதாரம்.

**19848) புரட்டாசி மாதத்தில் சூரியன் எந்த ராசியில் பிரவேசிக்கும்?**

கன்யாராசியில்

**19849) புரட்டாசி மாதத்தில் சூரியன் கன்யாராசியில் பிரவேசிப்பதால் இம்மாதம் என்ன மாதம் என அழைக்கப்படுகிறது?**

கன்யா மாதம்

**19850) புரட்டாசி சனியன்று எடுத்த அவதாரம் என்ன அவதாரம்?** சனீஸ்வரன் அவதாரம்.

**19851) சிவன் த்ரிபுரம் எரித்தது எப்போது?**

புரட்டாசி பௌர்ணமியில்

**19852) நாராயணனின் கல்யாண குணநலன்கள் எத்தனை?**

நான்கு

**19853) திருமாலின் கல்யாண குணங்களாக நான்கும் எவை?**

வத்சல்யம், சுவாமித்துவம், சௌசீல்யம், சௌசீல்யம

**19854) இதில் வத்சல்யம் என்பது என்ன?**

தாய்ப்பசுவின் கன்று கொள்கின்ற அன்பு.

**19855) சுவாமித்துவம் என்பது என்ன?**

கடவுள்களுக்கெல்லாம் தலைமையேற்கும் சிறப்பு.

**19856) சௌசீல்யம் என்பது என்ன?**

ஏற்றத்தாழ்வின்றி நட்பு பாராட்டுவது.

**19857) சௌலப்யம் என்பது என்ன?**

கடவுளின் எளிமையை குறிப்பது.

**19858) இந்த நான்கு குணங்களும் எதில் வெளிப்பட்டதாக கருதப்பெறுகிறது?**

திருமாலுடைய ஸ்ரீகிருஷ்ண அவதாரத்தில்

**19859) அர்ஜுனனின் தவறை நோக்காது, பாரத போரினை நிகழ்த்தியமை எப்படி கருதப்பெறுகிறது?**


வாத்சல்யமாக

**19860) அர்ஜுனனுக்கு தன்னுடைய பரத்துவத்தை விளக்கியமை எப்படி கருதப்பெறுகிறது?**

சுவாமித்தரமாக

**19861) குசேலனிடம் நட்பு பாராட்டியமை எப்படி கருதப்பெறுகிறது?** சௌசீல்யமாக

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 55



தீயவைகளை சகித்துக் கொள்வதாலும், அதனை தடுக்காமல இருப்பதாலும் கண்டும் காணாமல் இருப்பதாலும் தீயவைகள் பெருகும். இவைகளால்தான் துஷ்டத்தனம் தூண்டப்படுகிறது. சுயநலம், குறுகிய மனப்பான்மை கோழைத்தனம் ஆகியவை அநீதியை உருவாக்குகின்றன. சாதாரண விஷயமாகத் தோன்றும் இவை தான் அநீதியின் தாயாகும். கொலை, கொள்ளை, பலாத்காரம் ஆகியவை சட்டத்தின் பார்வையில் தண்டனைக்குரிய குற்றங்களாகும். அதே போல் சுயநலம் குறுகிய மனப்பான்மை. சமுதாய பொறுப்புகளைத் தட்டிக் கழித்தல் போன்றவை தெய்வத்தின், ஆன்மீகத்தின் சட்டப்படி பெரும் பயங்கர பாவமாகும்.

மக்களின் இவ்வித மனப் போக்கின் காரணமாகத் தான் தனி மனிதனும், சமுதாயமும் வீழ்ச்சியடைக்கின்றன. இதன் தீய விளைவுகளை நாம் அனைவரும் அனுபவிக்க நேரிடுகிறது. கடந்த காலங்களில் இவை தான் நடந்து வந்துள்ளன. அவரவர்கள் தந்த மது குடில்களில் அமர்ந்து கொண்டு காலம் கழித்து வந்தனர். துஷ்டர்கள் எதிர்த்து சிறிதும் பெரிதுமான கட்டுப்பாடுகளை விதித்து தடை செய்யாமையால் இந்நிலை வந்துள்ளது. கடினமான இத்தருணத்தில் நமக்கு பெரும் பொறுப்பு உள்ளது என்பதை அறிந்து செயல் புரிவோம்.

எலும்பும் தோலும் கொண்ட பொம்மை போன்று பலவீன உடலுடன் வாழ்வது இழிவான வாழ்க்கையாகும். சாதாரண உயிரினங்கள், விலங்குகள், பறவைகள் போல தோல் போர்த்திய பிணங்களைப் போல வாழ்வது இழிவான வாழ்க்கையாகும். இவ்வாறு வாழ்வதால் வாழ்வின் நோக்கம் நிறைவேறாது.

சிந்திக்கும் ஆற்றல் தான் மற்ற உயிரினங்களிலிருந்து மனிதனை சிறப்பித்துக் காட்டுகிறது. அதனால் தான் அவன் வசதி வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்கிறான். இதுவே சிந்தனையின் முதல் வெளிப்பாடு எப்போது எண்ணங்கள் சக்தி வாய்த்தாக வாழ்க்கையின் குறிக்கோளாக அதன் வடிவமாக அவைகளை பயன்படுத்தும் புரிதலாக உருவாகிறதோ அது சிந்தனையின் அடுத்த வெளிப்பாடு ஆகும். இந்த வழியையும், முயற்சியையும் தான் நாம் தத்துவ ஞானம், தத்துவம், ஆன்மீகம் என விளிக்கிறோம்.

கடவுளால் வழங்கப்பட்ட இந்த எண்ண வலிமையை பெரும் லட்சியத்தை அடைவதற்காகவே பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு செய்பவனின் வாழ்க்கை முறை முற்றிலும் மாறி, அவனுடைய ஒவ்வொரு செயலிலும் உற்சாகம் மிகுந்திருப்பதால் அவன் ஒரு முன்னுதாரணப் புருஷனாக, நிறைந்த வாழ்க்கையை வாழ்கிறான்.



மேல் மாகாண தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் நடாத்தப்படும் தந்தை செல்வா அறநெறி பாடசாலைகளுக்கான மாணவ முதல்வர்களை தெரிவு செய்யும் நிகழ்வு நடைபெற்ற போது பிரதம விருந்தினராக கலந்துகொண்ட விவேகானந்தா சபையின் ஊடக பொறுப்பாளர் தயாநிதி மாணவர்களுக்கு சின்னங்களை அணிவிப்பதையும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# கிழக்கின் குரல்



# கிழக்கு மாகாண தமிழ்த் தின போட்டிகள் நாளை திருகோணமலையில் ஆரம்பம்

**பெரியநீலாவணை தினகரன் நிருபர்**

அகில இலங்கை தமிழ் மொழித் தினப் போட்டிகளின் கிழக்கு மாகாணத்திற்கான அரங்கப் போடடிகள், நாளை (26) செவ்வாய்க்கிழமை திருகோணமலை புனித மரியாள் கல்லூரியில் நடைபெறவுள்ளது.


மாகாணக்கல்விப் பணிப்பாளர் அ.கனகசூரியம் தலைமையில் காலை 8.30 மணிக்கு ஆரம்ப நிகழ்வு இடம்பெற்று, அதனைத் தெடர்ந்து மாகாண மட்ட அரங்கப் போட்டிகள் நடைபெறவுள்ளன.அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர்.

வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, பேச்சு, பாவோதல், இலக்கிய விமர்சனம், அறிவிப்பாளர்,இசையும் அசையும், இசைதனி, இசை குழு, நடனம் தனி, நடனம்குழு, நாட்டிய நாடகம்,நாட்டார் பாடல், இலக்கிய நாடகம், வில்லுப்பாட்டு, விவாதம், தமிழறிவு வினாவிடை, முஸ்லிம் நிகழ்ச்சி, இலக்கிய நாடகம், நவீன நாட்டுக்கூத்து ஆகிய நிகழ்வுகள் அன்றைய தினம் நடைபெறவுள்ளன. திருகோணமலையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வுகளுக்கு வெளி மாவட்டங்களிலிலிருந்து வருகை தரும் மாணவர்கள், ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மாகாண கல்வித் திணைக்களம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது. ஆண்களுக்கு புனித சூசையப்பர் கல்லூரியிலும் பெண்களுக்கு புனித மரியாள் கல்லூரியிலும் இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அகில இலங்கை தமிழ் மொழித் தின தேசிய மட்டப் போட்டிகள் ஒக்டோபர் (28) கொழும்பில் இடம்பெறவுள்ளது.

## விசேட நிபுணத்துவ கற்கைநெறிக்கு பாத்திமா நௌபீன் பிரிட்டன் பயணம்



கல்முனையைச் சேர்ந்த சிறுபிள்ளை விசேட வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எம்.எச். பாத்திமா நௌபீன்,

சுகாதார அமைச்சின் அனுசரணையில் விசேட நிபுணத்துவ உயர் கற்கை நெறியை மேற்கொள்வதற்காக பிரிட்டன் பயணமானார்.

இவர் இறுதியாக அநுராதபுரம் பதவிய ஆதார வைத்தியசாலையில் சிறுபிள்ளை விசேட வைத்திய நிபுணராக கடமையாற்றினார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, பொலன்னறுவை பொது வைத்தியசாலை மற்றும் கொழும்பு லேடிரிஜ்வே சிறுவர் போதனா வைத்தியசாலை என்பவற்றிலும் இவர் கடமையாற்றியிருந்தார்.

கல்முனை பிராந்தியத்தின் முதல் பெண் சிறுவர் விசேட வைத்திய நிபுணரான இவர், கொழும்பு தேசிய வைத்தியசாலை வைத்தியர் ஏ.எம். முஹம்மட் இர்பாமின் பாரியாரும் கல்முனையைச் சேர்ந்த அல்ஹாஜ் எஸ்.கே. ஹனிபா மற்றும் ஹாஜியானி பரீதாவின் கனிஷ்ட புதல்வியுமாவார்.

இந்த உயர் கற்கை நெறிகள் இரண்டு வருடங்களைக் கொண்டதாகும்.

## மருத்துவ பரிசோதனை முகாம்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

கிண்ணியா நகர சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கான மருத்துவப் பரிசோதனை முகாம் ( 23) நகர சபையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

கிண்ணியா தளவைத்தியசாலை வைத்தியர் எம்.எஸ்.சவ்பான் மற்றும் அவர்களது குழுவினரால் நகர சபை வளாகத்தில் இம்மருத்துவ பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. நகர சபையின் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் 60 பேருக்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்று பயன்பெற்றனர்.

நகர சபையின் வேண்டுகோளுக்கிணங்க மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்ட வைத்தியர், ஜனாப் சவ்பான், தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார ஊழியர்கள் அனைவருக்கும் நகர சபை நிர்வாகத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

## குரங்குகளால் வீட்டுத்தோட்டங்களுக்கு பாதிப்பு: கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

**சவளக்கடை குறூப் நிருபர்**

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராமங்களில் குரங்குகளின் அட்டகாசம் நாளுக்கு, நாள் அதிகரித்து வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்காவிடின் பொருளாதாரத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்படும் என்றும் இவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து கவனம் எடுக்குமாறும் இவர்கள் கோரியுள்ளனர்.

தினமும் பகல் வேளையில் பிரதேசத்திற்குள் வரும் குரங்குகள் மரவள்ளித் தோட்டம், வாழைத் தோட்டம், கத்தரி தோட்டம் போன்ற வீட்டுத் தோட்டத்திலுள்ள பயிர்களையும், மாதுளை, பப்பாசி போன்ற பழப்பயிர்களையும் நாளாந்தம் சேதப்படுத்திச் செல்கின்றன.

இதேவேளை, பாடசாலை மற்றும் பகுதி நேர வகுப்புகளுக்கு செல்லும் மாணவர்கள் மற்றும் சிறுவர்கள் குரங்குகளின் அட்டகாசத்தால் பல்வேறு சிரமங்களுக்கும் உள்ளாகி உள்ளனர்.

சில மாணவர்கள் வெளியில் செல்வதற்கு அஞ்சுவதாகவும் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.

மரங்களில் தாவித் திரியும் குரங்குகளை விளையாட்டாக சிறுவர்கள் விரட்ட முற்படும்போது, குரங்குகளின் தாக்குதல்களுக்கும் சிறுவர்கள் ஆளாகின்றனர்.

இதனால், வெளியில் செல்லும் பிள்ளைகள் வீடு திரும்பும் வரைக்கும் பெற்றோர்கள் அச்சத்துடனே காத்திருக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

வீதியோரங்கள் மற்றும் வீட்டில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்கள் மற்றும் உடமைகளுக்கும் குரங்குகளால் சேதம் ஏற்படுத்தப்படுகின்றன.

இதனை கவனத்திற்கொண்டு வனஜீவராசி திணைக்களமும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் குரங்குகளின் அட்டகாசத்தை கட்டுப்படுத்த வேண்டும் என்கின்றனர்.

## பிராந்திய முகாமையாளராக பதவி உயர்வு

**ஆரையம்பதி தினகரன் நிருபர்**



மட்டக்களப்பு மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளராக நாகலிங்கம் அருட்செல்வன் பதவி உயர்வு பெற்றுள்ளார்.இவர், தமது கடமையை அண்மையில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

1993இல்,மக்கள் வங்கி எழுதுநராக நியமனம் பெற்று மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை போன்ற இடங்களில் முப்பது வருட கால சேவையை பூர்த்தி செய்தவர் இவர். இந்நிலையிலே, மட்டக்களப்பு மாவட்ட மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளராக பதவியுயர்வு பெற்று கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். ஆரையம்பதியை சேர்ந்த இவர், இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியும் ஆளுநர் அலுவலக உதவி செயலாளராகவும் கடமை புரிந்த அமரர் அன்புமணியின் புதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் சங்கத்தின் தலைவராக தெரிவு

**ஒலுவில் விசேட நிருபர்**



தென்கிழக்குப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கத்தின் புதிய தலைவராக பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் வியாழக்கிழமை (21) பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது.

புதிய தலைவருக்கான தெரிவுப் போட்டியில், பல்கலைக்கழக ஆசியர்களின் அதிகமான வாக்குகளை பெற்று பேராசிரியர் ஏ.எம். எம். முஸ்தபா புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக முதற் தொகுதி மாணவர்களுள் ஒருவராகிய பேராசிரியர் எ.எம்.எம். முஸ்தபா, கடந்த காலங்களிலும் தென்கிழக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவராகவும் பணியாற்றியிருந்தார்.

இந்நிலையிலே, இவர் மீண்டும் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



அம்பாறை மாவட்ட பிரதேச செயலக மட்டத்திலான கலாசார மற்றும் இலக்கிய போட்டிகள் அண்மையில் அக்கரைப்பற்று அல்முனவ்வரா பாடசாலையில் இடம்பெற்றது. இதில், 15 முதல் 18 வயது வரையிலான மாணவர்கள் பங்கேற்றனர். சமுர்த்தி தலைமை முகாமையாளர் எம் ஜே எம். நிஹ்மத்துல்லாஹ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி. ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார். மாவட்ட சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்களான கே. நேசராசா, எம்.இஸ்மாயில், குணதிலக உள்ளிட்ட பலர் இதில் கலந்து கொண்டனர். இங்கு நடைபெற்ற நிகழ்வொன்றை படத்தில் காணலாம். (திராய்க்கேணி தினகரன் நிருபர்)

## சாரணர் சங்கத்தின் விஷேட கூட்டம்

**பாலமுனை தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் விஷேட கூட்டம் அக்கரைப்பற்று காரியாலயத்தில் (24) நடைபெற்றது.

மாவட்ட ஆணையாளர் எம்.ஐ.உதுமாலெவ்வை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், சங்கத்தின் தவிசாளர் யூ.எல்.எம். ஹாசிம் உட்பட உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரண ஆசிரியர்கள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

சாரணர் வாரத்தை முன்னிட்டு மாவட்ட சாரணர் சங்கத்தினால் முன்னெடுக்கப்படவுள்ள சாரணர் விழிப்புணர்வு செயலமர்வு, நட்பு மேம்பாட்டு திட்டம், இளைஞர் மற்றும் குழந்தைகள் ஒற்றுமை, பல்வேறுபட்ட மத ரீதியான நிகழ்வு, சுற்றுச் சூழல் ஒருங்கிணைப்பு, அனர்த்த முகாமைத்துவ குழு நியமித்தல் போன்ற திட்டங்களை நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

## சுருக்கு வலைகளுக்கான தடை: இரு தரப்பினருடனும் பேசுவது அவசியம்

**முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்**



திருகோணமலை மாவட்ட மீன்பிடி தடை குறித்து கிழக்கு மாகாண ஆளுநர் எடுத்துள்ள முடிவு, மீனவர்களின் வாழ்வாதாரத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதால், இது குறித்து ஆளுநர், உடன் மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட மீனவ குழுக்களுக்கிடையில் நிலவும் முறுகல்நிலை மற்றும் இது குறித்து ஆளுநர் எடுத்த தீர்மானம் தொடர்பில், பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில்கருத்து தெரிவித்த அவர்:

சுருக்குவலையைப் பொறுத்த வரை அனுமதிக்கப்பட்ட சுருக்கு வலை, அனுமதிக்கப்படாத சுருக்கு வலை என இரண்டு வலைகள் உள்ளன. இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலும் உள்ளது.

கிண்ணியா, மூதூர், திருகோணமலை, நிலாவெளி, இறக்கக்கண்டி, குச்சவெளி, புடவைக்கட்டு, புல்மோட்டை, வெருகல் போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த 5000 க்கு மேற்பட்ட மீனவர்கள்,சட்டரீதியாக அனுமதிக்கப்பட்ட சுருக்கு வலை மூலமே மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

இதைவிடுத்து,சகல சுருக்கு வலைகளுக்கும் ஆளுநர் தடை விதித்துள்ளார்.இதனால்,திருகோணமலை மாவட்ட சிறுபான்மை மீனவ சமூகங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மீனவக் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தொழில் போட்டி காரணமாகவே இங்கு முறுகல் நிலை ஏற்பட்டது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் இரண்டு குழுக்களையும் அழைத்து இருபக்க நியாயங்களையும் கேட்ட பின்பே தீர்மானத்திற்கு வர வேண்டும்.

கிழக்கு மாகாண ஆளுநர் இரு தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிந்ததாகத் தெரியவில்லை.

இது குறித்து அவரை நேரில் சந்தித்து விடயத்தை தெளிவு படுத்த முயற்சித்த போதும், அவரைச் சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டது. திருகோணமலை மாவட்ட மீன் தேவைகளில் ஐம்பது வீதமானவை, சுருக்கு வலை மூலமே பூர்த்தி செய்யப்படுகிறது.

சாதாரண மீனவக் குடும்பங்கள் இத் தொழிலேயே தங்கியுள்ளன. எனவே, இரு தரப்பு நியாயங்களையும் கேட்டறிந்து பூரண தகவல்களைப் பெற்ற பின்னரே உரிய நடவடிக்கைகள் எடுப்பதே உரிய தீர்வாக அமையுமென்றும் அவர் தெரிவித்தார்.

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் முன்னிலை அலுவலகம்

**பாலமுனை விசேட நிருபர்**



மக்களின் நன்மை கருதி கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் முன்னிலை அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. தேவை நிமிர்த்தம் வருகை தரும் அலுவலர்கள் மற்றும் பொதுமக்களின் நலன்கருதி பணிமனையின் கீழ் தளத்தில், இந்த முன்னிலை அலுவலகம் (Front Office) திறக்கப்பட்டுள்ள தாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை

பொதுமக்கள், சுகாதார உத்தியோகத்தர்களின் நலன்கருதி பல்வேறுபட்ட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.இச்சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் புதிய நடைமுறை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தினமும் பணிமனைக்கு வருகை தரும் சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களின் தேவைகளை சிரமமின்றி நிறைவேற்றிக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு இந்த முன்னிலை அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த முன்னிலை அலுவலகத்தில் கடமையிலிருக்கும் உத்தியோகத்தர்கள், மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து விடயத்திற்குப் பொறுப்பான அதிகாரி அல்லது உத்தியோகத்தரின் கவனத்திற்கு கொண்டு செல்வார்.

விடயத்திற்குரிய அதிகாரி அல்லது உத்தியோகத்தரை சந்தித்து, வருகை தருவோர் தங்களது தேவையை நிறைவு செய்ய முடியும். இந்த அலுவலகம் திறக்கப்பட்டதால்,

தேவை நிமிர்த்தம் பிராந்திய பணிமனைக்கு வருபவர்கள் அதிகாரிகளையோ அல்லது உத்தியோகத்தர்களையோ சந்திப்பதற்கு அதிக நேரம் காத்திருக்க வேண்டிய அவசியம் இல்லாது போயுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யானைகள் நடமாடியதால் பிரதேச மக்கள் பெரும் பீதி

**ஏறாவூர் சுழற்சி நிருபர்**

ஏறாவூர் வாவிக்கரைப் பகுதியில் கடந்த சனிக்கிழமை (23) இரவு யானைகள் நடமாடியதால் அப்பகுதி வாழ் பொதுமக்கள் பெரும் பீதிக்குள்ளாகினர். இவ்வாறு, இரவு நேரங்களில் இப்பகுதியில் யானைகள் நடமாடுவதுடன், அப்பகுதியில் சேதங்களை எற்படுத்த முனைகின்றன. இது தொடர்பில் ஏறாவூர் நகர சபையின் முன்னாள் தவிசாளர் எம். எஸ்.நளீம் மற்றும் ஏறாவூர் நகர சபையின் செயலாளர் எம்.எச்.எம். ஹமீம் ஆகியோர் அவசர நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.



ஆரையம்பதி03 அருள்மிகு வெள்ளை மணல் ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் ஆலய தேர்த் திருவிழாவில்,நிருத்தாஞ்சலி நாட்டிய நிகழ்வு நடத்திய மாணவிகளுக்கு கௌரவம் வழங்கப்பட்டது. முனைவர் பட்டய ஆய்வாளர் திருமதி வசந்தி நேருவின் நெறிப்படுத்தலில், இந்நாட்டியம் இடம்பெற்றது. ஆரை யம்பதி ஸ்ரீ அரசடிப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையினர் நடனமாடிய மாணவிகளுக்கும் நெறிப்படுத்திய பட்டய ஆய்வாளர் திருமதி வசந்தி நேருவுக்கும்"நாட்டிய கலைஞான சுடர் " எனும் விருது வழங்கி கௌரவித்தனர். (ஆரையம்பதி தினகரன் நிருபர்)

## மட்டக்களப்பு கல்லடி வேளாங்கண்ணி ஆலய வருடாந்த திருவிழா நிறைவு

**கல்லடி குறூப்நிருபர்**

மட்டக்களப்பு மறை மாவட்டத்தின் கல்லடி கடற்கரையில் அமைந்திருக்கும் பழமை வாய்ந்த, அன்னை வேளாங்கண்ணி ஆலயத்தின் வருடாந்த திருவிழா நேற்று கொடியிறக்கத்துடன் நிறைவடைந்துள்ளது.ஆலய பங்குத்தந்தை அருட்பணி லோரன்ஸ் லோகநாதன் அடிகளார் தலைமையில் கடந்த (21) கொடியேற்றத்துடன் இத்திரு விழா ஆரம்பமானது. நவ நாட்காலங்களில் இத்திருவிழா தினமும் மாலை திருச்செபமாலையும் தொடர்ந்து திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. கடந்த சனிக்கிழமை மாலை அன்னையின் திருவுருவ பவனி இடம்பெற்றதனைத் தொடர்ந்து நற்கருனை ஆராதனை இடம்பெற்றது.இதனைத் தொடர்ந்து நேற்று (24) திகதி ஞாயிற்றுக்கிழமை காலை அருட்தந்தை எக்ஸ்.ஐ.ரஜீவன் அடிகளார் தலைமையில் திருவிழா கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, கொடியிறக்கத்துடன் இவ்வாண்டிற்கான ஆலய திருவிழா இனிதே நிறைவடைந்தது .இத்திருவிழா கூட்டுத் திருப்பலியில், மட்டக்களப்பு மாவட்ட இயேசு சபை மேலாளர் அருட்தந்தை சகாயநாதன் அடிகளார், அருட் தந்தையர்களான ஜோன் ஜோசப்மேரி, அனிஸ்டன், அருட்சகோதரிகள், அருட்பணியாளர்கள், துறவியர்கள் பங்கு மக்கள் மற்றும் அயல்பங்கு மக்கள் என அதிகளவிலானோர் இதில்,கலந்து கொண்டனர்.

# சவுதி அரேபியாவின் 93வது தேசிய தினம்

VISION 2030 KINGDOM OF SAUDI ARABIA

23 செப்டெம்பர் 2023

## சவுதி அரேபியாவின் 93வது தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் கௌரவ காலித் ஹமூத் அல்கஹ்டானி அவர்களின் செய்தி



சவுதி அரேபியாவின் 93வது தேசிய தினத்தை நாம் கொண்டாடும் இவ்வேளையில், எமது கடந்த காலத்தை கொண்டாடுவது மட்டுமல்லாமல், ஒளிமயமான எதிர்காலத்தையும், அனைத்தையும் உள்ளடக்கிய, நிலையான, புதுமைகள் நிறைந்த மற்றும் வளமான எதிர்காலத்தை சவுதி அரேபிய இராச்சியத்தின புத்திசாதுர்யமான தலைமைத்துவத்தின் கீழ் கற்பனை செய்கிறோம்.

இன்று, சவுதி அரேபியா அதன் 93 ஆவது தேசிய தினத்தைக் கொண்டாடுகிறது. மன்னர் அப்துல அசீஸ பின் அப்துல் ரஹ்மான் ஆல்ஸுஊத் அவர்கள் தொண்ணூற்றுமூன்று ஆண்டுகளுக்கு முன்னர் இதுபோன்ற ஒருநாளில்தான்சவுதிஅரேபியாவை நிறுவினார். இந்நாளில் ஒவ்வொருஆண்டும், நிறுவனர்எடுத்த வீரநிலைப் பாடுகளை நாம் நினைவுகூறுகிறோம். இராச்சியத்தை ஒன்றிணைத்து, ஒருங்கிணைத்து, அதனைக கட்டியெழுப்பினார். பின்னர் அவர் ஆரம்பித்து வைத்த பயணத்தை, தொடர்ந்துவந்த அனைத்து மன்னர்களும் தொடர்ந்தது மட்டுமல்லாது சவுதி அ ரேபிய இராச்சியத்தை, பிராந்திய மற்றும் உலகஅளவில் உயர்பொருளாதார மற்றும் வளர்ச்சி அடைந்த நாடக மாற்றுவதில் பெரும்ப ங்களிப்புச் செய்தனர்.

இச்சந்தர்ப்பத்தில், இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான்பின் அப்துல் அசீஸ் அவர்களுக்கும், பட்டத்து இளவரசரும் பிரதமருமான இளவரசர் முகம்மது பின் சல்மான் பின் அப்துல் அசீஸ் அவர்களுக்கும், சவூதி அரேபியா மக்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். தற்போதய உயர் தலைமைகளின் கீழ் இராச்சியம் மேலும் முன்னேற்றமும் மற்றும் அபிவிருத்தியும் அடைய வாழ்த்துகின்றேன்.

சவுதி அரேபிய இராச்சியம், இரண்டு புனிதத் தலங்களின் பாதுகாவலர் மன்னர் சல்மான் பின்அப்துல் அசீஸ் ஆல்ஸஊத் மற்றும் பட்டத்து இளவரசரும் பிரதமமந்திரி ஆகியோரின் வழிகாட்டுதல்கள் மற்றும் திட்டங்களின்கீழ், சவூதி அரேபிய இராச்சியத்தின் மூலோபாயத் திட்டமான "விஷன் 2030" ஊடாக பல்வேறு துறைகளிலும், அனைத்து மட்டங்களிலும், பாரிய வளர்ச்சிகளைக் கண்டுள்ளது. சவுதி அரேபிய இராச்சியத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கான நம்பிக்கையளிக்கும் எதிர்கால திட்டங்கள்மற்றும் அதன் குடிமக்களை அனைத்துமட்டங்களிலும் மேன்மையடையச் செய்வதற்க்கான ஆழமான மிகமுக்கிய திட்டங்களை இம்மூலோபாயத் திட்டம் உள்ளடக்கியுள்ளது. உதாரணமாக: மன்னர் சல்மான் பூங்கா, நியோம், திலைன், திநியூஸ்கொயர் திட்டம், சவுதி அரேபிய பசுமை முன்னெடுப்பு, மத்தியகிழக்கு பசுமை முன்னெடுப்பு, திரியாகேட் திட்டம், கிடியாதிட்டம், அல்-உலா மேம்பாட்டு திட்டம், ரா.: பிக் உவர்நீர் சுத்திகரிப்புத் திட்டம், அமலா திட்டம், சகாகா சூரியசக்தி மின் உற்பத்தித் திட்டம், செங்கடல் திட்டம் மற்றும் மன்னர் சல்மான் சக்திவள நகரத்திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் இதில் அடங்கும்.

சவுதிஅரேபியா, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பேணுவதில் ஒரு இன்றியமையாத பங்காளியாக விளங்குகிறது. இந்த ஆண்டு, சவுதி அரேபியா இராச்சியமானது சர்வதேச பாதுகாப்பு மற்றும் உலக அளவில் அமைதியை நிலைநாட்டும் நோக்கத்துடன் பல உச்சி மாநாடுகள், மாநாடுகள் மற்றும் சந்திப்புகளை அங்கு நடாத்தியது. அவ்வாறே சவுதி அரேபியாவானது உலகின்பல்வேறு நாடுகளிலும் வாழும் மக்களின் துன்பங்கள், துயரங்களைப் போக்கும் நோக்கோடு 7.12 பில்லியன் அமெரிக்க டாலர்களுக்குமேல் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிகளை (மனிதாபிமானம் மற்றும் அபிவிருத்தி ) வழங்கியுள்ளது. இதன் அடிப்படையில், 2022ஆம் ஆண்டில் உலகில் நன்கொடை வழங்கும் நாடுகளில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

மேலும், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும், பூமியைப் பாதுகாப்பதற்கும், காலநிலை அபாயங்களைக் குறைப்பதற்கும் சவுதி அரேபிய இராச்சியம் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. சவுதி அரேபிய பசுமை முன்னெடுப்பு, மத்திய கிழக்கு பசுமை முன்னெடுப்பு, ரியாத்தை தளமாகக் கொண்ட உலகளாவிய நீர்அமைப்பை நிறுவுவதற்கான பட்டத்து இளவரசர் மற்றும பிரதம மந்திரி அவர்களின் அறிவிப்பு மற்றும் சுத்தமான சக்திவளத்தில் தங்கியிருத்தல் உட்பட பல முன்னெடுப்புகள் மூலம் இம்முயற்சியானது மேலும் மெருகூட்டப்பட்டது.

சவுதி அரேபிய இராச்சியம் மற்றும இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசானது நீண்டகாலம் மிக உன்னதமான இருதரப்பு உறவுகளை பேணிவருகிறது. இரு நாடுகளுக்கிடையிலான இவ்வுறவுகள் பரஸ்பர ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டது. இவ்விரு நாடுகளுக்கிடையில்பல ஒப்பந்தங்கள் மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இரு நாடுகளின் மூத்த அதிகாரிகளின் பரஸ்பர விஜயங்கள் இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை வளர்ப்பதில் மேலும் பங்களிப்புச் செய்துள்ளன. வளைகுடா பிராந்தியத்தில் இலங்கையின மிகமுக்கியமான வர்த்தக பங்காளிகளில் ஒன்றாக சவுதிஅரேபிய இராச்சியம் கருதப்படுகிறது. 2022ஆம் ஆண்டில், இலங்கைக்கான இராச்சியத்தின் ஏற்றுமதியின் மொத்தஅளவு 714 மில்லியன் சவுதி ரியால்களை எட்டிய அதேவேளை, இலங்கையிலிருந்தான இராச்சியத்தின் மொத்த இறக்குமதியின் அளவு 508.863 சவூதி ரியால்களை எட்டியுள்ளது.

சவுதி அரேபிய இராச்சியம் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் மிக முக்கியமான பொருட்களில உலோகம், பிளாஸ்டிக் பொருட்கள், தோல் பதனிடும் பொருட்கள், வண்ணப்பூச்சுகள், கடதாசி மற்றும் அலுமினியம் ஆகியவை அடங்கும்.

அதேவேளை சவுதி அரேபிய இராச்சியம், கோப்பி, தேயிலை, வாசனைத் திரவியங்கள், ஆடைகள், பழங்கள் மற்றும் மீன் போன்ற பொருட்களை இறக்குமதி செய்கிறது. சவுதி-இலங்கை கூட்டுக்குழு, சவூதி அரேபியா இராச்சியத்தின் ரியாத் நகரில் இவ் வருடம மேமாதம் அதன் முதல் சந்திப்பை நடத்தியது.

இச் சந்திப்பின்போது இருநாடுகளுக்கிடையிலான பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு, கலாசாரம், சுற்றுலா போன்ற துறைகளோடுதொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இச்சந்திப்புக்களைத தொடர்ந்து, இலங்கை வர்த்தகர்களுக்கும், சவூதி அரேபிய வர்த்தக சம்மேளனத்தின் அதிகாரிகளுக்கிடையிலான சந்திப்பு ஒன்றும் ரியாத் நகரில் இடம்பெற்றது. மேலும் விரைவில் இருதரப்பினருக்கும் இடையே மேலும் பல சந்திப்புகள் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சவதி அரேபியா இராச்சியமானது இலங்கை குடியரசின்அபிவிருத்தி த்திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் ஒரு முக்கிய பங்காளியாகக் கருதப்படுகிறது. இந்த வகையில் இலங்கையின்க ல்வி, நீர்ப்பாசனம், விவசாயம் மற்றும் சாலைவலையமைப்பு திட்டங்களின் அபிவிருத்திப் பணிகளுக்காக மொத்தமாக 455மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு மேல் வழங்கியுள்ளது.

---


# முன்னேற்றப் பாதையில் சவுதி அரேபியா

## சவுதி அரேபியாவின் 93வது தேசிய தினத்திற்கு நல் வாழ்த்துக்கள்

نحلم ونحقق
اليوم الوطني السعودي 93









அதி மேன்மை தங்கிய இரு புனிதப் பள்ளிவாசல்களின் பாதுகாவலரும்
சவுதி அரேபிய மன்னருமான மேன்மை தங்கிய மன்னர்
**சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சஊத்,**
சவுதி அரேபிய இளவரசர், பிரதமர் மேன்மை தங்கிய
**முஹம்மத் பின் சல்மான்**



இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர்
மேன்மை தங்கிய
**காலித் ஹமூத் அல் கஹ்தானி**

அதி மேன்மை தங்கிய இரு புனிதப் பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவுதி அரேபிய மன்னருமான, மேன்மை தங்கிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சஊத் மற்றும் இளவரசரும் பிரதமருமான மேன்மை தங்கிய முஹம்மத் பின் சல்மான் இப்னு அப்துல் அஸீஸ் அல் சஊத், மற்றும் இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் மேன்மை தங்கிய காலித் ஹமூத் அல் கஹ்தானி ஆகியோருக்கும் சவுதி அரேபிய நாட்டு மக்களுக்கும் சவுதி அரேபியாவின் 93வது தேசிய தினத்தை முன்னிட்டு தனிப்பட்ட ரீதியிலும் எமது நிறுவனம் சார்பாகவும், இலங்கை மக்கள் சார்பாகவும் நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

பொருளாதார ரீதியிலும், அபிவிருத்தி ரீதியிலும் பாரிய முன்னேற்றங்களை அடைந்துள்ள சவூதி அரேபியா, மனிதாபிமான விடயங்களில் என்றும் முன்நிற்கின்ற நாடாகும். அந்நாட்டின் அபார வளர்ச்சியைக் கண்டு பெருமிதம் அடைகின்றோம். சவுதி அரேபியா அடைந்துள்ள முன்னேற்றம், பாரிய வளர்ச்சி, மறுமலர்ச்சி மற்றும் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய எண்ணற்ற சாதனைகள் என்பவற்றின் மூலம் உலகின் கவனத்தை சவுதி அரேபியா ஈர்த்துள்ளது. சவுதி அரேபிய மன்னரதும் இளவரசரதும் "நியோம்", "த லைன்", "விஷன்" 2030, எக்ஸ்போ 2030 போன்ற திட்டங்கள் பொருளாதார இலக்குகளை வெற்றிகரமாக்கும் வகையில் பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் சவுதி அரேபியாவின் பெயரை மென்மேலும் உயர்த்தியுள்ளது. சவுதி அரேபியாவின் சுதந்திரத்திற்கும் முன்னேற்றத்துக்கும் மூல கர்த்தாக்கள் மன்னர் அப்துல் அஸீஸ் அல் சஊத்தும் இளவரசர் முஹம்மத் பின் சல்மானும் ஆவர். அத்தோடு இந்நாட்டை ஆண்ட அனைவரும் சவுதியின் பாரிய முன்னேற்றத்திற்காக அயராது உழைத்துள்ளனர். அவர்கள் அனைவரும் என்றும் நினைவு கூறப்பட வேண்டியவர்களாவர்.

மேலும் இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையில் மிக நீண்ட காலமாக இராஜதந்திர நட்புறவு நிலவி வருகின்றது. அந்த வகையில் இலங்கையின் முன்னேற்றங்களுக்கு பலவிதமான உதவி, ஒத்துழைப்புக்களை நல்கிவருகிறது சவுதி அரேபியா. குறிப்பாக பாரிய அளவு நிதி உதவிகளையும் வழங்கியுள்ளது. அத்தோடு இலங்கை மக்களுக்காகத் தொடர்ந்தும் மனிதாபிமான உதவிகளையும் நல்கி வருகின்றது.

குறிப்பாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அதி நவீன மருத்துவ உட்கட்டமைப்பு கட்டடங்கள், இலங்கையின் மிகப்பெரிய கின்னியா பாலம், கிழக்கை நோக்கிய நீண்ட நெடுஞ்சாலை, பல்கலைக்கழகங்களுக்கு கட்டிட வசதிகள், சுனாமி, கொரோனா மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போதெல்லாம் தாராளமாக உதவியமை, சவுதி அரேபிய பல்கலைக்கழகங்களில் இலங்கை மாணவர்கள் மேற்படிப்பைத் தொடர ஒவ்வொரு வருடமும் இலவச புலமைப் பரிசில்கள், நோன்பு காலங்களில் தொன் கணக்கில் பேரீச்சம் பழம் இலவசமாக வழங்கப்படல், உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்கியமை, இலங்கையில் முதற் தடவையாக பெருந்தொகைப் பணப்பரிசில்களுடன் தேசிய மட்ட குர்ஆன் மனனப்போட்டியை நடாத்தியமை, இலங்கை - சவுதி அரேபிய பாராளுமன்ற நட்புறவு ஒன்றியம் இலங்கை - சவுதி அரேபிய பொருளாதார கூட்டு ஒப்பந்தங்கள், "எல்லைகள் இல்லாத மனித நேயத்தை நோக்கி" என்ற தொனிப்பொருளில் மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி மற்றும் நிவாரண மையத்தின் மூலம் இலங்கையில் இன, மத, பிரதேச வேறுபாடுகள் இன்றி வறுமைக் கோட்டின் கீழ் வாழும் ஏழை மக்களுக்கு இலவச கண் சத்திர சிகிச்சை முகாம்கள் நடாத்தப்பட்டமை உட்பட பல்வேறு வகையான மனிதாபிமான உதவி, ஒத்துழைப்புகளை அளித்து வருகின்றன.

அத்தோடு அதிகளவிலான சவுதி அரேபிய சுற்றுலாப் பயணிகளின் வருகை, இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. அதேநேரம் சவுதி அரேபியாவின் விஷன் 2030 கீழ் புனித உம்ராவை நிறைவேற்றவும், மதீனாவில் தொழவும், புனித இடங்கள் மற்றும் புராதனச் சின்னங்களை தரிசிக்கவும் பல்லாயிரக்கணக்கான விசாக்களை வழங்கியமை உட்பட பல தரப்பட்ட விசாக்களை அறிமுகம் செய்துள்ளன. அவ்விசாக்கள் மூலம் சவுதி அரேபியாவுக்குள் நுழையும் இலங்கையர்கள் உம்ராவையும் சேர்த்துச் செய்ய அனுமதித்தமை, இலங்கையில் இருந்து வருடா வருடம் உலமாக்கள், புத்திஜீவிகள் என பலரை மன்னர் சல்மானின் செலவில் ஹஜ் கடமையை இலவசமாக நிறைவேற்ற வாய்ப்பளிக்கின்றமை, சூடானின் உள்நாட்டுப் போரில் சிக்குண்டு நிர்க்கதியான இலங்கையர் உட்பட உலகின் பல நாடுகளைச் சேர்ந்தவர்களையும் தம் முழு செலவிலும் மீட்டெடுத்து பாதுகாப்பாக அவர்கள் தத்தம் நாடுகளுக்கு செல்ல சவுதி ஏற்பாடு செய்து கொடுத்தமை என்பவற்றை அனைவரும் அறிவர். இலங்கையைச் சேர்ந்த நிர்க்கதியானவர்களையும் மீட்டெடுத்து எமது நாட்டுக்கு அனுப்பி வைத்தமை என சவுதி அரேபியாவின் மனிதாபிமான செயற்பாடுகள் காணப்படுகின்றன. அவை எம்மை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. அந்த வகையில் சவுதி-இலங்கை வலுவான நட்புறவு நாடுகள் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படும் அனைத்து செயற்பாடுகளிலும் சவுதி அரேபியா இலங்கையின் பக்கமே உள்ளது என்பதும் இங்கே விசேடமாகக் குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

93 வது சுதந்திர தினத்தைக் கொண்டாடும் இச்சிறந்த தினத்தில் அதி மேன்மை தங்கிய இரு புனிதப் பள்ளிவாசல்களின் பாதுகாவலரும் சவுதி அரேபிய மன்னருமான, மேன்மை தங்கிய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அல் சஊத் மற்றும் சவுதி அரேபிய இளவரசர் மேன்மை தங்கிய முஹம்மத் பின் சல்மான் இப்னு அப்துல் அஸீஸ் அல் சஊத், மற்றும் இலங்கைக்கான சவுதி அரேபியத் தூதுவர் மேன்மை தங்கிய காலித் ஹமூத் அல் கஹ்தானி ஆகியோருக்கும், சவுதி மக்கள் அனைவருக்கும் தனிப்பட்ட ரீதியிலும் எமது நிறுவனம் சார்பாகவும் இலங்கை மக்கள் சார்பாகவும் மீண்டும் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, தங்களுக்கு சுபீட்சமான வாழ்வையும் நீண்ட ஆயுளையும் சிறப்பான எதிர்காலத்தையும் தந்து மென்மேலும் உலக மக்களுக்கும் இலங்கை மக்களுக்கும் சேவை செய்ய நல்ல திடகாத்திரம் கிடைக்கப்பெற்றிடவும், சவுதி-இலங்கை நற்புறவு என்றும் நிலைத்து வலுவானதாக இருக்கவும் எல்லாம் வல்ல அல்லாஹ்விடம் பிரார்த்திக்கின்றேன்.



மௌலவி அஷ் ஷெய்க் எம்.எச். சேஹூத்தீன்
(பீ.ஏ மதனி)
பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு

AHWA

அல் ஹிக்மா நலன்புரி நிறுவனம்,
109/1/1, ஆனந்த மாவத்தை, மருதானை, கொழும்பு 10, இலங்கை.
தொலைபேசி: 0094773550287, 0094112691873
மின்னஞ்சல்: sdeenmh@gmail.com, alhikmawelfare@gmail.com



# சவுதி அரேபியாவின் 93வது தேசிய தினம்

23 செப்டெம்பர் 2023

VISION 2030 KINGDOM OF SAUDI ARABIA

# சவுதி அரேபியாவின் ''நியோம் திட்டம்'' 2030

"2030 க்கான நோக்கு'' எனும் தொனிப்பொருளில், மன்னர் ஸல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களின் பதவியேற்புக்குப் பின்னர், இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் அவர்களின் நேரடி வழிகாட்டலில் சவுதி அரேபிய அரசாங்கம் பாரிய முன்னேற்றத் திட்டமொன்றை செயற்படுத்தி வருகின்றது. 2030 இல் நிறைவடைய எதிர்பார்க்கப்படும் மேற்படித் திட்டத்தின் மூலம், தமது பொருளாதாரத்தில், எண்ணை வளத்தில் மாத்திரம் தங்கியிருக்காமல், அதற்கான மூலங்களைப் பல்வகைப்படுத்தி, உலகின் பலம்பொருந்திய பொருளாதார வளம் கொண்ட நாடாக சவுதி அரேபியாவை மாற்றுவதே இதன் முக்கிய நோக்கமாகும். இதற்காகச் செயற்படுத்தப்படும் திட்டங்களில் ஒன்றே "நியோம்" திட்டமாகும்.

## நீயோம் எனப்படுவது...

NEO எனப்படுவது கிரேக்க மொழியில், "புதியது" என்ற அர்த்தத்தைத் தருகின்றது.M என்பது, அரபியில் எதிர்காலத்தைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் "முஸ்தக்பில்" என்பதனையும், இத்திட்டத்தின் காரண கர்த்தாவாகிய இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் அவர்களையும் குறிக்கின்றது.

சவுதி அரேபியாவின் வடமேற்குப் பகுதியில், ஜோர்டான் மற்றும் எகிப்து எல்லைகளோடு தொடும் விதத்தில் 26,500 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள ஒரு பிரதேசத்திலேயே ''நியோம்'' திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

**இவ்விடம் பல விதங்களில் முக்கியத்துவம் பெறுகின்றது.**

1. சர்வதேச வணிக இயக்கத்தின் கிட்டத்தட்ட 10 வீதமானவை செங்கடலைத் தாண்டியே சொல்கின்றன.
2. ஆசிய, ஐரோப்பிய, ஆபிரிக்க மற்றும் அமெரிக்கக் கண்டங்களை இணைக்கும் விதத்தில், 70 விதமான உலக மக்களுக்கு குறைந்தபட்சம் எட்டு மணித்தியாலங்களுக்குள் இவ்விடத்தை வந்தடையலாம்.
3. வளைகுடா நாடுகளிலேயே மிகவும் குளிரான பிரதேசமாக இது உள்ளது.
4. கிட்டத்தட்ட 460 கிலோமீட்டர் தொலைவு நீளமான கடற்கரை உள்ளது.
5. 2500 மீட்டர் உயரமான மலைகள் இங்கு உள்ளன.
6. உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் விதத்தில் பிரம்மாண்டமான பாலைவனங்களும் உள்ளன.

**ஏன் நியோம் திட்டம்?**

1. சவுதி அரேபியாவின் பொருளாதாரத்தை வளப்படுத்துதல், அதற்கான மூலங்களை பல்வகைப் படுத்தல், வளர்ச்சியிலும் முன்னேற்றத்திலும் உலகளாவிய தலைமையை அடைவது.
2. உலகின் பல்வேறு திசைகளில் இருந்தும் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் தமது புதிய எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கில் இங்கு வாழவும் பணிபுரிய இடம் வழங்குவதோடு, கண்டுபிடிப்பு, பன்மைத்துவம் மற்றும் சாகசங்கள் காணும் மத்திய நிலையமாக அமைத்துக் கொடுத்தல்.
3. சமூக ஆரோக்கியம், சூழல் பாதுகாப்பு, முறையான உற்பத்தித் திறன் மிக்க, தொழில்நுட்பப் பயன்பாடு என்பவற்றிற்கு புதியதொரு முன்னுதாரணத்தை வழங்கல்,
4. பன்மைத்துவ சமூக அமைப்பு, ஆய்வு நிலையங்கள், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு இடங்கள் என்பவற்றை மனித தேவையுடன் ஒத்துப்போகும் விதத்தில் அமைத்துக் கொடுத்தல்

நீர் மற்றும் எரிசக்தி, போக்குவரத்து, சுற்றுலா, ஊடகம் போன்றவை உள்ளடங்கலாக, பிரதானமான ஒன்பது துறைகளில் மேற்படித் திட்டத்தின் மூலம் பாரிய முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.






**அஷ்-ஷைக் லபர் அஜ்வாத் ( B.A.)**
**விரிவுரையாளர்**
**இப்னு அப்பாஸ் அரபிக் கல்லூரி**

# இரண்டு புனிதஸ்தலங்களுக்கும் சேவை செய்வதை தங்கள் ஆட்சியின் தலையாய கடமையாகக்கொண்டவர்கள் ஆலு ஸுஊத் ஆட்சியாளர்கள்

மத்திய கிழக்கில் பெரும் நிலப்பரப்பைக் கொண்ட நாடாக காணப்படும் சவுதி அரேபியா ஒரு காலத்தில் எவராலும் கவனிக்கப்படாத வெறும் பாலைவனப் பிரதேசங்களாகவே காணப்பட்டது. பயனற்ற இடங்களாக அவை இருந்ததனால் மக்கா ,மதீனா தவிர உஸ்மானியப் பேரரசும் கூட தனது ஆளுகையின் கீழ் அந்நிலங்களைக் கொண்டுவருவதற்கு ஆர்வம் காட்டவில்லை. அதனால் சிறு சிறு இராட்சியங்களாகப் பிரிந்து குழுச்சண்டைகளும் கோத்திர மோதல்களும் நிறைந்த இடங்களாக காணப்பட்டன. இந்நிலையை மாற்றி சிறந்த நாகரீகத்தைக் கொண்ட ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்க வேண்டும், இப்பிரதேசங்கள் அனைத்தையும் ஒற்றுமைப்படுத்தி பலமான ஓர் ஆட்சியை உருவாக்க வேண்டும் எனும் நோக்கில் 26வயது மதிக்கத்தக்க இளைஞனாக இருந்த வீரத்திற்கும் அறிவிற்கும் பேர்போன சமயோசித சிந்தனைமிக்க இளவரசர் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களை அவரது தந்தை மன்னராக ஆக்கினார். ரியாதை தலைமையகமாக கொண்டு இயங்கிய அரசை பொறுப்பேற்று சொற்ப காலத்தில் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கிய ஒரு பெரும் அரசை உருவாக்கினார். அப்பிரதேசங்கள் அனைத்தையும் ஒற்றுமைப்படுத்தும் வகையில் சவுதி அரேபிய இராச்சியம் என்ற பெயரிலேயே இது இனிவரும் நாட்களில் அழைக்கப்படவேண்டும் என்று ஹி.17 ஜுமாதா அல்



ஊலா 1351 (1932.09.23) ஆம் ஆண்டு கட்டளையிட்டார். அன்றிலிருந்து சவுதி அரேபிய இராட்சியம் என்ற பெயரில் அழைக்கப்படுவதுடன் அந்நாளை தேசிய தினமாகவும் சவுதி அரேபியா கொண்டாடி வருகின்றது. கனவு காண்போம் சாத்தியப்படுத்துவோம் எனும் தொனிப்பொருளில் இளவரசர் முஹம்மத் பின் ஸல்மானின் 2030ஆம் ஆண்டுத் திட்டத்தை மையப்படுத்தியதாக அது இம்முறையும் கொண்டாடப்படுகின்றது.

தற்போதய சவுதி அரேபியாவின் நிறுவனரான மன்னர் அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்களின் காலம் தொடக்கம் மன்னர் ஸல்மானுடைய தற்காலம் வரை பொதுவாக சவுதியின் மன்னர்கள் பள்ளி வாயில்களை நிறுவுவதிலும் அவற்றைப் பராமரிப்பரிப்பதிலும் இஸ்லாமியத் தளங்களை உருவாக்குவதிலும் அதற்காக சேவை செய்வதில் உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் அவர்களுக்கு அவர்களே நிகர் எனும் அளவுக்கு போட்டி போட்டு செயற்படுபவர்கள் என்பதை நடுநிலையாக சிந்திக்கும் எவரும் மறுக்கமாட்டார்கள். அதிலும் இரண்டு புனிதஸ்தலங்களையும் இஸ்லாத்தின் ஐந்தாம் கடமையான ஹஜ்ஜுடன் தொடர்புபடும் பிற இடங்களையும் அபிவிருத்தி செய்வதை தங்களின் தலையாய கடமையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றனர்.

தொடர்ச்சியாக வந்த ஒவ்வொரு ஆட்சியாளரும் தனக்கு முன்பிருந்தவரை விட நான் அதிகமாக சேவை செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் போட்டி போட்டு புனிதஸ்தலங்களுக்கு சேவை செய்வதில் வரலாற்றில் எந்தவொரு இடத்திற்கும் நடக்காத அளவு சேவைகள் இவைகளுக்கு நடந்திருப்பதைக் காணமுடியும்.

உஸ்மானியப் பேரரசின் கீழ் மக்கா மதீனாவின் பராமரிப்பு இருந்தபோது ஹஜ்ஜுக்கு செல்வதும் உம்ராவிற்கு செல்வதும் அபாயம் நிறைந்த பயனங்களாக இருந்தன. வழிப்பறிக் கொள்ளையர்கள் அட்டகாசம் மிகவும் அதிகமாக இருந்தது. சிலபோது பொற்காசுகளை வழிப்பறிக்கொள்ளையர்களுக்கு கொடுத்து ஹஜ், உம்ராக் குழுக்களை பாதுகாப்பதற்கான முயற்சிகளைச் செய்தார்கள் அப்போதும் அவர்களால் அது முடியவில்லை என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் மக்கா மதீனாவின் பராமரிப்பு தனது ஆட்சிக்குக் கீழ் வந்தபோது ஹஜ் கடமையை நிறைவேற்றுபவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக பாடுபட்டார். குழப்பத்தை ஏற்படுத்துபவர்களுக்கு எதிராக இஸ்லாத்தை நடைமுறைப்படுத்தியதுடன் மிகவும் அமைதியான ஒரு சூழலை உருவாக்கினார். பல மில்லியன் மக்கள் ஒரே இடத்தில் ஒன்று கூடினாலும் அவ்விடத்தில் பேணப்படும் அமைதியும் பாதுகாப்பும் வணக்கம் செய்பவர்களுக்கு




உருவாக்கப்பட்டிருக்கும் ஆன்மீகச் சூழலும் பார்ப்பவர் எவரையும் கவராமல் இருக்க முடியாது.

அப்துல் அஸீஸ் (ரஹ்) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் மக்கா மஸ்ஜிதுல் ஹராமின் எல்லாவற்றையும் புனர்நிர்மாணம் செய்யுமாறு கட்டளையிட்டார். விரிப்பு நிறப்பூச்சு தொடக்கம் க.்.பாவின் போர்வை வரை அனைத்தும் மாற்றப்பட்டன, பள்ளியின் அனைத்து இடங்களிலும் மின்சார விளக்குகளும் மின் விசிறிகளும் பொருத்தப்பட்டன. பழுதடைந்த அனைத்தும் மாற்றப்பட்டன. ஹி. 1348ல் மதீனா மஸ்ஜிதுன் நபவியை முழுமையாக புனர்நிர்மாணம் செய்யுமாறு பணித்ததோடு 1368ல் பள்ளியை விஸ்தரிக்கும் பணியில் ஈடுபட்டார்.

அதன் பின்னர் வந்த அவரது மகன் ஸுஊத் பின் அப்துல் அஸீஸ் மஸ்ஜிதுல் ஹராமின் அருகாமையிலிருந்த நிலங்களை வாங்கி பள்ளிக்கு வக்பு செய்ததோடு மஸ்ஜிதுன் நபவியை விஸ்தரிக்கவும் 25மில்லியன் ரியால்களை செலவிட்டு அருகாமையிலிருந்த நிலங்களை வாங்கினார் விஸ்தரிப்புப் பணிகள் மிக நேர்த்தியாக நடைபெறுவதை உறுதிசெய்ய தானே களத்திற்கு அதிகமாக விஜயம் செய்ததோடு பணிகள் நிறைவுற்ற நாளை 1375ஆம் ஆண்டு ஒரு பெருவிழாவாக ஏற்பாடு செய்தார். அவரின் பின்பு ஆட்சியை பொறுப்பேற்ற முஸ்லிம் உலகின் முன்மாதிரிமிக்க தலைவர்களில் ஒருவராக அனைவராலும் பார்க்கப்படும் மன்னர் பைஸல் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) தனது பங்கிற்கு தவாப், ஸஈ செய்யும் இடங்களை விஸ்தரித்ததோடு க.்.பாவிற்கான போர்வை தயாரிக்கும் தொழிற்சாலையை புதிய இடத்திற்கு மாற்றியதோடு தேவையான பொருத்தமான ஆளணியையும் ஏற்பாடு செய்தார். ஹரத்தின் நூலகத்திற்காக தனியான கட்டிடத்தை அமைத்தார். மேலும் மஸ்ஜிதுன் நபவியை 40,000சதுர மீட்டர் அளவு விஸ்தரிப்புச் செய்த தோடு நிழல் குடைகளையும் தொழுகைக்கான ஏற்பாடுகளையும் செய்தார்.

மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களின் அடுத்த மகன் காலித் (ரஹ்) அவர்களின் ஆட்சியிலும் புனிதஸ்தலங்களுக்கான சேவைகள் தொடர்ந்தன குறிப்பாக அவரது காலத்தில் தூய தங்கத்தில் க.்.பாவின் வாயிலும் க.்.பாவின் கூரைக்கு ஏறுவதற்கான வாயிலும் செய்யப்பட்டதோடு மஸ்ஜிதுல் ஹராமை தூய்மைப்படுத்துவதற்கான புதிய திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டது. மஸ்ஜிதுன் நபவியின் விஸ்தரிப்புக்காக 43,000சதுர மீட்டர் நிலப்பரப்பை வாங்கி வக்பு செய்ததோடு அதன் விஸ்தரிப்புப் பணிகளையும் முறையாக நிறைவேற்றினார்.

அதன் பின்பு வந்த மன்னர் பஹ்த் (ரஹ்) அவர்களின் காலத்தில் முன்சென்ற 14நூற்றாண்டுகளிலும் இல்லாத அளவு புனிதஸ்தலங்களுடன் தொடர்புடைய அனைத்தும் பாரிய அளவு முன்னேற்றப்பட்டன. இப்போது இருக்கும் இரு புனிதஸ்தலங்களின் தோற்றமும் அவருடை காலத்தில் இடப்பட்ட திட்டங்களின் வெளிப்பாடுதான் என்று சொல்லும் அளவுக்கு அனைத்து விதமான ஏற்பாடுகளையும் மிகவும் உயர்ந்த தரத்தில் நிறைவேற்றினார். ஒரே நேரத்தில் ஹரம் ஷரீபில் 15இலட்சம் பேர் ஒன்றுகூடும் அளவுக்கான ஏற்பாடுகளைச் செய்தார். அதுபோன்று மஸ்ஜிதுன் நபவியும் பல இலட்சம் பேர் ஒரே நேரத்தில் ஒன்று சேர்ந்து நிம்மதியாக தங்கலின் வணக்கங்களை நிறைவேற்றும் அளவுக்கு விஸ்தரிப்புச் செய்யப்பட்டது ஹஜ்ஜாஜிகளை கௌரவித்தல் இலவச ஹஜ் போன்ற பல முன்னோடித் திட்டங்களின் சொந்தக்காரராக மன்னர் பஹ்த் (ரஹ்) திகழ்ந்தார். தற்போது பார்ப்போரை மலைக்க வைக்கும் மினாவின் பாலங்களும் வீதி அமைப்புக்களும் மன்னர் அப்துல்லாஹ் (ரஹ்) அவர்களால் உருவாக்கப்பட்டவைகளாகும்.

தற்போதிருக்கும் மன்னர் ஸல்மான், பட்டத்து இளவரசர் முஹம்மது பின் ஸல்மான் அவர்களின் காலம் புனிதஸ்தலங்களின் பொற்காலம் என்று சொல்லுமளவுக்கு மிகவும் கவர்ச்சியான முழுமையாக உயர்ரக தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி விஸ்தரிப்புப் பணிகளும் புனர்நிர்மாணப்பணிகளும் இரண்டு பிரதான பள்ளிகளிலும் வணக்கத்தில் ஈடுபடுபவர்களுக்கு எந்த அசௌகரியத்தையும் ஏற்படுத்தாத வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இதுவரை காலமும் செய்யப்பட்ட விஸ்தரிப்புகளில் மூன்றில் இரண்டு மடங்கு அளவான விஸ்தரிப்பு வேலைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அத்தோடு புனிதஸ்தலங்களுக்கான தனியான ஒரு சபையும் உருவாக்கப்பட்டுள்ளது.

உண்மையில் பிரதான பள்ளிகளுக்கும் ஹஜ்ஜுடன் தொடர்புடைய இடங்களுக்கும் சவுதி ஆட்சியாளர்கள் செய்திருக்கும் சேவைகளை வாசிக்கும்போது மெய்சிலிர்த்துப் போவதுடன் அந்த நாடு பரகத் பொருந்திய நாடாகவும் அமைதி சந்தோசம் மிக்க நாடாகவும் திகழ்வதற்கான ரகசியத்தைப் புரிந்துகொள்ள முடிகின்றது. அல்லாஹ் அவர்கள் அனைவருக்கும் மோலான சுவர்க்கத்தை வழங்குவானாக.

**கலாநிதி. எம்.பி.எம். இஸ்மாயில் (மதனி)**
**பணிப்பாளர். அஸ்ஸலாம் ஆய்வு மற்றும் வெளியீட்டுப் பணியகம்.**



# 93 ஆவது தேசிய தினத்தில் காலடிவைக்கும் சவுதி அரேபியா...

கனவு காண்போம்...சாதிப்போம் ("We dream We Achieve") என்ற தொனிப்பொருளின் முழக்கத்துடன் சவுதி அரேபியா தனது 93 ஆவது தேசிய தினத்தில் காலடி வைக்கின்றது.

சிறப்புமிக்க இத்தருணத்தில், சவுதி அரேபியா வளர்ச்சி, உலக மக்களுக்காக பல்வேறு துறைகளில் அந்நாடு செய்து வரும் பணிகள், சேவைகள் என்பவற்றுக்காக இரு புனிதத்தலங்களின் காவலரான மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களையும் முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்களையும்,அந்நாட்டு மக்களையும் பாராட்டுகின்றோம் பிரார்த்தனை செய்கின்றோம்.

தற்போதைய மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்களது தலைமையில் சவுதி அரேபியா பல்வேறு துறைகளிலும் பாரிய அபிவிருத்தி அடைந்து வருகின்றது.

குறிப்பாக 2017ம் ஆண்டு முதல் சவுதி அரேபியாவின் முடிக்குரிய இளவரசராகவும் கடந்த வருடம் முதல் பிரதமராகவும் இருந்து வரும் முஹம்மத் பின் சல்மான் அவர்கள் ''விஷன் 2030" என்ற மூலோபாய திட்டமிடல் மூலம் பல்வேறு வகையான வியூகங்களை அமைத்து நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்கிறார்.

இருவரது கண்காணிப்பின் கீழும் பொருளாதாரம், தொழில்நுட்பம், விஞ்ஞானம், வைத்தியம், கணிதம் போன்ற துறைகளில் பாரிய வளர்ச்சியை கண்டு வரும் சவுதி அரேபியாவுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதற்கு சான்றாக இவ்வாண்டு ஹங்கேரியில் நடைபெற்ற தகவல் ஒலிம்பியாட் போட்டிகளில் மூன்று சர்வதேச விருதுகளை சவுதி அரேபியா வென்றமையும், சுவிட்ஸர்லாந்தில் நடைபெற்ற இரசாயனவியல் ஒலிம்பியாட் போட்டிகளில் மூன்று சர்வதேச விருதுகளை சுவீகரித்திருந்தமையும் காணப்படுகின்றது.

அத்தோடு நின்றுவிடாது உலக மக்களுக்கு இன, மத வேறுபாடின்றி பல்வேறு துறைகளிலும் பாரிய சேவைகளை சவுதி அரேபியா வழங்கி வருகின்றது.

உலகெங்கிலும் வறுமைக்கும் அனர்த்தங்களுக்கும் முகம் கொடுக்கும் மக்களுக்கு இன மத வேறுபாடின்றி துரிதமாக உதவிக்கரம் நீட்டும் நாடுகளின் பட்டியலில்



சவுதி அரேபியா முன்னிலை வகிக்கின்றது. 2015 ம் ஆண்டு நிறுவப்பட்ட நிவாரணத்திற்கும் மனிதநேய செயற்பாடுகளுக்குமான மன்னர் சல்மான் மத்திய நிலையம் இதற்கு மிகப்பெரும் சான்றாக அமைந்துள்ளது.

இந்த நிலையத்தினூடாக 92 நாடுகளில் சுமார் 2402 பாரிய அபிவிருத்திப் பணிகளை செய்திருக்கும் சவுதி அரேபியாவே தனது 93 வது தேசிய தினத்தில் காலடி வைத்துள்ளது.

அது மட்டுமல்லாது கல்வித் துறையிலும் சவுதி அரேபியாவின் சேவை வியக்கத்தக்கது. இளமாணி, முதுமாணி, கலாநிதி ஆகிய கற்கை நெறிகளில் இதுவரை உலகெங்கிலுமுள்ள 140 000 மாணவர்கள் சவுதி அரேபிய பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றுள்ளனர். தற்போதும் சுமார் 74 000 வெளிநாட்டு மாணவ,மாணவிகள் பல்வேறு துறைகளில் இலவசமாக தமது மேற்படிப்பை தொடர்கின்றனர். கல்வித் துறையில் இவ்வளவு பாரிய சேவையினை வழங்கும் சவுதி அரேபியாவை அதனது 93வது தேசிய தினத்தில் பாராட்டுகின்றோம்.

இலங்கையைப் பொறுத்தவரை 1974 முதல் சவுதி அரேபியாவுடன் மிகவும் நெருக்கமான உறவையும், இறுக்கமான தொடர்பையும் பேணி வருகின்றது.

இலங்கையின் பொருளாதாரத்தில் சவுதி அரேபியாவின் வகிபாகம் முக்கியமானது. சவுதி அரேபியா பாரிய உதவிகளை வழங்கி, இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் காத்திரமான பங்களிப்பை நல்கி வருகின்றமை மகிழ்ச்சியளிக்கிறது.

நீர், எரிசக்தி, சுகாதாரம், வீதிகள் மற்றும் கல்வி ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வகையான பாரிய அபிவிருத்தித் திட்டங்களுக்காக இன்று வரை சவுதி அரேபியா வழங்கியுள்ள தொகை சுமார் 424.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

அந்த அபிவிருத்தித் திட்டங்களுள் கொழும்பில் வலிப்பு வைத்தியசாலை ,களு கங்கை அபிவிருத்தித் திட்டம், பதுளை - மட்டக்களப்பு செங்கலடி வீதிப்புனரமைப்புத் திட்டம், வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டம், களுகங்கை இருபக்க ஆற்றங்கரை அபிவிருத்தி திட்டம் போன்றவை அடங்கும்.

மட்டுமல்லாது இலட்சக்கணக்கான இலங்கையர்கள் பல துறைகளிலும் சவுதி அரேபியாவின் பல பகுதிகளிலும் பணி புரிந்து வருகின்றனர்.

அத்துடன் கடந்த வருடங்களில் சவுதி அரேபியாவுக்கான இலங்கையின் தேயிலை ஏற்றுமதியும் இலங்கை பொருளாதாரத்தில் கணிசமான அளவு பங்களிப்பு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்தும் சவுதி அரேபிய வர்த்தகர்கள், முதலீட்டு நிறுவனங்கள் இலங்கையில் பல துறைகளிலும் முதலீடு செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

தனது 93 வது தேசிய தினத்தில் காலடி வைக்கும் சவுதி அரேபியா அபிவிருத்திப் பாதையில் மேலும் பயணிக்க பிரார்த்தனை செய்கிறோம்.

**பாஹிர் சுபைர் கபூரி, ரியாதி,**
**உப அதிபர் சுமையா அரபுக் கல்லூரி, கிண்ணியா**




نحلم ونحقق
اليوم الوطني السعودي 93
"நாங்கள் கனவு காண்கிறோம்"
அடைவோம் 2030
93
اليوم الوطني السعودي
SAUDI ARABIA NATIONAL DAY
சவூதி அரேபியாவின்
93 ஆவது தேசிய தினத்தை
முன்னிட்டு எங்கள்
23 செப்டெம்பர்
மனமார்ந்த வாழ்த்துக்கள்
மாண்புமிகு
காலித் பின் ஹமூத் அல் – கஹ்தானி
இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர்
தேசத்தையும் அரசாங்கத்தையும்
பாதுகாத்து பாதுகாப்பையும்
செழிப்பையும் பொழிய எல்லாம் வல்ல
இறைவனை பிரார்த்திக்கிறோம்.
அஷ் – ஷைக் முஜாஹித் ஸபைர் (B.A.)
விரிவுரையாளர்,
அஷ் – ஷைக் இம்தியாஸ் (B.A.)
நிர்வாக உறுப்பினர்
"நாஸ்" கலாச்சார நிலையம், கொழும்பு
அஷ் – ஷைக் எம் எம் அன்ஸார் (B.A.)
உப தலைவர்,
அஸ்ஸுன்னா கலாபீடம், காத்தான்குடி
அஷ் – ஷைக் மன்ஸூர் (B.A.)
அதிபர்,
அஸ்ஸுன்னாஹ் கலாபீடம், காத்தான்குடி



# சவுதி அரேபியாவின் 93வது தேசிய தினம்

23 செப்டெம்பர் 2023

# மத்திய கிழக்கின் வல்லரசாக சவுதி அரேபியா

## சவுதி அரேபியாவின் 93வது தேசிய தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை வெளியிடப்படுகிறது

சவுதி அரேபியா மத்திய கிழக்கின் வல்லரசாகும். நிலப்பரப்பிலும் மக்கள் தொகையிலும் பொருளாதார ரீதியிலும் பாரிய வளர்ச்சிகளைக் கண்டுள்ள இந்நாடு முஸ்லிம்கள் தங்கள் மார்க்கக் கடமைகளை நிறைவேற்றும் இரண்டு புனித ஸ்தலங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

உலகிலும் குறிப்பாக மத்திய கிழக்கிலும் தனித்துவ அடையாளங்களுடன் தலை நிமிர்ந்து நிற்கும் ஒரு நாடு சவுதி அரேபியா. இந்நாட்டுக்கு தனி மதிப்பும் மரியாதையும் உண்டு.

அருள் மறையாம் அல் குர்ஆன் இறக்கியருளப்பட்டதும் இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் பிறந்து வளர்ந்து வாழ்ந்ததும் புனித தீனுல் இஸ்லாத்தை உலகமெங்கும் எத்தி வைக்கும் பணியை தொடக்கி வைத்த இடமாகவும் சவுதி அரேபியா விளங்குகிறது. அதனால் உலக முஸ்லிம்களின் உள்ளத்திலும் ஆழமாகப் பதிந்திருக்கும் ஒரே நாடும் சவுதி அரேபியா தான்.

முஸ்லிம்களின் சகல விடயங்களிலும் கரிசனையோடு செயற்படும் இந்நாடு அவர்களது மார்க்க மற்றும் உலகளாவிய ரீதியிலான தேவைகளை செய்து கொடுப்பதில் முன்நிற்கின்ற நாடாகவும் விளங்குகிறது. அத்தோடு முஸ்லிம் அல்லாத நாடுகளின் நலன்களிலும் மிகுந்த அக்கறையோடு செயற்படும் சவுதி அரேபியா, அந்நாடுகளோடும் பரஸ்பர நட்புறவுகளைப் பேணி வருகிறது. உலக வல்லரசு நாடுகளுடன் மிகப் பலமான உறவுகளைப் பேணி வரும் சவுதி அரேபியாவின் தயவை வல்லரசு நாடுகளும் நாடி நிற்கின்றன.

அரசியலில் சவுதி அரேபியா மிகப் பலம் வாய்ந்த நாடாகும். அந்தப் பின்புலத்தில் மத்திய கிழக்கில் உள்ள அனைத்து நாடுகளும் ஏனைய உலக முஸ்லிம் நாடுகளும் கூட சவுதி அரேபியாவை தங்களது தலைமைத்துவ நாடாகக் கருதுகின்றன.

### பொருளாதார முன்னேற்றம்

சவுதி அரேபியா பொருளாதார ரீதியில் தன்னிறைவடைந்து வருகிறது. இதற்கு விஷன் 2030 வேலைத்திட்டம் பாரிய பின்புலமாக அமைந்திருக்கின்றது. அதன் பயனாக அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ், ரஷ்யா, சீனா, இந்தியா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளும் சவுதி அரேபியாவின் பொருளாதாரக் கொள்கையோடு இணைந்து தங்களது பொருளாதாத்தை மேம்படுத்திக்கொள்வதில் ஆர்வம் கொண்டுள்ளன. இதனடிப்படையில் இந்நாடுகள் சவுதி அரேபியாவோடு மிகவும் நெருங்கிச் செயற்படுகின்றன. இதற்கு சவுதி - பிரான்ஸ், சவுதி - சீனா, சவுதி - ரஷ்யா, சவுதி - பிரித்தானியா ஒத்துழைப்புக்களும் இந்தியாவில் அண்மையில் நடைபெற்ற ஜி 20 மாநாட்டின் போது தொடக்கி வைக்கப்பட்ட சவுதி அரேபியா, இந்தியா, ஐக்கிய அரபு அமீரகம், ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ், இத்தாலி, ஜெர்மனி மற்றும் அமெரிக்காவை உள்ளடக்கிய மத்திய கிழக்கு, இந்தியா, ஐரோப்பிய இணைப்பு வழித்தடம் திட்டமும் குறிப்பிடத்தக்கவையாகும்.

### விஷன் 2030, எக்ஸ்போ 2030

பொருளாதார மற்றும் இதர அனைத்து துறைகளிலும் சவுதி அரேபியாவை முன்னேற்றப்பாதையில் இட்டுச்செல்லும் நோக்கில் பட்டத்து இளவரசரும் பிரதமருமான முஹம்மத் பின் சல்மானின் சிந்தனையில் உதித்த விஷன் 2030, எக்ஸ்போ 2030 என்பன பாரிய மைற்கற்களாகும். இந்த விஷன் 2030 என்பதானது துடிப்பான சமூகம், வளமான பொருளாதாரம் மற்றும் இலட்சிய தேசத்தைக் கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்ட பயணத்திற்கான ஒரு வரை படமாகும். அத்தோடு எக்ஸ்போ 2030 தேசிய மாற்றத்தை அடைவதற்கு சவுதி அரேபியா பெற்றுக்கொண்டுள்ள ஒரு முன்னோடியான வாய்ப்பாகும்.

இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் விஷன் 2030 ஊடாக பாரிய குடிநீர் வசதி, அல் உலா மாவட்டத்தை சுற்றுலா தலமாக மேம்படுத்துதல், விமானங்கள் தயாரிப்பு, திரஇய்யா புனரமைப்பு, பசுமையான சவுதி அரேபியா, பசுமையான மத்திய கிழக்கு, மன்னர் சல்மான் பூங்கா, அணு உற்பத்தி, நியோம், செங்கடல் பொருளாதார அபிவிருத்தி மையம் உள்ளிட்ட பல பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களும் அவரது இலக்குகளாகும். அந்த வகையில் வருடாவருடம் 40 மில்லியன் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கும் திட்டத்தில் ரியாத் எக்ஸ்போ 2030 பாரிய பங்களிப்பை வழங்குகிறது.

### 'ரியாத் எயார்',

"சவுதியா" என்ற பெயர்களில் அதி சிறந்த விமான சேவைகளை உலகின் பல நாடுகளுக்கும் முன்னெடுத்துவரும் சவுதி அரேபியா "ரியாத் எயார்" எனும் பெயரில் மற்றொரு விஷேட விமான சேவையை புதுப்பொலிவுடன் ஆரம்பித்துள்ளது. இது சவுதி அரேபியாவின் மைற்களில் மிக முக்கியமானதாகும்.

### யவ்முல் அலமுஸ் சவுதி

வருடா வருடம் மார்ச் 03 ஆம் திகதி தேசிய கொடி தினமாக சவுதி அரேபியாவில் கொண்டாடப்படுகிறது. ஒவ்வொரு முஸ்லிமும் புனித திருக்கலிமா லாஇலாஹ இல்லல்லாஹ முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்வை நாவால் மொழிந்து உளப்பூர்வமாக ஏற்று தங்களது வாழ்வை அமைத்துக்கொள்ள வேண்டும் என அல்லாஹ்வும் அவனது தூதரும் கட்டளையிட்டுள்ளனர். அப்படிப்பட்ட மிகப் பெறுமதியான கலிமாவை தங்களது நாட்டின் தேசியக்கொடியாகக் கொண்டு உலக முஸ்லிம்களையும் கௌரவப்படுத்தியுள்ளது சவுதி அரேபியா.

### யவ்முத் தஃஸீஸ்

பெப்ரவரி 22ஆம் திகதி என்பது சவுதி அரேபியாவின் முதல் இராச்சியத்தை நிறுவிய நாளாகும். அதனால் சவுதியின் முதல் இராச்சியத்தை உருவாக்கிய தினம் வருடா வருடம் பெப்ரவரி 22ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. அந்த இராச்சியத்தை உருவாக்கிய பெருந்தகை இமாம் முஹம்மத் பின் சவுத் ஆவார்.

### உள்நாட்டு உற்பத்தி

சவுதி அரேபியா பாலைவன நாடாக இருந்த போதிலும் 2030 ஆகும் போது உள்நாட்டு உற்பத்தியில் உலகில் 15வது இடத்திற்கு வர வேண்டுமென இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது. சவுதியில் நிலத்தைத் தோண்டினால் இயற்கை வள மசகு எண்ணெய் தான் கிடைக்கப்பெறும்.





அவ்வாறான நாட்டில் மரக்கறி வகைகள், பழவகைகள் உள்ளிட்ட அனைத்து உற்பத்திகளிலும் கூட தற்போதும் சவுதி தன்னிறைவடைந்த நாடாக விளங்குகிறது.

### விளையாட்டுத் துறை

உதைப்பந்தாட்ட விளையாட்டில் சவுதி அரேபியா உலகின் முன்னணி நாடுகளில் ஒன்றாக உள்ளது. உலக சாம்பியன்களோடு மோதி அறை இறுதி போட்டி வரையும் இந்நாடு சென்றிருக்கிறது. இந்நிலையில் உள்நாட்டு உதை பந்தாட்டத்துறையை மேலும் மேம்படுத்தும் நோக்கில் உலக சாம்பியன்களைக் கூட பல மில்லியன் ரியால்களை வழங்கி வாங்கி இருக்கிறது. அத்தோடு ஏனைய விளையாட்டுக்களை மேம்படுத்தவும் பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

### உல்லாசப் பயணத்துறை

சுற்றுலாத் துறையிலும் சவுதி அரேபியா முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கிறது. அந்த வகையில் 2022 இல் மாத்திரம் 30 மில்லியன் உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுத்திருக்கிறது சவுதி அரேபியா. இந்நிலையில் உம்ரா கடமையை நிறைவேற்றவும் வரலாற்று முக்கியத்தும் மிக்க இடங்களை மக்கள் பார்வையிடவும் என பல விஸா முறைகளையும் இந்நாடு அறிமுகப்படுத்தியுள்ளது. அவற்றில் வியாபார விஸா, தனிப்பட்ட ஸ்பொன்சர் விஸா, ஈ விஸா, சுற்றுலாத்துறை விஸா, ட்ரான்சிட் விஸாவின் போது 96 மணி நேரம் சவுதியில் தங்கும் விஸா, உம்ரா 3 மாத விஸா என்பன குறிப்பிடத்தக்கவையாகும். உம்ரா விஸாவைத்



தவிர ஏனைய அனைத்து விஸாக்களும் பல தடவைகள் பயணிக்கத்தக்க (மல்டிபல்) விஸாவாகும். இவ்விஸாக்களின் ஊடாக சவுதி அரேபியாவுக்குள் நுழைபவர்கள் புனித மக்கா, மதீனா, குபா போன்ற புனித இடங்களை தரிசிக்கவும் ரியாதில் உள்ள அல் மிஸ்மக் கோட்டை, கிங்டம் டவர், பைசலியா டவர், தேசிய நூதன சாலை, திரஇய்யா, ஜித்தாவில் அமைந்துள்ள கின்னஸில் பதியப்பட்ட உலகிலேயே மிகப்பெரிய மன்னர் பஹ்த் நீர் வீழ்ச்சி, உகாஸ் நகரம், சுற்றுலாவில் பெயர் போன அப்ஹா, அல் உலா, உம்லுஜ், நியோம் போன்ற அனைத்து சுற்றுலாத் தலங்களையும் தரிசிக்க வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வர்.

முகஃ.அப் முகஃ.அப் என்பது சவுதி அரசின் பொருளாதார மேம்பாட்டின் மற்றுமொரு முக்கிய வேலைத்திட்டமாகும். இளவரசர் முஹம்மத் பின் சல்மானின் விஷன் 2030 வெற்றி கொள்ளும் நோக்கில் இது ஆரம்பிக்கப்பட்டது. உலகின் நவீன நகர்களில் ஒன்றான ரியாத்தில் இத்திட்டத்தின் மூலம் எதிர்காலத்தை மேம்படுத்த பங்களிக்கப்படுகிறது. இதில் புதுமையான அருங்காட்சியம், தொழில்நுட்பம் மற்றும் வடிவமைப்பில் நிபுணத்துவம் பெற்ற பல்கலைக்கழகம் போன்ற பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### பாதுகாப்பு படை

மத்திய கிழக்கில் மிகப் பெரிய படைப்பலத்தை இந்நாடு கொண்டுள்ளது. மன்னர் மற்றும் இளவரசர் ஆகியோரின் ஆணைகளுக்கு முற்றிலும் கட்டுப்பட்ட சவுதி அரேபிய படையினர் எந்நேரமும் எதிரிகளின் தாக்குதல்களை முறியடிக்கும் நோக்கில் தயார் நிலையில் இருக்கக் கூடியவையாகும். தம் படையினரை பலப்படுத்துவதற்கும் நவீனப்படுத்துவதற்கும் சவுதி அரேபியா தொடர்ந்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. அதனால் தற்போது மத்திய கிழக்கில் நான்காவது இடத்திலும் உலகளவில் பத்தாவது இடத்திலும் சவுதி அரேபிய படை காணப்படுகிறது.

### சர்வதேச உறவுகள்

சவுதி அரேபியாவானது ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம், 57 முஸ்லிம் நாடுகள் அங்கம் வகிக்கும் இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு, ஜி 20 அமைப்பு, வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சில், மத்திய கிழக்கு ஒத்துழைப்பு ஒன்றியம் போன்ற உலகில் முக்கியத்துவம் மிக்க நாடுகள் அங்கம் வகிக்கும் அமைப்புகளுடன் நெருக்கமான நட்புறவுகளைப் பேணி வருகிறது. அத்தோடு பிரிக்ஸ் அமைப்பில் இணைவதற்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பையும் இந்நாடு ஏற்றுக்கொண்டுள்ளது.

### கையாளுகை (லொஜெஸ்டிக்) கேந்திர நிலையங்கள்

சவுதி அரேபியாவை உலகளாவிய பொருளாதார கேந்திர நிலையமாக மாற்ற இளவரசர் முஹம்மத் பின் சல்மான் பொருளாதார பரிவர்த்தனை நிலையங்களுக்கான முதன்மைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார். அதற்காக 59 பாரிய பொருளாதார மையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

### விண்வெளியில் சவுதி அரேபியா

விண்வெளிப் பயணம் என்றால் அது வல்லரசு நாடுகளால் தான் முடியும் என நினைத்துக் கொண்டிருந்த மக்களுக்கு தனது நாட்டின் ஆண் - பெண் இரு வீர வீராங்கனைகள் மூலம் எமது நாடும் விண்வெளியைத் தொடும் என்ற மிகப் பெரிய செய்தியை உலகுக்குச் எடுத்தியம்பியுள்ளது சவுதி அரேபியா.

### மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி நிவாரண மையம்

மன்னர் சல்மான் மனிதாபிமான உதவி நிவாரண மையத்தின் ஊடாக உலக மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் முதன்மையான நாடாகவும் சவுதி விளங்குகிறது. ரியாத் நகரில் இயங்கும் இந்நிவாரண மையம், சவுதி அரேபியாவின் மனிதாபிமானத்தை உலகிற்கே பறை சாற்றிக் கொண்டிருக்கிறது. இம் மையத்தின் மூலம் உலகெங்கிலும் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் மனிதாபிமான உதவி ஒத்துழைப்புக்களை செய்து வருகிறது. உலகில் எங்காவது இயற்கை அனர்த்தங்கள், பாதிப்புகள் ஏற்பட்டால் அங்கு மீட்புக் குழுக்களுடன் விஷேட விமானங்கள் மூலம் உடனடி நிவாரணப் பொருட்களை அனுப்பி வைக்கும் முதன்மை நாடாகவும் சவுதி விளங்குகிறது.

அந்த வகையில் சிரியா, துருக்கி, சூடான், மொராக்கோ, லிபியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு பல மில்லியன் டொலர்கள் பெறுமதியான நிவாரணப் பொருட்களையும் இம்மையம் அண்மையில் அனுப்பி வைத்தது. குறிப்பாக உள்நாட்டு போரினால் பாதிக்கப்பட்டுள்ள சூடான் மக்களுக்கு 500 மில்லியன் ரியால்கள் வழங்கி உதவியுள்ளது.

இவை மாத்திரமல்லாமல் அனைத்து விதமான மனிதாபிமான விடயங்களையும் உலக நாடுகளில் இம் மையம் முன்னெடுக்கின்றது. பொருளாதாரத்தில் வீழ்ச்சி கண்ட நாடுகளின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், இலவச மருத்துவ சிகிச்சைகள், இலவச கண் சத்திர சிகிச்சைகள், நாட்பட்ட நோய்களுக்கான நிவாரண நடவடிக்கைகள் என்பனவும் கூட இம் மையத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகிறது.

அந்த வகையில் உலகில் ஒட்டிப் பிறந்த 60க்கும் மேற்பட்டவர்களை தனது நாட்டுக்கு விஷேட விமானம் மூலம் அழைத்து வந்து அனைத்து செலவுகளையும் பொறுப்பேற்று எவ்வித பாதிப்புகளுமின்றி பிரித்து உலக சாதனை புரிந்துள்ளது இம்மையம்.

இலங்கையிலும் இம்மையம் பல மனிதாபிமான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது. குறிப்பாக இம்மாதத்தின் ஆரம்பத்தில் இன மத பேதமின்றி வலஸ்முல்லவிலும் காத்தான்குடியிலும் 4ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரையும் விழிவெண்படல கண்சத்திர சிகிச்சை, மருத்துவ பரிசோதனை, மூக்குக் கண்ணாடி வழங்குதல் என்பன முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்பட்டன. இந்த மருத்துவ முகாம்கள் மூலம் பெருந்தொகையான மக்கள் பயனடைந்துள்ளனர்.

அதே நேரம் இலங்கை முஸ்லிம்களுக்கென நோன்பு காலத்தில் வருடாவருடம் தொன் கணக்கில் பேரீச்சம் பழங்கள் வழங்கப்படுகின்றன. உலர் உணவுப்பொதிகளும் விநியோகிக்கப்படுகின்றன. இவ்வாறு பல மனிதாபிமான உதவித் திட்டங்கள் இந்நாட்டில் முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறான மனிதாபிமான நிகழ்ச்சிகள் மூலம் உலகின் அனைத்து மக்களதும் பாராட்டுதல்களைப் பெற்றுள்ள இம்மையம், 2015 முதல் இற்றை வரையும் சுமார் 1,979,808,924 அமெரிக்க டொலர்களை இந்நற்பணிகளுக்காக செலவிட்டுள்ளது. மனிதாபிமான நிவாரணப் பணிகள் ஊடாக உலகையே வென்றுள்ளது இம்மையம்.

### சர்வதேச குர்ஆன் போட்டிகள்

உலக மக்களின் மனதை வென்றுள்ள இந்நாடு, கடந்த 75 வருடங்களாக அல் குர்ஆனுக்குச் செய்யும் பணிகளாக சர்வதேச குர்ஆன் போட்டிகளை நடாத்தி வருகிறது. அந்த வகையில் கடந்த மாதம் நடாத்தப்பட்ட சர்வதேச குர்ஆன் மனனப் போட்டியில் 117 நாடுகளைச் சேர்ந்த 166 ஹாபிழ்கள் பங்குபற்றினர். அவர்களுக்கென சுமார் 40 கோடி ரூபாய் பணப்பரிசில்களைப் பகிர்ந்தளித்து புனித அல்குர்ஆனுக்கும் அல் குர்ஆனை சுமந்த ஹாபிழ்களுக்கும் அதி உயர் கௌரவத்தை வழங்கியுள்ளது. அதேபோன்று கடந்த ஜுன் மாதத்தில் இலங்கையிலும் முதற்தடவையாக தேசிய குர்ஆன் மனனப் போட்டியொன்றை நடாத்தி சுமார் ஒன்றரைக் கோடி பெறுமதியான பணப்பரிசில்களை வழங்கி இந்நாட்டு ஹாபிழ்களையும் சவுதி அரேபிய கௌரவித்தது.

### தீவிரவாத ஒழிப்பு

அதேநேரம் பயங்கரவாத எதிர்ப்பு, தீவிரவாத ஒழிப்பு விடயத்திலும் சவுதி அரேபியா ஒருபோதும் பின்நிற்பதில்லை. பயங்கரவாத ஒழிப்பு மாநாடுகளை சவுதி அரேபியாவிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் அடிக்கடி நடாத்தி வருகிறது. அந்த வகையில் அண்மையில்த் 85 நாடுகளைச் சேர்ந்த 150 புத்திஜீவிகள், உலமாக்கள், முப்திகளை சவுதி அரேபியாவின் செலவில் மக்காவிற்கு அழைத்து நடாத்தப்பட்ட உலக சமாதான, சகிப்புத் தன்மை, சகவாழ்வு, பயங்கரவாத எதிர்ப்புக்கான மாநாடு இதற்கு மிகப் பெரிய சான்றாகும்.

### இலவசமாக ஹஜ்

இலங்கையர் உட்பட உலகின் பல நாடுகளையும் சேர்ந்த 5000க்கும் மேற்பட்டவர்கள் இலவசமாக புனித ஹஜ் கடமையை நிறைவேற்றவும் சவுதி அரேபியா வருடா வருடம் வாய்ப்பளிப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### சமாதான தூதன்

அதேநேரம் சூடானில் உள்நாட்டு போரில் ஈடுபட்டுள்ளவர்கள் மத்தியிலும் பலஸ்தீனில் பத்தாஹ் - ஹமாஸ் அமைப்புக்களுக்கு இடையிலும் மாத்திரமல்லாமல் உக்ரைனுக்கும் ரஷ்யாவுக்கும் இடம்பெறும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவரும் நோக்கிலும் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான மத்தியஸ்தத்தை வகித்து வரலாற்றில் இடம்பிடித்திருக்கிறது சவுதி அரேபியா. உலகின் அமைதி சமாதானத்திற்கு சவுதி அளிக்கும் பங்களிப்பு வெளிப்படையானதாகும்.

### ஊழல், போதைப்பொருள் அற்ற நாடு

தங்களது நாட்டில் ஊழல், போதைப்பொருள் குற்றச்செயல்கள் போன்றவற்றை அடியோடு ஒழித்துக்கட்டியுள்ள நாடான சவுதி அரேபியா, அவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றது. அவ்வாறான செயலில் ஈடுபடுபவர்கள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் கூட சட்ட ரீதியில் நடவடிக்கை எடுக்கப்படுவது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

### வறிய நாடுகளின் பொருளாதாரத்தை சம நிலைப்படுத்துதல்.

யெமன், எகிப்து, பாகிஸ்தான் போன்ற பல நாடுகளுக்கு பல பில்லியன் டொலர்களை வங்கியில் வைப்பு செய்து அவர்களது பொருளாதாரத்தைப் பாதுகாத்து சமநிலைப்படுத்தி உதவியுள்ளது சவுதி அரேபியா. அத்தோடு சூடானின் உள்நாட்டு போரில் சிக்குண்டிருந்த இலங்கையர் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளைப் பாதுகாப்பாக ஜித்தாவுக்கு அழைத்து வந்து அவர்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து அவரவர் நாடுகளுக்குப் பாதுகாப்பாக அனுப்பி வைத்த பெருமையும் சவுதிக்கு உள்ளது.

அந்த வகையில் கனடா நாட்டு பிரஜைகளை பாதுகாப்பாக அழைத்து வந்து அவர்களது நாட்டுக்கு அனுப்பி வைத்ததைத் தொடர்ந்து, அந்நாடு வெளியிட்ட உத்தியோகபூர்வ அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தது,

"சவுதி அரேபியா ஒரு முக்கிய உலகளாவிய வீரராக இருப்பதை நாம் காண்கிறோம். சூடானில் இருந்து கனேடிய பிரஜைகளைப் பாதுகாப்பாக வெளியேற்ற உதவிய சவுதி, சூடானில் மோதலுக்கான தீர்வைக் கண்டறிவதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. உலகளாவிய பிரச்சினைகளைக்குத் தீர்வுகளைக் கண்டறிய சவுதி அரேபியா போன்ற சிறந்த நாடுகளின் உறவுகள் எங்களுக்குத் தேவை". இதேவேளை பிரான்ஸ் நாட்டின் L`Orinent-le Jour என்ற பத்திரிகை, "எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி ஜமால் அப்துல் நாசருக்குப் பிறகு அரேபிய தலைவர்களில் சவுதி அரேபிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் குறுகிய காலத்தில் உலக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற ஒருவராகி விட்டார். அவரைத் தவிர வேறு யாரும் இம்மதிப்பைப் பெறவில்லை" என்று குறிப்பிட்டுள்ளது.

### சர்வதேச விருதுகளை வென்ற சவுதி அரேபியா

மேலும் அமெரிக்காவில் அண்மையில் நடைபெற்ற ரிஜெனெரன் சர்வதேச விஞ்ஞானம் மற்றும் பொறியியல் கண்காட்சி (ICEF) 2023ல் சவுதி அரேபியா சார்பில் கலந்து கொண்ட 37 மாணவ மாணவிகளில் 23 மாணவ மாணவிகள் பிரதான விருதுகளையும் மேலும் 4 விருதுகளையும் வென்றெடுத்தனர். உலகில் வளர்ச்சியடைந்த நாடுகள் பல பங்குபற்றிய இப்போட்டியில் நூறு சர்வதேச விருதுகளில் மூன்றில் இரண்டை சவுதி பெற்றமை உலகையே வியப்பில் ஆழ்த்தியது. 2022இல் நடைபெற்ற அதே கண்காட்சியில் 16 விருதுகளை சவுதி மாணவர்கள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### உலகில் 10ஆவது இடத்தில் கிங் சவுத் பல்கழைக்கழகம்

கல்வித்துறையிலும் சவுதி அரேபியா பாரிய முன்னேற்றம் கண்டு வருகின்றது. அந்தவகையில் கிங்க் சவுத் பல்கழைக்கழகம் உலகிலேயே 10வது அதி சிறந்த பல்கலைக்கழகமாகத் திகழுகின்றது.

### இலங்கையுடனான உறவுகள்

இலங்கை ஒரு சிறிய நாடாக இருந்த போதிலும் சவுதி அரேபியா இந்நாட்டுடன் நெருக்கமான இராஜதந்திர உறவுளை நீண்டகாலமாகப் பேணி வருகிறது. இந்நாட்டின் பொருளாதாரத்திற்கும் அபிவிருத்திக்கும் பாரிய பங்களிப்புகளையும் இந்நாடு நல்கிவருகிறது. குறிப்பாக மொரட்டுவ உள்ளிட்ட பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு மேம்பாடு, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காக்கை வலிப்பு நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கான தனியான பிரிவு, பாலங்கள், பாதைகள் நிர்மாணம், சுனாமியால் இருப்பிடங்களை இழந்தவர்களுக்கு வீடுகள், வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு உதவும் வகையில் விழிவெண்படல சத்திர சிகிச்சை உள்ளிட்ட இலவச கண் சிகிச்சை முகாம்கள் உள்ளிட்ட பல உதவி ஒத்துழைப்புக்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இவ்வாறு தம் நாட்டுக்கும் உலக முஸ்லிம்கள் அடங்கலாக அனைத்து மக்களுக்கும் மனிதாபிமான உதவிகளையும் நாடுகளின் ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் அளப்பரிய பங்களிப்புக்களையும் நல்கிவரும் இரு புனிதத் தலங்களின் காவலரும் மன்னருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ், இளவரசர் முஹம்மத் பின் சல்மான் ஆகியோரும் இலங்கைக்கும் சவுதிக்கும் இடையிலான இராஜதந்திர உறவை மேம்படுத்தவும் இந்நாட்டின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு பலவழிகளிலும் உதவி, ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொடுத்துவரும் இந்நாட்டுக்கான சவுதி அரேபிய தூதுவர் காலித் பின் ஹமூத் அல் கஹ்தானியும் சவுதி அரேபிய மக்களும் என்றும் பாராட்டுக்குரியவர்கள். அவர்களுக்கு 93வது தேசிய தின வாழத்துக்களை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம்.

மௌலவி எம்.எச். சேஹுத்தீன்
(பி.ஏ, மதனி)
பணிப்பாளர், அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு.



# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதி போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

### சிசுவிரு கல்லூரியின் மூன்றுமாடி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு தேவையான கம்பி கொள்வனவு செய்தல்

**கேள்வி இலக்கம் : PRDA/WP/PRO/2023/83**

இவ் அதிகார சபையின் கீழ் கொள்வனவு செய்வதற்கு இவ்வாறான வழங்கள் இடம்பெறுவதுடன் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | விபரம் | | | | கேள்விப்பிணை (காசாக) அல்லது | கேள்விப்பிணை (வங்கி / காப்புறுதி / கம்பனி) |
|---|---|---|---|---|---|---|
| 01 | உருப்படி இல | விபரம் | அலகு | அளவு | 10,000.00 | 20,000.00 |
| | 1 | $T_{12}$ | Kg | 1287.60 | | |
| | 2 | $T_{20}$ | Kg | 469.30 | | |
| | 3 | $T_{25}$ | Kg | 962.50 | | |
| | 4 | $T_{16}$ | Kg | 1422 | | |
| | 5 | $T_{10}$ | Kg | 493.60 | | |
| | 6 | Stirup (R-6) | Kg | 210 | | |
| | 7 | Stirup (T-8) | Kg | 650 | | |
| | 8 | Stirup (T-12) | Kg | 840 | | |
| | 9 | Binding | Kg | 100 | | |

02. மேற்படி உருப்படிகளுடன் சம்மந்தப்பட்ட விபரமான தகவல்களை கேள்விப் பத்திரத்தில் தரப்பட்டுள்ளது.

03. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.09.25 முதல் 2023.10.10ம் திகதிகளில் மு.ப 9.00 முதல் பி.ப 2.30 வரை கேள்விப் படிவக் கட்டணத்தை ரூ. 1178.75இற்கு (அதிகார சபையின் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) உற்பட்டு, இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்வி பிணைமுறியை காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. மேற்படி பெறுகைக்கு தகைமை பெறுவதற்கு கேள்விதாரரால் 1987 இல.03 பொது ஒப்பந்தச் சட்டத்தின் 8ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பதிவுச் சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் 2023.10.11 பி.ப 2.30 இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரிதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,
பெறுகைக் குழு,
மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)
இல.59, சென் செபஸ்தியன் மேடு, கொழும்பு-12
தொ.பே.இல : 011-4849825**

## கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்

### விலைமனுக்கோரல் (IFB)

கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் சார்பாக பிரதான பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு தகுதியான முத்திரையிடப்பட்ட மனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர் | தேவைப்படும் மனுப் பாதுகாப்புத் தொகை (ரூ). | மூடப்படும் திகதி | மனுக்கள் திறக்கப்படும் / மூடப்படும் திகதி |
|---|---|---|---|---|
| CLT/WK/046/2023 | சுழலும் உணவகத்திற்கான செயல் நிலையங்கள் 8 இனை உருவாக்குதல், வழங்குதல் மற்றும் நிறுவுதல் | 100,000.00 | 2023.10.03 மு.ப.10.00 மணி | 2023.09.28 மு.ப.10.00 மணி |
| CLT/WK/047/2023 | தங்குமிட கட்டிடத்தில் பழுதுபார்த்தல் மற்றும் உருக்கினை மாற்றுதல் | 90,000.00 | 2023.10.03 மு.ப.11.00 மணி | 2023.09.28 மு.ப.11.00 மணி |
| CLT/WK/048/2023 | 01 முதல் 15 மீட்டர் மட்டத்தில் கட்டுதல் மற்றும் நிறைவு செய்தல் | 50,000.00 | 2023.10.03 மு.ப.11.30 மணி | 2023.09.28 பி.ப.12.00 மணி |
| CLT/SER/015/2023 | கொழும்பு தாமரைக் கோபுரத்தின் தோட்டம் மற்றும் வாகன நிறுத்துமிடம் உட்பட எலிகள், கரப்பான் பூச்சிகள், எறும்புகள் மற்றும் ஈக்களை அழிக்கும் பரிசோதனை மற்றும் மாதாந்த சிகிச்சைகள் | 30,000.00 | 2023.10.03 பி.ப.12.00 மணி | 2023.09.28 பி.ப.01.00 மணி |

1. ஆர்வமுள்ள மனுதாரர்கள் கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் நிதிப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.2,000** கட்டணத்தை செலுத்தி **2023.09.25** ஆம் திகதி முதல் **2023.10.02** ஆம் திகதி வரை கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
2. மேலதிக விபரங்களை இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளரிடம் (பெறுகை) பெற்றுக்கொள்ளலாம்.

   (தொ.பே: **074 2012366 / 077 133 7635** மின்னஞ்சல் – **tender@colombolotustower.lk).**
3. மனுக்கள் **2023.10.31** ஆம் திகதி வரை செல்லபடியாகும்.
4. முத்திரையிடப்பட்ட மனுக்கள் **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10** இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்திற்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.
5. அனைத்து மனுக்களும் கட்டாயமாக மேலே குறிப்பிட்டுள்ள மனுப் பாதுகாப்புத் தொகையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனுப்பாதுகாப்புத் தொகை செல்லுபடியாகும் **2023.11.30**
6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,
கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்,
இல. 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10,**

**The Housewives' companion
Classifieds on
Daily News**

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை தேசிய வைத்தியசாலை, கொழும்பு – 10

### வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள Servers மற்றும் வலைப்பின்னல் மேற்கொள்வதற்காக வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை நிறுவனம் ஒன்றை தேர்வு செய்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள Servers மற்றும் வலைப்பின்னல் மேற்கொள்வதற்காக வருடாந்த பராமரிப்பு மற்றும் சேவை நிறுவனம் ஒன்றை தேர்வு செய்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.


**குறிப்பு இலக்கம்:- SH/10/Fiber Network/2023**

02. மேலுள்ள பணியை மேற்கொள்வதற்கு தகுதியுடைய நிறுவனங்கள் மற்றும் நபர்கள் இதற்காக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என்பதோடு மீளளிக்கப்படாத 2,000.00 ரூபா வைப்பு ஒன்றை இலங்கை தேசிய வைத்தியசாலை சிறாப்பர் பிரிவுக்கு செலுத்திய பின் 2023.09.25 ஆம் திகதி தொடக்கம் 2023.10.17 ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 02.00 வரையான காலத்தில் இலங்கை தேசிய வைத்தியசாலை வழங்கல் பிரிவில் குறித்த விலைமனு ஆவணங்களைக் கொண்ட விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

03. 2023.10.28ஆம் திகதி மு.ப. 10.00க்கு இலங்கை தேசிய வைத்தியசாலை தலைமை கணக்காளர் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.


**வி. மருத்துவர் டபிள்யு.கே. விக்ரமசிங்க
பிரதிப் பணிப்பாளர் நாயகம்,
தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
இலங்கை தேசிய வைத்தியசாலை**

## சிறு விளம்பரம்



### மோட்டார் வாகனங்கள்






106 **கார்கள்** விற்பனைக்கு

CAP-3399 MAHINDRA 2015, CAR அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 060574

**பெயர் மாற்றம்**


கற்பிட்டி வன்னிமுந்தலில் வசித்து வரும் "என்டனி றுவன்கன் கொஸ்தா"ஆகிய நான் இஸ்லாம் மதத்தை தழுவி எனது பெயரை "முபீன் மொஹமட் அஸ்மீர்" (MUBEEN MOHAMED ASMEER) என மாற்றியுள்ளேன் என்பதனை இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**- முபீன் மொஹமட் அஸ்மீர் -**



117 **வேன்கள்** விற்பனைக்கு

580828 NISSAN 1991, VAN அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலை பேசி. 0714542958. 060579



122 **மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

QB-5067 BAJAJ 2005, THREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 070599916 3 . 060583

YI-4816 BAJAJ 2011, THREE WHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 060572

# பொருட் கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-66

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் கொள்முதல் சபையின் தலைவர் கீழ்வரும் பொருட்களை வழங்குவதற்காக இலங்கை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து/ வழங்குநர்கள் அல்லது அவர்களது அதிகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| | Item | Roll | Bid Reference No | Bid Security (Rs.) |
|---|---|---|---|---|
| 01 | **Thermal Laminating Film Roll 13" gloss** | **05** | SCP02/NCB12/0/2022-23 | 77,000.00 |
| | **Thermal Laminating Film Roll 13" matt** | **10** | | |
| | **Thermal Laminating Film Roll 18" gloss** | **15** | | |
| | **Thermal Laminating Film Roll 18" matt** | **15** | | |
| | **Thermal Laminating Film Roll 20" gloss** | **10** | | |
| | **Thermal Laminating Film Roll 20" matt** | **10** | | |

2023.09.25ஆம் திகதி முதல் 2023.10.09ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மேற் கூறப்பட்டுள்ள உருப்படிகளுக்கு ரூபா 3000.00 வீதம் மீளளிக்கப்படாத மனுகட்டணம் செலுத்தி. கீழே தரப்பட்டுள்ள அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் உள்நாட்டு வழங்கல் பிரிவில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனு ஏற்றுக்கொள்ளும் மற்றும் விலைமனு திறக்கப்படும் இறுதி தினம் - 2023.10.10ஆந் திகதி பி.ப. 2.00 மணி

மேலதிக விபரங்களுக்கு கடமை நாட்களில் மு.ப. 8.30 மணி தொடக்கம பி.ப. 4.15 மணி வரை 011-2694898 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அல்லது www.documents.gov.lk இணையத்தளத்தினூடாக தொடர்புகொள்ளலாம்.

**தலைவர், பொருட் கொள்வனவு குழு,
அரசாங்க அச்சுத் திணைக்களம்,
இல. 118, டாக்டர் டனிஸ்டர் டீ சில்வா மாவத்தை, கொழும்பு 08.
2023.09.25
தொலைபேசி: 011-2694898
இணையத்தளம்: www.documents.gov.lk**

## விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்

### விலைமனுக்களுக்கான அழைப்பு

கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் (BIA) இணைந்த வருகை நடைபாதை தரை பகுதியில் (சுற்றுலா பயணிகள் வெளியேறும் பகுதி) வைன் மற்றும் பியர் உட்பட உணவுக் கடையை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கான தேசிய போட்டிரீதியான விலைமனு

**கேள்வி இல.: 0104/T/2023**

மூன்று (03) ஆண்டுகளுக்காக **கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் (BIA) இணைந்த வருகை நடைபாதை தரை பகுதியில் (சுற்றுலா பயணிகள் வெளியேறும் பகுதி) வைன் மற்றும் பியர் உட்பட உணவுக் கடையை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்காக** முறையான வர்த்தகப் பதிவு மற்றும் சிறந்த அனுபவம் மற்றும் நிறுவப்பட்ட வர்த்தகத்தில் நற்பெயரைக் கொண்ட புகழ்பெற்ற உணவு வழங்குநர்கள்/ ஹோட்டல் வழங்குநர்கள்/ உணவக நடத்துனர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு ஆவணங்களுடன் விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பொருந்துகின்ற ஏனைய விடங்கள் வழங்கப்படும். விலைமனுதாரரின் வர்த்தக முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் கோரிக்கைக் கடிதம் ஒன்றுடன் தொகுதி ஒன்றுக்கு ரொக்கப் பணமாக **5,000.00 ரூபா** மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், பயணிகள் முனைய கட்டிடம், 2ஆவது மாடி, இல. 31, வர்த்தக மற்றும் ஆதனங்கள் பிரிவின் அலுவலகத்தில் இருந்து **2023 ஒக்டோபர் 17** ஆம் திகதி **மு.ப. 9.00** தொடக்கம் **பி.ப. 2.30** வரை வேலை நாட்களில் விலைமனு ஆவணங்களை பெறலாம். விலைமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத கட்டணமாக **5,000.00 ரூபாவை** ஒன்லைன் கொடுப்பனவாக மேற்கொண்டு www. airport.lk என்ற விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட் (AASL) இன் இணையதளத்தில் இருந்தும் வாங்க முடியும்.

நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விலைமனு படிவங்களில் மாத்திரமே விலைமனுக்களை மேற்கொள்ளல் வேண்டும் என்பதோடு இலங்கை மத்திய வங்கி மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி அல்லது உரிமம் பெற்ற சிறப்பு வங்கி ஒன்றினால் வழங்கப்பட்ட வங்கி வரைவு அல்லது வங்கி பிணை ஒன்றின் வடிவத்தில் **360,000.00 ரூபா** பெறுமதியான விலைமனு பிணை முறி ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அது **விலைமனுக்கள் திறக்கப்படும் திகதியில் இருந்து அல்லது பணமாக 150 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.**

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு அதனைத் தொடர்ந்து வைன் மற்றும் பியர் உட்பட உணவுக் கடைக்கு செல்வது **2023 ஒக்டோபர் 06** ஆம் திகதி **பி.ப. 2.00** க்கு இடம்பெறும் என்பதோடு விலைமனுவுக்கு முந்திய சந்திப்புக்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் முறையான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு பங்கேற்கலாம். முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் விலைமனு குழு இல.1-தலைவரின் பெயருக்கு விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவு, விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புவது அல்லது விலைமனு குழு இல. 1 என பெயரிடப்பட்ட விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் இட வேண்டும். விலைமனுக்களை ஏற்பது **2023 ஒக்டோபர் 18** ஆம் திகதி **பி.ப. 2.00க்கு** நிறைவடைவதோடு அதன் பின் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட், விநியோக சங்கிலி முகாமைத்துவ பிரிவின் அலுவலகத்தில் உடன் பகிரங்கமாக திறக்கப்பட்டு வாசிக்கப்படும். விலைமனுக்களை மூடுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு பின் கிடைக்கும் எந்த ஒரு விலைமனுவும் நிராகரிக்கப்படுவதோடு திறக்கப்படாது. விலைனுக்களை திறக்கும் நேரத்தில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் முறையான அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம்.

மேலதிக விபரங்களை head.cp@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது 011-2264005 என்ற தொலைபேசி இலக்கத்தில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், பயணிகள் முனையக் கட்டிடத்தின் 2ஆவது மாடி, இல. 31 அறையில் வர்த்தக மற்றும் ஆதனங்கள் பிரிவில் இருந்து பெறலாம்.

**தலைவர்
விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (பிறைவெட்) லிமிடெட்
பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்
கட்டுநாயக்க**

## ஆசிய விளையாட்டுப் போட்டி:

# இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்ற இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கு பதக்கம் உறுதி

**சீனாவிலிருந்து நிரோஷன் பிரியங்கர**

சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டு போட்டியின் மகளிர் கிரிக்கெட் போட்டியின் அரையிறுதியில் பாகிஸ்தான் அணியை 6 விக்கெட்டுகளால் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்ற இலங்கை அணி பதக்கம் ஒன்றை உறுதி செய்துள்ளது.

ஹாங்சோ நகரில் நடைபெற்று வரும் ஆசிய கிண்ண விளையாட்டுப் போட்டியில் நேற்று (24) பாகிஸ்தானை சந்தித்த இலங்கை அணி எதிரணியை முதலில் துடுப்பெடுத்தாட பணித்தது. டி20 வடிவத்தில் நடைபெறும் இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய பாகிஸ்தான் அடுத்தடுத்து விக்கெட்டுகளை பறிகொடுத்ததால் ஓட்டங்களை அதிகரிக்கத் தவறியது.



அந்த அணி 20 ஓவர்களுக்கும் 9 விக்கெட்டுகளை இழந்து 75 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. மூவர் மாத்திரமே இரட்டை இலக்கங்களை பெற்ற நிலையில் ஆரம்ப வீராங்கனை ஷவால் சுல்பிகார் பெற்ற 16 ஓட்டங்களுமே அதிகபட்சமாக இருந்தது.

இதன்போது அபாரமாக பந்து வீசிய மிதவேகப்பந்து வீச்சாளர் உதேஷிகா பிரபோதனி 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு கவிஷா டில்ஹாரி 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இந்நிலையில் பதிலெடுத்தாடிய இலங்கை அணி 16.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 77 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. ஹஷிதா சமரவிக்ரம அதிகபட்சமாக 23 ஓட்டங்களை பெற்றார்.

இந்த வெற்றியுடன் இறுதிப் போட்டிக்கு நுழைந்திருக்கும் சாமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி ஆசிய விளையாட்டுப் போட்டியில் தங்கம் அல்லது வெள்ளிப் பதக்கத்தை வெல்வது உறுதியாகியுள்ளது.

இலங்கை அணி இறுதிப் போட்டியில் இன்று இந்திய அணியை எதிர்கொள்ளவுள்ளது. இந்திய அணி தனது அரையிறுதியில் பங்களாதேஷ் அணியை 51 ஓட்டங்களுக்கு சுருட்டி இலகு வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது.

## நெஸ்டமோல்ட் சைக்கிளோட்ட போட்டியில் மாகே முதலாமிடம்




நெஸ்டமோல்ட் சைக்கிளின் சலேஞ்ச் சைக்கிள் பந்தயத்தின் ஆடவர் கனிஸ்ட பிரிவில் எஸ்.எஸ்.எச் மாகே வெற்றியீட்டினார்.

கொழும்பு விஹாரமஹாதேவி பூங்காவுக்கு அருகில் நேற்று (24) ஆரம்பமான இந்தப் போட்டியில் 24 கிலோமிற்றர்கள் தூரம் கொண்ட கனிஷ்ட பிரிவு போட்டியில் எஸ்.எஸ்.எச் மாகே 43.49 நிமிடங்களில் போட்டித் தூரத்தை முடித்து வெற்றியீட்டினார். இவர் கதிரான ஸ்பீட் சைக்கிள் கழகத்தின் சார்பிலேயே போட்டியில் பங்கேற்றிருந்தார்.

இதில் களனி சைக்கிள் கழகத்தின் சார்பில் பங்கேற்ற எம்.ஏ.எஸ்.எச். சமரவீர இரண்டாம் இடத்தையும் வென்னப்புவ சைக்கிள் கழகத்தின் சார்பில் போட்டியில் பங்கேற்ற எம்.டி.டி. பெரேரா மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.




இந்த சைக்கிளோட்ட பந்தயத்தில் 08 போட்டிகளில் 650க்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டிகளுக்கு நெஸ்லே நெஸ்டமோல்ட் பூரண அனுசரணை வழங்கியது.

# ஹசரங்கவின் உபாதையால் உலகக் கிண்ணத்திற்கு செல்லும் இலங்கை குழாத்திற்கு பெரும் பின்னடைவு

தொடைப் பகுதியில் உபாதைக்கு உள்ளாகி இருக்கும் இலங்கை சுழற்பந்து சகலதுறை வீரர் வனிந்து ஹரங்கவின் காயம் தீவிரமாக உள்ள நிலையில் அவரை விரைவாக மைதானத்திற்கு திரும்பச் செய்ய மருத்துவர்கள் கடைசிக்கட்ட முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும் அவர் விரைவாக குணமடையும் வாய்ப்பு மிகக் குறைவாகவே உள்ளது என்று இலங்கை கிரிக்கெட் மருத்துவக் குழு தலைவர் பேராசிரியர் அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.



அண்மையில் நடைபெற்ற லங்கா பிரிமியர் லீக் போட்டியின்போது தொடைப்பகுயில் உபாதைக்கு உள்ளான பின் 26 வயதான ஹசரங்கள் காயத்தில் இருந்து மீண்டு வரும் சிகிச்சையில் ஈடுபட்டு வந்தார். இந்நிலையில் கடந்த வாரம் பயிற்சியில் ஈடுபட்டபோது அவர் உபாதைக்கு உள்ளான அதே தசைப் பகுதியில் பாதிப்பு உள்ளாகியுள்ளது. இது அவர் குறைந்தது நான்கு வாரங்கள் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது.

"அவருக்கு அறுவைச் சிகிச்சை தேவைப்படுகிறதா அல்லது இல்லையா என்பது பற்றி நாம் வெளிநாட்டு மருத்துவர்களிடம் ஆலோசனை பெற்று வருகிறோம். அவ்வாறு ஏற்பட்டால் அவர் குறைந்தது மூன்று மாதங்களுக்கு ஓய்வு எடுக்க வேண்டி ஏற்படும். தற்போதைய சூழலில் நிலைமை அவ்வளவு மோசமில்லை என்றபோதும் அவர் உலகக் கிண்ணத்தில் பங்கேற்பது பெரும்பாலும் சாத்தியமில்லாமலேயே உள்ளது" என்று அர்ஜுன டி சில்வா ஆங்கில பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

"எமது பந்துவீச்சில் அவர் முக்கியமானவராக இருக்கும் நிலையில் குறைந்தது முக்கியமான போட்டிகளில் அவரை பயன்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பில் நாம் ஆராய்ந்து வருகிறோம். நாம் அவரது மருத்துவ அறிக்கைகளை காண்பித்திருப்பவர்களின் ஆலோசனையிலேயே எல்லாம் தங்கியுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

உபாதைக்கு உள்ளாகி இருக்கும் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர உலகக் கிண்ணத்தில் பங்கேற்காத சூழலில் ஹசரங்க இடம்பெறாதபட்சத்தில் அது இலங்கை அணிக்கு பெரும் இழப்பாக அமையும்.

"சமீர தற்போது பந்து வீசுகின்றபோதும் தொடந்தும் வலியை உணர்கிறார். அவருக்கு எவ்வாறு சிறந்த முறையில் சிகிச்சை அளிப்பது என்பது பற்றி நாம் பிரிட்டனைச் சேர்ந்த மருத்துவர் ஒருவரிடம் ஆலோசனை பெற்றோம்" என்று அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் உலகக் கிண்ண போட்டியில் பங்கேற்பதற்காக இலங்கை அணி நாளை (26) இந்தியாவை நோக்கி பயணிக்கவுள்ளது. ஹசரங்க இலங்கை அணியில் இடம்பெற்றாலும் அவர் அணியுடன் நாளை பயணிக்க மாட்டார் என்று இலங்கை தேர்வுக் குழு தலைவர் பிரமோத்ய விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். ஹசரங்க குழாத்தில் இருந்து வெளியேறும் பட்சத்தில் அணியுடன் பயணிக்கும் இரு மேலதிக வீரர்களான துஷான் ஹேமந்த மற்றும் சாமிக்க கருணாரத்ன ஆகிய இருவரில் ஒருவர் தேர்வு செய்யப்படவுள்ளார்.

ஹசரங்க சிம்பாப்வேயில் நடைபெற்ற உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் தொடர்ச்சியாக மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தி வக்கார் யூனிசின் சாதனையையும் முறியடித்திருந்தார். இந்தத் தொடரில் அவர் 12.9 பந்துவீச்சு சராசரியுடன் 22 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

உபாதை காரணமாக ஆசிய கிண்ண தொடரில் இடம்பெறாத வேகப்பந்து வீச்சாளர்களான லஹிரு குமார மற்றும் டில்ஷான் மதுஷங்க முழு உடல் தகுதியை பெற்று உலகக் கிண்ண குழாத்தில் இடம்பெற்றிருப்பதோடு இவர்களுடன் கசுன் ராஜித்த மற்றும் மதீஷ பதிரணவும் வேகப் பந்து வரிசையில் உள்ளனர்.

ஆசிய கிண்ணத் தொடரின் இலங்கையின் கடைசி இரண்டு போட்டிகளிலும் கசுன் ராஜித்தவுக்கு பதில் சேர்க்கப்பட்ட பிரமோத் மதுஷான் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட இடதுகை வேகப்பந்து வீச்சாளர் பினுர பெர்னாண்டோ ஆகியோர் அணியில் சேர்க்கப்படவில்லை.

ஆசிய கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி சுப்பர் 4 போட்டியின்போது உபாதைக்கு உள்ளான சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷன முழு உடல் தகுதியை காண்பித்த நிலையில் உலகக் கிண்ண குழாத்தில் இடம்பெற்றுள்ளார். அதேபோன்று இளம் சுழற்பந்து வீச்சாளர் துனித் வெள்ளாலகேயும் இலங்கை குழாத்தில் தனது இடத்தை தக்க வைத்துள்ளார்.

சில வீரர்கள் பற்றி கேள்விகள் இருந்தபோதும் ஆசிய கிண்ணத்தில் ஆடிய அதே துடுப்பாட்ட வரிசையை உலகக் கிண்ணத்திற்கும் தேர்வு செய்ய தேர்வாளர்கள் முடிவு செய்துள்ளனர். குறிப்பாக அணித் தலைவர் தசுன் ஷானக்க துடுப்பாட்டத்தில் தொடந்து சோபிக்கத் தவறி வருவதோடு டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன திறமையை வெளிப்படுத்தாத நிலையின் ஆசிய கிண்ணத்தின் கடைசி இரு போட்டிகளிலும் நீக்கப்பட்டிருந்தார்.

இதன்படி இலங்கை குழாத்தில் அணியுடன் பயணிக்கும் இரு மேலதிக வீரர்களுடன் 17 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் திமுத் கருணாரத்ன, குசல் ஜனித் பெரேரா, தனஞ்சய டி சில்வா மற்றும் குசல் மெண்டிஸ் ஆகிய வீரர்கள் மாத்திரமே இதற்கு முன் ஒருநாள் உலகக் கிண்ணத்தில் ஆடிய அனுபவத்தை பெற்றவர்களாவர்.

நாளை இந்தியா செல்லும் இலங்கை அணி எதிர்வரும் வியாழக்கிழமை (28) பங்களாதேஷுக்கு எதிராகவும் தொடர்ந்து ஒக்டோபர் 3ஆம் திகதி அவுஸ்திரேலியாவுக்கு எதிராகவும் பயிற்சி போட்டிகளில் ஆடவுள்ளது.

உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி தனது முதல் போட்டியில் வரும் ஒக்டோபர் 7 ஆம் திகதி தென்னாபிரிக்காவை டெல்லியில் சந்திக்கவுள்ளது.

இலங்கை அணி கடந்த வாரமே தேர்வு செய்யப்பட்டபோதும் நேற்று (24) பின்னேரம் வரையில் இலங்கை உத்தியோபூர் குழாம் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கை குழாம்: தசுன் ஷானக்க (தலைவர்), பத்தும் நிசங்க, குசல் ஜனித் பெரேரா, திமுத் கருணாரத்ன, குசல் மெண்டிஸ், சரித் அசலங்க, தனஞ்சய டி சில்வா, சதீர சமரவிக்ரம, வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷன, துனித் வெள்ளாலகே, லஹிருகுமார, கசுன் ராஜித்த, மதீஷ பதிரண, டில்ஷான் மதுஷங்க, அணியுடன் செல்லும் மேலதிக வீரர்கள்: சாமிக்க கருணாரத்ன, துஷான் ஹேமந்த

# எரிபொருள் கிடங்கு வெடித்து பெனினில் 35 பேர் உயிரிழப்பு



பெனின் நாட்டில் எரிபொருள் கிடங்கு ஒன்று வெடித்து குறைந்தது 35 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதனால் பெரும் தீப்பிழம்பு மற்றும் கறும்புகை மேலெழுந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நைஜீரிய நாட்டு எல்லையை ஒட்டிய செமே பொட்ஜி நகரில் கடந்த சனிக்கிழமை கடத்தப்பட்ட எரிபொருட்களை வைத்திருந்த களஞ்சியம் ஒன்றிலேயே தீ பரவியுள்ளது.

இதனால் அருகில் இருந்த கார் வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளும் தீயில் கருகியுள்ளன.

பிரதான எண்ணெய் உற்பத்தி நாடான நைஜீரியாவை ஒட்டிய பெனின் எல்லை பகுதிகளில் எரிபொருள் கடத்தல் வழக்கமான ஒன்றாக உள்ளது. சட்டவிரோத சுத்திகரிப்புகள், எரிபொருள் கிடங்குகள் மற்றும் குழாய்கள் எல்லை நகரங்கள் எங்கும் பரவிக் காணப்படுகின்றன.

# உக்ரைன் நாட்டின் அமைதி திட்டத்திற்கு ரஷ்யா மறுப்பு



ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கே லாவ்ரோவ் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் உக்ரைன் முன்வைத்த அமைதித் திட்டத்தை நிராகரித்துள்ளார்.

அந்தத் திட்டத்துக்கு அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் ஆதரவளிப்பதைத் லாவ்ரோவ் கண்டித்தார்.

கருங்கடல் தானிய ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கும் உலக நிறுவனத்தின் முயற்சி நடைமுறைக்கு ஏற்றதல்ல என்றார் லாவ்ரோவ். உக்ரைனியப் போரை மேற்கத்திய நாடுகள் வழிநடத்துவதாக அவர் சாடினார்.

அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்கள் கொடுத்து உதவுவதை அவர் சுட்டிக்காட்டினார்.

ரஷ்யப் படையெடுப்புக்கு எதிராகக் கூடுதல் ஆதரவு திரட்ட உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி அமெரிக்கா சென்றுள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான 10 அம்ச அமைதித் திட்டத்தை அவர் முன்வைத்துள்ளார்.

கிரைமியா உட்பட உக்ரைனின் ஆக்கிரமிக்கப்பட்ட எல்லாப் பகுதிகளில் இருந்தும் ரஷ்யப் படையினர் மீட்டுக்கொள்ளப்பட வேண்டும் என்பதும் திட்டத்தின் நிபந்தனைகளில் ஒன்றாகும்.

## சர்வதேச செய்திகள்

# இஸ்ரேலிய சுற்றிவளைப்பில் மேலும் இரு பலஸ்தீனர்கள் சுட்டுக் கொலை

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் வட பகுதியில் உள்ள நகரான துல்கரமில் இஸ்ரேலிய இராணுவம் நடத்திய சுற்றுவளைப்பு தேடுதலில் இரு பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

நேற்று (24) இடம்பெற்ற இந்த நடவடிக்கையில் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூட்டில் 21 வயது ஆசித் அபூ அலி மற்றும் 32 வயது அப்துர்ரஹ்மான் அபூ தகேஸ் என்ற இருவரே கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இதன்போது உடைமைகளுக்கும் கடும் சேதம் ஏற்பட்டுள்ளது.

போராட்டக் குழுவின் கட்டளை மையம் மற்றும் கட்டடம் ஒன்றில் இருந்த ஆயுதக் கிடங்கு வசதியை அழிப்பதற்காகவே நூர் ஷம்ஸ் அகதி முகாமுக்கு சென்றதாக இஸ்ரேல் இது பற்றி விளக்கம் அளித்துள்ளது.



இந்த மாத ஆரம்பத்தில் இதே அகதி முகாமில் இஸ்ரேல் நடத்திய சுற்றிவளைப்பில் 21 வயதான அயத் சமிஹ் காலித் அபூ ஹர்ப் என்ற இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேலிய இராணுவத்தின் சுற்றுவளைப்புகள் அதிகரித்துள்ளன. பலஸ்தீன போராட்டக் குழுக்களை களையறுப்பதற்கும் எதிர்கால தாக்குதல்களை முறியடிப்பதற்கும் இவ்வாறான சுற்றிவளைப்புகளை நடத்துவதாக இஸ்ரேல் கூறுகிறது.

கடந்த ஜூலையில் ஆக்கிமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இஸ்ரேல் நடத்திய மிகப் பெரிய தாக்குதல் ஒன்றாக ஜெனின் அகதி முகாமில் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 12 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதோடு 100க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

பஸ்தீனர்களின் உயிரிழப்புகள் தொடர்பில் கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்ட 2006 தொடக்கம் அதிக பலஸ்தீனர்கள் உயிரிழந்த ஆண்டாக இந்த ஆண்டு இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு ஆம்பித்தது தொடக்கம் இஸ்ரேலிய துப்பாக்கிச் சூடுகளில் 200க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இந்தக் காலப்பிரிவில் பலஸ்தீனர்களின் தாக்குதல்களில் குறைந்தது 35 இஸ்ரேலியர் கொல்லப்பட்டுள்ளனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 25ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன்
THINAKARAN


# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## கேள்வி அழைப்பு

### மாவட்ட செயலகம் - பொலன்னறுவை

பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தினால் செயற்படுத்தப்படும் கீழ்க்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளசெயற் திட்டத்திற்காக சீடா (CIDA) நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. பொலன்னறுவை மாவட்ட செயலாளர், பெறுகைக் குழுவின் தலைவரால் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுவதுதுடன், குறித்த கேள்விப் பத்திரங்கள் 2023.09.22 முதல் 2023.10.05 வரை பெற்றுக்கொள்ளலாம்.
2. கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த தரத்தில் செல்லுபடியாகும் பதிவு உள்ள விண்ணப்பதாரிகள் தகைமை பெறுவர். மீளளிக்கப்படாத பெறுகை கட்டணமாக பொலன்னறுவை மாவட்ட செயலாளர் பணிமனையில் காசாளரிடம் காசாக ரூ.3,000.00 செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
3. முறையாக பூரத்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 2023.10.06 பி.ப 2.30 இற்கு முன் கிடைக்குமாறு இலங்கையில் செயற்படும் மத்திய வங்கியின் அனுமதி பெற்ற வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 105 நாட்கள் செல்லுபடியாகும் கேள்விப் பிணையொன்றுடன் “மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், பொலன்னறுவை” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். இல்லையெனில் மாவட்ட செயலகத்தின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். கேள்வி பத்திரங்களை சரியாக பூர்த்தி செய்து மூலப்பிரதிகள் மற்றும் நகல்பிரதிகள் வேறுவேறாக பொறியிட்டு உள்ளிட்டு மீண்டும் அவ் உறைகள் இரண்டையும் தனி உறையில் இட்டு பொதியிடல் வேண்டும். அத்துடன் சகல உறைகளிலும் இடது பக்க மேல் மூலையில் குறித்த வேலையின் பெயரைக் குறிப்பிட்டு இருத்தல் வேண்டும்.
4. கேள்விப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்து அதாவது 2023.10.07 பி.ப 2.30 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.
5. கேள்வி திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிப்பதற்கு அனுமதியுண்டு.
6. பூர்த்தியற்ற மற்றும் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. நிர்மாணம் பற்றிய விபரங்களை பொலன்னறுவை மாவட்ட செயலகத்தின் மாவட்ட பொறியியலாளரிடம் (தொ.பே.இல : 027-2222269) பெற்றுக் கொள்ளலாம்.
8. கேள்வி பற்றிய இறுதி தீர்மானம் எடுத்தல் பெறுகைக் குழுவிற்கு உரியது.
9. நடப்பு ஆண்டின் வெட் இற்கான பதிவு செய்யப்பட்ட சான்றிதழ்களின் பிரதியொன்றையும் இணைக்க வேண்டும்.
10. முழுமையான கேள்வியை அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது ஏற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு பெறுகைக் குழுவிற்கு உரியது.
11. கடந்த 5 வருடத்திற்குள் இடம்பெற்ற செயற்றிட்டங்கள் பற்றிய விபரங்களுடன் சம்பந்தப்பட்ட கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

**அட்டவணை**

| # | நிர்மாண வேலையின் பெயர் | மதிப்பிடப்பட்ட தொகை (வெட் இன்றி) ரூ. | தேவைப்படும் சீடா (CIDA) பதிவு | கேள்விப்பத்திரக் கட்டணம் மீளளிக்கப்படாத ரூ. | கேள்விப் பிணை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | பொலன்னறுவை புராதன தொழில்நுட்ப மெழுகு சிலை நூதனசாலையின் அத்தியாவசிய பழுதுபார்த்தல் வேலைகள் | 11,076,659.41 | C6 AND C5 (Building) | 3,000.00 | 150,000.00 |

**டபிள்யூ.ஏ. தர்மசிரி,**
**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலாளர் / தலைவர்,**
**மாவட்ட செயலகம்,**
**பொலன்னறுவை.**

## பெறுகை அறிவித்தல்

### மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

**களுத்துறை நிறைவேற்று பொறியியலாளர் பணிமனையினால் நிறைவேற்றப்படும் சிசுவிரு கல்லூரிக்கான மிக்ஸ் கொங்கிறீட் GRADE 25 (20mm) Slump 100±25mm பெற்றுக் கொள்ளல்)**

**கேள்வி இல. PRDA/WP/PRO/2023/81**

இவ் அதிகார சபையில் மேற்படி செயற்றிட்டத்திற்குத் தேவையான ரெடிமிக்ஸ் கொங்கிறீட் GRADE 25 (100±20mm கொள்வனவு செய்வதற்கு வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| உருப்படி | அளவு (கியூபிக் மீற்றர்) | கேள்விப் படிவக் கட்டணம் (பதிவு செய்துள்ள வழங்குநர்கள் தவிர்த்து) | காசாக பிணை முறி அல்லது (ரூபா) | வங்கிப் பிணை முறி (ரூ) |
|---|---|---|---|---|
| 1. சிசுவிரு கல்லூரி - முதலாம் மாடி | 300 | 2000.00 + 15% வெட் | 46,100.00 | 92,200.00 |

02. இதற்கான கேள்வி ஆவணத் தொகுதியை 2023.09.25 முதல் 2023.10.09 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை தலைமையகத்தின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

03. இதற்கான கேள்விப் பிணை காசாக அல்லது வங்கி காப்புறுதி பிணைமுறி மூலம் பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

04. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூ. 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் குறித்த 1987 இல 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 08ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரால் விநியோகிக்கப்படும் பொது ஒப்பந்த பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்விகள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2023.10.10 பி.ப. 2.30 ஆவதுடன், கேள்விகள் திறத்தல் அவ் வேளையில்யேலே இவ் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும்.

06. அவ் வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி. அபிவிருத்தி அதிகார சபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**011-4849845/ 011-4549825**

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

SLBFE

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பணியாளர்களுக்கு செயற்பாட்டு அடிப்படையிலான Out Bond பயிற்சிக்காக பொருத்தமான சேவை வழங்குநர் ஒருவரை தெரிவு செய்யும் முன்மொழிவுக்கான வேண்டுகோள்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் SLBFE பணியகம் செயற்பாட்டு அடிப்படையிலான Out Bond பயிற்சிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த பொருத்தான விலைமனுதாரர்களிடமிருந்து முன்மொழிவுகளை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் திணைக்கள பெறுகை குழுத் தலைவர் அழைக்கின்றார்.

இந்தப் பயிற்சியின் நோக்கமானது துரிதமான குழு வேலை, நம்பிக்கை, பயனுள்ள தொடர்பாடல், ஒருங்கிணைப்பு, தலைமைத்துவம், குழு ஒருங்கிணைப்பு மற்றும் பணியாளர்களுக்கிடையிலான சகவாழ்வு என்பனவாகும்.

விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் இடம்பெறும். (NCB)

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-10-04ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், 2ஆம் தளம், மினி கூட்ட அறையில் விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொண்ட விலைமனுதாரர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் செய்ததன் பின் மீளளிக்கப்படாத 3,500.00 ரூபா கட்டணத்தை 2023-09-26ஆம் திகதி முதல் 2023-10-16ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் பத்தரமுல்ல, கொஸ்வத்த, 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் முகாமையாளர் (மனித வளங்கள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

விலைமனுக்களை உள்ளடக்கிய முத்திரைக் குறிபொறிக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘செயற்பாட்டு அடிப்படையிலான பயிற்சிக்காக பொருத்தமான சேவை வழங்குநர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கான முன்மொழிவுகள் - **HR/02/04-09”** எனக் குறிப்பிட்டு பத்தரமுல்ல, கொஸ்வத்த, 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி, பெறுகைப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். இலத்திரனியல் மூலமாக அனுப்பப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் 2023-10-16ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் பத்தரமுல்ல, கொஸ்வத்த, 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி, பெறுகைப் பிரிவிலுள்ள பெறுகை முகாமையாளர் அலுவலகத்தில் விலைக்கோரலில் கலந்துகொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள விலைமனுதாரர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் வகையில் 30,000.00 ரூபா பெறுமதியான நிபந்தனையற்ற கோரிக்கை உத்தரவாத பிணைமுறியொன்றை விலைமனுதாரர்கள் வழங்குதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, கொஸ்வத்த, 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடி, மனிதவளப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2864127)

எந்தக் காரணத்தையும் காட்டாமலும் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவர் தன்னகத்தே கொண்டுள்ளார் என்பதுடன் எந்தவொரு விலைமனுவையும் தயாரித்தல் தொடர்பிலான நேரடியான அல்லது மறைமுகமான எவ்விதமான செலவையும் மீள்செலுத்தும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இது தொடர்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல,**
**இலங்கை.**

**அக்கரையில் மாண்புற இக்கரையில் கைக்கோர்ப்போம்**

பாதுகாப்பு அமைச்சு

## 2024 வருடத்திற்கான தீ ஆயுதம் (துப்பாக்கி) அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல்

தீ ஆயுத்திற்கு செல்லுப்படியான அனுமதிபத்திரமுடைய நபர்கள்/நிறுவனங்களினால் 2024 ஆம் ஆண்டிற்காக தனது தீ ஆயுதம் (துப்பாக்கி) அனுமதிபத்திரங்களை **2023.12.31** ஆம் திகதிக்கு முன்னர் கட்டாயமாக புதுப்பித்துக்கொள்ள வேண்டும். குறித்த தினத்திற்குப் பின்னர் 2024 ஆம் ஆண்டிற்கு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்பட மாட்டாது.

தீ ஆயுத கட்டளைச் சட்ட ஒழுங்கு விதிகளின் படி குறித்த வருடத்திற்கான அனுமதிப்பபத்திரம் பெற்றுக்கொள்ளாமல் ஆகக்கூடியது 10 நாட்கள் மாத்திரமே தீ ஆயுதமொன்றினை தன்வசம் வைத்துக்கொள்ள முடியும் என்பதனால் குறித்த விண்ணப்பபத்திரம் ஒப்படைக்கப்பட்டிருப்பினும் **2024.01.10** ஆம் திகதிக்குள் அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள முடியாமற் போனால் குறித்த அனுமதிப்பத்திரம் கிடைக்கும் வரை தற்காலிகமாக தீ ஆயுதத்தினை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திடம் ஒப்படைக்க வேண்டும்.

2024 ஆம் ஆண்டிற்கான சகல தீ ஆயுத அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் **2023 ஒக்டோபர் மாதம் 01** ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்படும்.

கீழே (அ) பிரிவின் கீழ் கொண்டுவரப்படும் தீ ஆயுத அனுமதிபத்திரங்களை புதுப்பித்துக்கொள்ளும் நடவடிக்கை இவ் அமைச்சினால் நேரடியாக மேற்கொள்ளப்படுவதோடு (அ) பிரிவில் அடங்காத ஏனைய சகல தீ ஆயுதங்களுக்கான (விவசாயம் மற்றும் விலங்குகளை கட்டுப்படுத்தல், சொத்துப்பாதுகாப்பு) அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்துக்கொள்ளும் நடவடிக்கை மாவட்ட செயலாளர்கள்/அரசாங்க அதிபர்களினால் **2023.10.01** ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு **2023.12.31** ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளப்படும். அது தொடர்பாக குறித்த மாவட்ட செயலாளர்களினால் அறிவிக்கப்படும்.

(அ) பந்தி

I. பல்வேறு சிவில் நபர்கள், அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு உயிர் மற்றும் சொத்துப் பாதுகாப்புக்காக விநியோகிக்கப்பட்டுள்ள சகல **9 மி.மி** கைத்துப்பாக்கிகள் மற்றும் **.38** வகை ரிவால்வர்கள்

II. மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளுக்காக தற்காலிக அடிப்படையில் விநியோகிக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்கு சொந்தமான அனைத்து தீ ஆயுதங்கள்

III. தேசிய ரைபல் சங்கத்தின் மற்றும் அதனை சார்ந்த விளையாட்டு அமைப்புகளின் அங்கத்தவர்களிடம் உள்ள அனைத்து தீ ஆயுதங்கள்

IV. தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்பட்ட அனைத்து தீ ஆயுதங்கள்

V. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு உயிர் மற்றும் சொத்து பாதுகாப்பிற்காக விநியோகிக்கப்பட்டுள்ள ரிப்பீட்டர் வகை தீ ஆயுதம்.

மேற் குறிப்பட்ட அனைத்து தீ ஆயுதங்களுக்கான அனுமதிப்பத்திரம் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்திரத்தினை பாதுகாப்பு அமைச்சின் **www.defence.lk** இணையத்தளத்தில் பதிவிறக்கம் (download) செய்துகொள்ள முடியும். மேற்படி (அ) பிரிவின் கீழ் கொண்டுவரப்படும் தீ ஆயுதத்திற்கு மாத்திரம் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்திரம் மற்றும் தீ ஆயுத அனுமதிப்பத்திரம் புதுபிப்பதற்கான அனுமதிப்பத்திர கட்டணத்தினை செயலாளர், பாதுகாப்பு அமைச்சு பெயரில் தப்ரோபென் கிளைக்கு இலக்கம் 0007040119 கணக்கில் வைப்பிலிட்டு பற்றுச்சீட்டின் உண்மை பிரதியுடன் இவ் அமைச்சிற்கு பிரவேசிக்கும் வளாகத்தில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி பிரிவில் விண்ணப்பதாரியினால் ஒப்படைக்க வேண்டும். தேவையேற்படின் விண்ணப்பதாரியினை அலுவலகத்திற்கு அழைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

துப்பாக்கி கட்டளைச் சட்டத்தின் 22 வது பிரிவின் ஒழுங்குகளுக்கு அமைவாக செல்லுப்படியான அனுமதிப்பத்திரம் இல்லாது தீ ஆயுதமொன்றினை தன்வசம் வைத்திருந்தால கீழ்வரும் தண்டனைகளை அனுபவிக்க நேரிடும் என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

I. குறித்த குற்றத்தினை முதலாவது தடவை புரிந்தால் பத்தாயிரம் ரூபாவிற்கு மேற்படாத தண்டம் அல்லது ஐந்து வருடத்திற்கு மேற்படாத கடூழிய சிறைத்தண்டனைக்கு அல்லது இவ் தண்டனைகள் இரண்டிற்கும் உட்படுவர்.

II. குறித்த குற்றத்தினை இரண்டாவது தடவை அல்லது அதன் பின்னரும் புரிந்தல் பத்து வருடங்களுக்கு குறையாத மற்றும் இருபது வருடங்களுக்கு மேற்படாத காலம் கடூழிய சிறைத்தண்டனைக்கு உட்படுவர்

III. அதேபோன்று இக்குற்றம் **தன்னியக்க துப்பாக்கி** அல்லது **மீள் உதை சுடு துப்பாக்கியொன்றை** (ரிப்பிட்டர் சொட் கன்) தன் வசம் வைத்துக்கொள்ளல் அல்லது உபயோகிக்கும் சந்தர்ப்பத்தில் குற்றவாளி வாழ்நாள் முழுவதும் சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும்.

இதன் பிரகாரம் சகல தீ ஆயுத உரிமையாளர்களும் 2024 ஆம் ஆண்டிற்கான தீ ஆயுத அனுமதி பத்திரங்களை **2023.12.31** ஆம் திகதிக்கு முன் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென இத்தால் அறிவிக்கின்றேன்.

மேலதிக விபரங்களுக்கு கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்கவும்.
0112430860 - 9
0112430870 - 8

**ஜெனரல் கமல் குணரட்ண (ஓய்வு),**
**டப்டப்வீ ஆர்டப்பீ ஆர்எஸ்பீ யுஎஸ்பீ என்டிசீ பீஎஸ்சீ எம்பில்,**
**செயலாளர்,**
**பாதுகாப்பு அமைச்சு.**

2023.09.25 ஆம் திகதி
ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே,
பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதியில் அமைந்துள்ள
பாதுகாப்பு அமைச்சில்

# பண்டுவஸ்நுவர பிரதேச சபை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் – 2024ஆம் வருடம்

பண்டுவஸ்நுவர பிரதேச சபைக்கு 2024ஆம் வருடத்தில் கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக 2023-09-25ஆம் திகதி முதல் 2023-12-20ஆம் திகதி வரை விண்ணப்பப்படிவங்கள் என்னால் கோரப்படுகின்றன. இதற்கமைய கீழ்க்காணும் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் ஒவ்வொரு விடயம் பொருட்டும் 1500.00 கட்டணம் அறவிடப்படும். கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் தயாரித்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்துடன் பதிவுக் கட்டணத் தொகையை 'செயலாளர், பண்டுவஸ்நுவர பிரதேச சபை', பெயருக்கு எழுதப்பட்ட காசோலை, காசுக்கட்டளை மூலம் அல்லது ரொக்கப்பணமாக அலுவலகத்திற்கு நேரில் வந்து செலுத்தலாம். தபால் மூலம் அனுப்பப்படுவதானால் செயலாளர், பண்டுவஸ்நுவர பிரதேச சபை, ஹெட்டிபொல என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024ஆம் வருடம்'' என்று குறிப்பிட வேண்டும்

| தொடர் இலக்கம் | உருப்படிகள் |
|---|---|
| 01 | அனைத்து வகையான காகிதாதிகளையும் வழங்கல் |
| 02 | அனைத்து அச்சு வேலைகள், அச்சடிக்கப்பட்ட ஆவணங்கள், மாதிரிகளை வழங்கல் |
| 03 | திகதி முத்திரை மற்றும் உத்தியோகபூர்வ முத்திரைகளை தயாரித்து வழங்கல் |
| 04 | பதாகைகள், பெயர்ப்பலகைகளை, அறிவித்தல் பலகை அச்சிடல் மற்றும் வரைதல் உள்ளிட்ட ஓவியம் வரையும் சேவையை வழங்கல் |
| 05 | பொது நூலகம், முன்பள்ளிக்கான பொருட்கள், உபகரணங்களை வழங்கல் |
| 06 | கதிரைகள், உற்சவப் பொருட்கள், செவிப்புல ஊடகக் கருவி மற்றும் ஒலிபெருக்கி உபகரணங்களை வாடகைக்கு அமர்த்துதல் |
| 07 | கணனி இயந்திரம், நகல் பிரதி இயந்திரம், அச்சுப் பொறி, தொலைநகல் இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல் மற்றும் திருத்தவேலைகள் |
| 08 | அலுவலகத் தளபாடங்கள், உருக்கு அல்லது மரத்தாலான உபகரணங்களை வழங்குதல் அல்லது செய்து வழங்குதல் |
| 09 | சுகாதாரப் பிரிவு மற்றும் வீதி அபிவிருத்திக்கு அவசியமான பொருட்கள் உபகரணங்களை வழங்குதல் மற்றும் சேர்விஸ் செய்தல் |
| 10 | இரும்பு வேலை சார்ந்த பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் |
| 11 | மோட்டார் கிரேடர், பெகோ லோடர். வீதியை செப்பனிடும் உபகரண உதிரிப்பாகங்கள் மற்றும் சேவைகள் வழங்கல் |
| 12 | நிர்மாணப் பொருட்கள் வழங்கல் (சீமெந்து, செங்கல், மணல், கிரவல், கருங்கல், இரும்பு, மரம் மற்றும் நிறப்பூச்சு ) |
| 13 | தார் வழங்குதல் |
| 14 | சீமெந்து மற்றும் கொங்கிறீட் சார்ந்த உற்பத்திகளை வழங்கல் |
| 15 | வீதி விளக்குகளைப் பராமரிக்கும் உபகரணங்கள் மின்சாரப் பொருட்கள் வழங்கல் |
| 16 | நீர் வழங்கல் உபகரணங்கள் (பிவீசீ குழாய்கள், தண்ணீர்மானி மற்றும் உதிரிப்பாகங்கள்) வழங்கல் |
| 17 | குழாய்க் கிணறு திருத்தவேலைகள், உபகரணங்கள் அது சார்ந்த சேவைகள் வழங்குதல் |
| 18 | அனைத்து வகையான மோட்டார் வாகனங்களுக்கான திருத்தவேலைகள், சேர்விஸ்களைச் செய்தல் |
| 19 | வாகனங்களுக்கான பெட்டறி, டயர் மற்றும் அது சார்ந்த உபகரணங்கள் வழங்கல் |
| 20 | குப்பைத் தொட்டி கொம்போஸ்ட் தொட்டி மற்றும் பொலிசெக் உறைகளை அச்சிட்டு வழங்கல் |
| 21 | தாவர வகைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் வழங்கல் |
| 22 | உணவு மற்றும் உபசார நடவடிக்கைகள் |
| 23 | தகனச்சாலைக்கு எரிவாயு வழங்குதல் |
| 24 | மொழிபெயர்ப்பு மற்றும் கணனி தட்டச்சு |

**பொது நிபந்தனைகள்**

1. பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைகள் கோரப்படுவதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் அதற்குப் புறம்பாகவும் விலைகளைக் கோரி பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமையை பண்டுவஸ்நுவர பிரதேச சபை தன்னத்தே கொண்டுள்ளது.
2. மேற்படி 03, 04, 05, 06, 09, 23, 24 இலக்க உருப்படிகளுக்கு குருநாகல் மாவட்டத்தினுள்ளும், 10, 14, 22ஆம் இலக்கத்தினால் காட்டப்பட்டுள்ள உருப்படிகளுக்கு பண்டுவஸ்நுவர பிரதேச சபை அதிகார பிரதேசத்திற்குள் உள்ள வழங்குநர்கள் மட்டுமே பதிவு செய்யப்படுவர்.
3. உரிய வேளைகளில் விலைகளைச் சமர்ப்பிப்பதற்கும், உரிய நேரத்திற்கு பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கும், உரிய நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கத் தவறும் வழங்குநர்களின் பதிவு முன்னறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும் என்பதுடன் பதிவுக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது.
4. சகல விண்ணப்பதாரர்களும் அவர்களின் பெறுமதி சேர் வரி (வெட்) பதிவிலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் அனைத்து வழங்குநர்களும் பணம் செலுத்தும் கால எல்லையாக 30 நாட்கள் பண்டுவஸ்நுவர பிரதேச சபைக்கு கடன் வசதியை வழங்குதல் வேண்டும்.
5. வழங்கல் மற்றும் சேவைகளுக்காக முற்பணம் செலுத்தப்பட மாட்டாது.
6. அனைத்து வழங்குநர்களும் 2023ஆம் வருடத்திற்குரிய தமது அதிகாரப் பிரதேசத்தின் உள்ளூராட்சி நிறுவனத்திற்கு வரி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றையும் தமது வியாபார பதிவுச் சான்றிதழின் புகைப்படப் பிரதியொன்றையும் விண்ணபத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

இங்கு குறிப்பிடப்படாத நிபந்தனைகளை விதிப்பதற்கு மற்றும் விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமையை பண்டுவஸ்நுவர பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் பண்டுவஸ்நுவர பிரதேச சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக விபரங்களை 037-2291075 / 071-4443698 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக வாரத்தின் வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

**2023 செப்டெம்பர் 25ஆம் திகதி,**
**பண்டுவஸ்நுவர பிரதேச சபை அலுவலகத்தில்.**

**எச்.ஏ.ஜீ. நிஸ்ஸங்க,**
**செயலாளர்,**
**பண்டுவஸ்நுவர பிரதேச சபை,**
**ஹெட்டிபொல.**

### பண்டுவஸ்நுவர பிரதேச சபை

### வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் - 2024ஆம் வருடம்

### விண்ணப்பப்படிவம்

01. வியாபார உரிமையாளரின் பெயர்:..........................................................................................
02. வியாபாரத்தின் பெயர்:..........................................................................................
03. வியாபாரத்தின் முகவரி:..........................................................................................
04. தொலைபேசி இலக்கம்:..........................................................................................
05. தொலைநகல் இலக்கம்:..........................................................................................
06. பதிவிலக்கம்: ..........................................................................................
07. பெ.சே.வ. (VAT) இலக்கம்:..........................................................................................
08. வழங்க முடியுமான கடன் வசதிகள், மற்றும் கால எல்லை ..........................................................
09. பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்கல் சேவைத் தொகுதி ..........................................................

மேலே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவையென்றும் உண்மையானவையொன்றும் வழங்கல் சேவை தொகுதி இலக்கம் ............ இற்கான பதிவுக் கட்டணமாக ரூ...................... தொகை .................... இலக்கம் மற்றும் ............ திகதியையுடைய காசோலை மூலம்/ காசுக் கட்டளை மூலம்/ பற்றுச் சீட்டின் மூலம் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதென இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................................................
**(உரிமையாளர்/ முகாமையாளர்)**

**திகதி................................**

**நிறுவனத்தின் உத்தியோகபூர்வ முத்திரை**

# தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம் - களுத்துறை

## கட்டிடங்களைப் பழுதுபார்த்தல் – 2023

## கேள்விக்கான அழைப்பு

களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தின் பிரதேச பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் பழுதுபார்த்தல்கள் மற்றும் மேம்படுத்தல் வேலை விடயங்களுக்காக கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | ஒப்பந்த விபரம் | ICTAD ஆகக் குறைந்த தரம் | அடிப்படை செலவு ரூபா மில்லியன் | ஒப்பந்தக் காலம் | கேள்விப் பிணை பெறுமதி ரூபா | மீளளிக்கப் படாத கேள்வி ஆவணக் கட்டணம் ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01 | Renovation of Wash Room at Female Hostel in first floor level (R.H.S.) with repairing slab and beam | C7 or above | 5.78 | 63 | 115,500.00 | 3,500.00 |
| 02 | Improvements to the Seminar Hall No. 02 | C8 or above | 4.3 | 63 | 87,000.00 | 3,500.00 |
| 03 | Improvements of the Dining area at the Seminar Hall No. 02 & Canteen Oil Trap & Wash Room at Seminar Hall No. 03 | C8 or above | 2.2 | 63 | 45,000.00 | 3,500.00 |

மேற்படி வேலைகள் பற்றிய சகல விபரங்களையும் கேள்வி ஆவணங்களுடன் பெற்றுக் கொள்ளலாம்.

2023.09.25 முதல் 2023.10.06 வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தின் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். 2023.10.09 மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.

கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.10.03ம் திகதி தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தில் நடைபெறும்.

தொ.பே. இல: 034-2222264/ 034-2222001 நிர்வாகப் பிரிவு நீடிப்பு : 237/ 333

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம்**
**களுத்துறை.**

# மெதகும்பர பிரதேச சபை

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் ஆண்டுக்கான பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கலுக்காக அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள் மற்றும் வழங்குநர்களிடமிருந்தும் நிர்மாண சேவைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. விண்ணப்பங்களை 2023.12.31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், மெதகும்பர பிரதேச சபை, தெல்தெனிய என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் என்பதோடு விண்ணப்பப்படிவங்களை தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் 2024ஆம் வருடம்'' என குறிப்பிடல் வேண்டும். அந்தந்த வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்கு முன்னால் தரப்பட்டிருக்கும் பதிவுக் கட்டணத்தை செயலாளர், மெதகும்பர பிரதேச சபை என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலை மூலம் மாத்திரம் அனுப்புதல் வேண்டும்.

03. சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவத்தில் இயைபுடைய சான்றிதழ்களின் பிரதிகளையும் (அனைத்து விபரங்கள் சகிதம்) இணைத்து அனுப்புதல் வேண்டும்.

| தொ. இல. | வழங்கல்/ சேவை | பதிவுக் கட்டணம் ரூபா | பதிவுக் கட்டணம் சதம் |
|---|---|---|---|
| 01 | அனைத்து அலுவலக உபகரணங்கள் மற்றும் காகிதாதிகள் | 2,000 | 00 |
| 02 | உருக்கு அலுமாரி, கதிரை, கெபினட் உட்பட உருக்கு உற்பத்திகள் | 2,000 | 00 |
| 03 | அலுவலக அச்சு வேலைகள் | 2,000 | 00 |
| 04 | ஒலிபெருக்கி இயந்திரம் மற்றும் துணைப்பாகங்கள் | 2,000 | 00 |
| 05 | கணனி உட்பட அனைத்து அலுவலக இயந்திரங்கள் மற்றும் துணைப்பாகங்களின் திருத்தவேலைகள் | 2,000 | 00 |
| 06 | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு சேவைகள் (மேசை, கதிரை, அலுமாரி) | 2,000 | 00 |
| 07 | பெயர்ப் பலகை, விளம்பரப் பலகை, பதாகை, இறப்பர் முத்திரை, தின முத்திரை, பதக்கம், விருதுகள், இலச்சினைகள், நினைவுச் சின்னங்கள் மற்றும் எழுத்து வடிவமைப்பு தயாரித்தல் மற்றும் வழங்குதல் | 2,000 | 00 |
| 08 | கணனி ஆலோசனை சேவை வழங்கல் | 2,000 | 00 |
| 09 | மின் உபகரணங்களின் திருத்தவேலைகள் | 2,000 | 00 |
| 10 | வீதி ஒளியூட்டலுக்கு தேவையான அனைத்து உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் | 2,000 | 00 |
| 11 | தும்புத்தடி, விளக்குமாறு, தூரிகை, மொப், பிரம்புக் கூடை, குழாய், குப்பை வண்டி, ஒற்றைச் சக்கர வண்டி, கழிப்பறை தூரிகை, கிருமிநாசினிகள், வாளி போன்ற சுகாதார உபகரணங்கள் | 2,000 | 00 |
| 12 | பீ.வீ.சி குழாய் மற்றும் துணைப்பாகங்கள் | 2,000 | 00 |
| 13 | கல்வனைஸ் குழாய், உதிரிப்பாகங்கள், இரும்பு கல்வனைஸ் தகடு, ஏங்கல் இரும்பு, கம்பி மற்றும் உலோகப் பொருட்கள் ஆணி மற்றும் முறிச்சிகள், மண்வெட்டி, கடப்பாரை, கத்தி மற்றும் தொழிலாளர் பொருட்கள் | 2,000 | 00 |
| 14 | சீருடைக்கு தேவையான துணி வகைகள், பொத்தான், தோள்பட்டை அணிகலன், மழையங்கி, காலணி, கையுறை | 2,000 | 00 |
| 15 | நிறப் பூச்சு வகைகள் மற்றும் அதனைச் சார்ந்த உபகரணங்கள் | 2,000 | 00 |
| 16 | வாகன திருத்தவேலைகள் | 2,000 | 00 |
| 17 | வாகனங்களை சேர்விஸ் செய்தல் | 2,000 | 00 |
| 18 | சகல வாகன உதிரிப்பாகங்களை வழங்குதல் | 2,000 | 00 |
| 19 | டயர், டியூப், பெட்டறி வழங்குதல் | 2,000 | 00 |
| 20 | வீதி செப்பனிடும் ட்ரக்டர் மற்றும் டேலர் பெக்கோ இயந்திரம், வீதிப் பராமரிப்பு இயந்திரங்கள், கலி பவுசர் என்பவற்றை வாடகைக்கமர்த்துதல் | 2,000 | 00 |
| 21 | கருங்கல், ஆற்று மணல், செங்கல், கிரவல், இரும்பு, சுண்ணாம்பு, விறகு, அரிந்த மரப்பலகை, தார், சீமந்து உட்பட அனைத்து வகையான கட்டிடப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் | 2,000 | 00 |
| 22 | ஹியூம் குழாய், கொங்கிறீட் தூண்கள், சீமெந்துக் கல் உட்பட கொங்கிறீட் உற்பத்திகள் | 2,000 | 00 |
| 23 | வெற்றுப் பீப்பாய், பழைய பத்திரிகை, பாவனைக்குதவாத பொருட்களைக் கொள்வனவு செய்தல் | 2,000 | 00 |
| 24 | காணி அளத்தல் சேவைகளை வழங்கல் | 2,000 | 00 |
| 25 | வாடகை அடிப்படையில் வாகனம் வழங்குதல் | 2,000 | 00 |
| 26 | சிற்றுண்டிகள், பான வகைகள், குடிநீர் மற்றும் கேட்டரிங் சேவைகள் | 2,000 | 00 |
| 27 | ஒப்பந்தக்காரர்களைப் பதிவுசெய்தல் | 5,000 | 00 |

**பொது நிபந்தனைகள்**

01. தேவையான சந்தர்ப்பங்களில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் தவிர்த்து வேறு வழங்குநர்களிடமிருந்து வழங்கல் சேவையை பெற்றுக்கொள்வதற்கான அதிகாரத்தை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

02 பதிவுசெய்யப்பட்ட வழங்குநர்கள் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் மற்றும் சரியான நேரத்திற்கு கோரல்களை வழங்குவதற்கு தவறுகின்ற, விலைமனுக்கோரல் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படாத வழங்குநர்கள் வழங்கல் செயற்பாடுகளில் இருந்து நீக்கப்படுவர்.

03. சபைக்கு வழங்கல் மேற்கொள்வதற்கு முற்பணம் கோருகின்ற வழங்குநர்களின் பெயர் பதிவுசெய்யப்பட மாட்டாது.

04. குறைந்தபட்சம் 60 நாட்களுக்கு சபைக்கு கடன் வசதி வழங்குதல் வேண்டும்.

05. வெட் வரி, புரள்வு வரிக்காகப் பதிவுசெய்யப்பட்டிருந்தால் பதிவுச் சான்றிதழின் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.

06 வழங்கல் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது பிரதேச சபை சட்டம், நிதி ஒழுங்குமுறை, நிதி ஒழுங்குவிதிகளுக்கு இயைபாக அரசாங்கத்தினால் அவ்வப்போது விடுக்கப்படுகின்ற சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தலுக்கு அமைய பிரதேச சபை மூலம் விதிக்கப்படுகின்ற நிபந்தனைகளுக்கு இணங்குதல் வேண்டும்.

**சாமிந்த அமதோரு,**
**மெதகும்பர பிரதேச சபை,**
**தெல்தெனிய.**

**2023-09-22.**

Best way
to fulfil
your
Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer




The Housewives' companion
Classifieds on
Daily News

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## சுகாதார அமைச்சு

## மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், கொழும்பு 08

1. பின்வரும் பணிகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கொழும்பு 08 – மருத்துவ ஆராய்ச்சி, பணிப்பாளரின் சார்பில் கொழும்பு 08, மருத்துவ ஆராய்ச்சி நிறுவன, பிராந்திய பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | நிர்மாண வேலை | மதிப்பிடப்படும் செலவு | நிர்மாணக் காலம் | CIDA பதிவு | விலைமனு பிணை |
|---|---|---|---|---|---|
| 1 | உணவு மற்றும் நீர் திணைக்களத்தின் புனரமைப்பு | 2.76 மில்லியன் ரூபா | 14 நாட்கள் | கட்டிடம்/ C9, C8 மற்றும் C7 | 41,500.00 ரூபா |
| 2 | மருந்தியல் திணைக்களத்தில் குளியலறையின் சீரமைப்பு | 2.79 மில்லியன் ரூபா | 35 நாட்கள் | கட்டிடம்/ C9, C8 மற்றும் C7 | 42,000.00 ரூபா |
| 3 | அடுக்குமாடி களஞ்சியங்கள் மற்றும் விலங்குணவு உற்பத்திப் பிரிவில் ஆட்டுக் கொட்டகையில் கூரை, கதவு மற்றும் சன்னல்களின் சீரமைப்பு | 1.22 மில்லியன் ரூபா | 30 நாட்கள் | கட்டிடம்/ C9, மற்றும் C8 | 18,500 ரூபா |

**இந்த இடமானது கொழும்பு 08, மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்.**

2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் மேற்கொள்ளப்படும் பணியின் மதிப்பிடப்பட்ட பெறுமதி 50 மில்லியன் ரூபாவுக்கு கீழ் (வெட் மற்றும் ஏனைய வரிகள் உட்பட) இருக்கும் வரை 04/2016 (iii)/(iv) ஆம் இலக்க பொது நிதி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டவாறு பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை பொருந்தும்.
3. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மருத்துவ ஆராய்ச்சி நிறுவன, பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு மேல் தரப்பட்டுள்ள முகவரியில் 10.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும்.
4. மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபாவை செலுத்தி (ஆவணத்தை வழங்க ஆரம்பிக்கும் திகதி) 2023.09.25 ஆம் திகதி தொடக்கம் 2023.10.16 ஆம் திகதி வரை 10.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை மருத்துவ ஆராய்ச்சி நிறுவன, பணிப்பாளரின் அலுவலகத்தில் இருந்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்கலாம்.
5. இரு பிரதிகளிலாலான விலைமனுக்களை 2023.10.17 ஆம் திகதி 10.00 மணி அல்லது அதற்கு முன்னர் மருத்துவ ஆராய்ச்சி நிறுவன, பணிப்பாளருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்கள் பிரதிநிதிகளின் முன் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவடைந்த பின் அவை உடன் திறக்கப்படும்.
6. விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்களை ஏற்கும் திகதி நிறைவடைந்ததில் இருந்து 119 நாட்கள் வரை விலைமனுப் பிணை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்,**
**மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம்,**
**கொழும்பு 08**
**தொ. – 011 2693532**

# பெறுகை அறிவித்தல்

## கொடக்கவெல பிரதேச சபை - சப்ரகமுவ மாகாணம்

01. கீழ்க்காணும் வேலை விடயங்களுக்காக கொடக்கவெல பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவரால் 2023.10.10 மு.ப 11.00 வரை கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்கப்படும்.

| தொடர் இல | வேலை விடயங்கள் | பொது மதிப்பீட்டு வேலை பெறுமதி (ரூ.மி.) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் ரூ | மீளளிக்கப்படும் கேள்வி பிணை முறி ரூ | ஒப்பந்தப்பதிவு பெறுமதி |
|---|---|---|---|---|---|
| 01 | கொடக்கவெல பிரதேச சபைக்காக தகனசாலை கட்டிடம் மற்றும் தகன கோபுரத்தை நிர்மாணித்தல் - 2ம் கட்டம் (மிகுதி வேலைகள்) | 32.2 | 15,000.00 | 322,000.00 | C5/C6/C7 மற்றும் தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் தகன சாலை நிர்மாணம் பற்றிய பதிவு |

02. இக்கேள்விகோரல் திறந்தபோட்டி பெறுகை செயற்பாட்டின் கீழ் இடம்பெறுவதுடன் இவ்வேலை ரூ. 50 மில்லியனுக்கு குறைவாக இருப்பின் அரச நிதி சுற்றுநிருப (இல. 2016/04II) மற்றும் (2016/04III) இன் பிரகாரம் பிரதேச முன்னுரிமை மற்றும் குறித்த CIDA (தர முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு கட்டிட நிர்மாணத்திற்காக கேள்விதாரரை தேர்ந்தெடுத்தல் நடைபெறும். அச்சுற்றுநிருபத்தின் பிரகாரம் பின்னர் விநியோகிக்கப்படும் அரச நிதி, சுற்றுநிருபம் 2020/03, 2020/03I மற்றும் 04/2016 (IV) என்ற சுற்றுநிருபங்களும் பெறுகைகளுக்கு பொருந்தும்.
03. 2023.09.25 முதல் 2023.10.09 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை மேலே குறிப்பிட்டவாறு கட்டணங்களைச் செலுத்தி கொடக்கவெல பிரதேச அலுவலகத்தில் இருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
04. சகல கேள்விதாரர்களும் இக் கைத்தொழிலிற்காக மேற்படி கேள்விப் பிணைமுறிப் பெறுமதிக்கு குறித்த கேள்விப் பிணை முறியாக அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்வி பிணைமுறியொன்றை 2023.10.10 முதல் 2024.02.13 வரை செல்லுபடியாகுமாறு "செயலாளர், பிரதேச சபை, கொடக்கவெல" பயனாளியாக பெயர் குறிப்பிட்டு பெற்றுக்கொண்ட கேள்விப் பிணைமுறியின் மூலம் அல்லது குறித்த கைத்தொழிலின் பெயரில் கேள்வி பிணைத் தொகையாக பிரதேச சபையின் குறித்த நிதி வைப்பு செய்து பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
05. இக் கைத்தொழில் பற்றிய விபரங்களை கொடக்கவெல பிரதேச சபைக்கு வருகைதந்து அல்லது தொ. பே. இல: 0452240031 இடமிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். தேவைப்படும் ஒருவருக்கு வாரத்தின் வேலைநாட்களில் இலவசமாக கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்தும் பார்க்கலாம்.
06. பொறியிடப்பட்ட கேள்விகள் 2023.10.10, மு.ப 11.00இற்கு அல்லது அதற்கு முன் கொடக்கவெல பிரதேச சபை அலுவலகத்தில் பொறியிடப்பட்ட பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம். தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், விலைமனுக்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயரை குறிப்பிடுதல் வேண்டும். மேலும் கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட நகல் பிரதியை புறம்பானதொரு உறையில் இட்டு உறையின் இடதுப்பக்க மேல் மூலையில் கைத்தொழிலின் பெயர் மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
07. 2023.10.10 மு.ப 11.00இற்கு கொடக்கவெல பிரதேச சபை அலுவலகத்தில் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேலையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
08. கேள்விப் பத்திரங்களை முழுமையாக அல்லது பகுதிகளாக ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை கொடக்கவெல பிரதேச சபை பெறுகைக் குழுவிற்கு உரியது.
09. சகல கேள்விகளும் 2024.01.16 வரை செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு**
**கொடக்கவெல பிரதேச சபை.**
**கொடக்கவெல.**

**2023.09.22ம் திகதி**

The Housewives' companion
Classifieds on
Daily News

## ராஜாங்கனை பிரதேச சபை

# 2023/2026ம் ஆண்டுக்கான கடை அறைகளைக் குத்தகைக்குவிடும் கேள்விகோரல் ராஜாங்கனை சந்தியில் புதிய கிராமிய வர்த்தக கட்டிடத்தொகுதி

01. ராஜாங்கனை பிரதேச சபைக்குச் சொந்தமான ராஜாங்கனை சந்தியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கிராமிய வர்த்தக கட்டிடத்தொகுதியில் 08 கடை அறைகளை, 2023 நவம்பர் 01 முதல் 2026 ஒக்டோபர் 31 வரை 03 வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
02. கேள்வி விண்ணப்பங்களை 2023.09.25 முதல் 2023.10.09 பி.ப 3.00 வரை ராஜாங்கனை பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன் கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2023.10.10 பி.ப 2.00 இற்கு முடிவடையும். கேள்விகள் திறத்தல் அன்றே பி.ப 2.30 இற்கு ராஜாங்கனை பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறும்.
03. கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை கேள்விச் சபைக்கு உரியது. கடை அறைகள் தற்போது காணப்படும் நிலையிலேயே டென்டர் கோரப்படும். குறித்த கேள்வி நிபந்தனை கோவை மற்றும் ஏனைய விபரங்களை அலுவலக நேரங்களில் ராஜாங்கனை பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
04. குறித்த குத்தகைத் தொகைக்கு மேலதிகமாக நீர், மின் சிட்டைகளும், ராஜாங்கனை பிரதேச சபையினால் விதிக்கப்படும் ஏனைய குத்தகைத் தொகையும் குறித்த குத்தகைக் காலத்திற்கு செலுத்த வேண்டியதுடன் அதற்கு அமைவாக உடன்படிக்கையொன்றிற்கு வரல் வேண்டும்.
05. கடை அறை வழங்கப்பட்ட பின்பு பாதுகாப்பு பிணைத் தொகையாக விண்ணப்பிக்கும் கேள்வித் தொகையின் 12 மடங்கு ராஜாங்கனை பிரதேச சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.
06. ராஜாங்கனை பிரதேச சபையின் அதிகாரிகளுக்கும் அவர்களது கணவன்/மனைவி மற்றும் அவர்களில் தங்கியிருப்போருக்கும் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது.
07. கடை அறைகள் ஒன்றிற்கு மேல் விண்ணப்பிப்பதாயின் அதற்காக வேறுவேறாக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடை அறையின் இலக்கத்தை விண்ணப்பப்பத்திரத்தில் தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அத்துடன், அவ்வாறல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
08. மாதாந்த குறைந்தபட்ச கேள்வி ராஜாங்கனை பிரதேச சபையில் தற்காலிக மதிப்பீடு ஆவதுடன் அரச பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் திருத்தத்திற்கு உட்படும்.
09. கேள்விகோரும் மாதிரிப்பத்திரக் கட்டணம் மற்றும் கேள்விக்கான பிணை வைப்புகள் கீழ்க்காணுமாறு அமையும்

**அட்டவணை**

| தொ. இல | கடை அறை இல | கடை அறையின் அளவு | குறைந்தபட்ச கேள்வி ரூ. (மாதாந்தக் கட்டணம்) | மீளளிக்கப்படும் கேள்விப்பிணைத் தொகை ரூ. | படிவக் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | 01 மற்றும் 02 | 10.3mX7.0m (வங்கிக் கிளையொன்றிகாக மட்டும்) | 38,000.00 | 26,600.00 | 5,000.00 |
| 02 | 03 | 10.3m X 3.4m | 15,000.00 | 10,500.00 | 5,000.00 |
| 03 | 04 | (10.3mX3.4m) + (5.6mX2.1m) | 24,000.00 | 16,800.00 | 5,000.00 |
| 04 | 05 | (10.3mX3.4m) + (5.6mX2.1m) | 24,000.00 | 16,800.00 | 5,000.00 |
| 05 | 06 | 10.3m X 3.4m | 15,000.00 | 10,500.00 | 5,000.00 |
| 06 | 07 | 10.3m X 3.4m | 15,000.00 | 10,500.00 | 5,000.00 |
| 07 | 08 | 10.3m X 3.4m | 15,000.00 | 10,500.00 | 5,000.00 |

கேள்விக் கோரல் பற்றிய இறுதித் தீர்மானம் ராஜாங்கனை பிரதேச சபை கேள்விக் குழுவிற்கு உரியது. இதுபற்றி ஏதேனும் தெளிவுப்படுத்தல் தேவையாயின் 025-2276376 என்ற தொ.பே. இலக்கத்தை அழையுங்கள்.

**டபிள்யூ.ஏ. சிசில் விஜேசிங்ஹ,**
**செயலாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை**
**அமுல்படுத்தும் அதிகாரி,**
**ராஜாங்கனை பிரதேச சபை.**

## மத்திய சுற்றாடல் அதிகார சபை

### சுற்றாடல் அமைச்சு

# அறிவித்தல்

**(சகல பிளாஸ்டிக்/ பொலித்தீன் உற்பத்தியாளர்கள் வியாபாரிகள் மற்றும் பாவனையாளர்களுக்கு)**

1988 இல. 56 மற்றும் 2000 இல. 53 எனும் சட்டங்களில் திருத்தப்பட்ட 1980 இல. 47 தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் இல. 2341/30 என்ற 2023 ஜுலை 19ம் திகதி விநியோகிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் வெளியிடப்பட்ட கட்டளைகள் மற்றும் விதிகளின் பிரகாரம், பிளாஸ்டிக் இனால் உருவாக்கப்பட்ட

I. தனிப் பாவனை குளிர்பான குழாய் கரண்டி
II. தனிப் பாவனை பீங்கான், கோப்பை, கரண்டி, முள்ளுக் கரண்டிகள் மற்றும் கெயாரூப், கத்தி மற்றும் பொலிஸ் டயரிங் இனால் தயாரிக்கப்பட்ட உணவுப் பெட்டி (விமானப் பிரயானங்களில் தவிர்த்து)
III. பூமாலை
IV. இடியப்ப தட்டு

பாவித்தல் மற்றும் நாட்டிற்குப் பாபிப்பதற்கான ஏதேனும் செயற்பாடுகள், வியாபாரங்கள் அல்லது கைத்தொழில்களுக்காக மேற்படி உருப்படியை பாவித்தல் 2023 ஒக்டோபர் 01 முதல் செயற்படுமாறு தடைசெய்யப்படுவதுடன், மேற்படி கட்டளை, விதிகளுக்கு அமைவாக செயற்படுவதற்குத் தவறுகின்ற நபருக்கு 1980 இல. 47 தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் தண்டத்திற்கு உற்படுவதற்காக இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**பணிப்பாளர் நாயகம்,**
**மத்திய சுற்றாடல் அதிகார சபை,**
**சுற்றாடல் அமைச்சு**

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

# தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை

## பதவி வெற்றிடங்கள்

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு தகைமை வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 01. பொது முகாமையாளர் - 01 பதவி

1. **சேவை வகுதி** : **சிரேஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (HM 2-1)**
2. **தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம்/ விவசாயம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம் தொடர்பான அடிப்படை (Basic) பட்டத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம் தொடர்பான பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல்/ அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச துறை நிறுவனம், அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் இருபது (20) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் (இதில் 5 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்திலாக இருத்தல் வேண்டும்)

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம்/ விவசாயம்/ வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவம் தொடர்பான அடிப்படை (Basic) பட்டத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம்/ முகாமைத்துவத்திற்கு இயைபாக கலாநிதிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

மற்றும்

கலாநிதிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச துறை நிறுவனம், அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட சிறப்பு சேவை தடப்பதிவைக் கொண்ட அதிகாரியொவரான அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் சிரேஷ்ட முகாமைத்துவ (HM 1-1) சேவை வகுதி பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

அத்துடன்

பல்வேறு வேலைகளில் ஈடுபட்டுள்ள குழுக்களுக்கு தலைமைத்துவம் வழங்குவதோடு மனிதவள மற்றும் ஏனைய வளங்களை வினைத்திறனுடன் முகாமைத்துவம் செய்யும் நிலையான தேர்ச்சியை உறுதி செய்தல்.

3. **சம்பள அளவு** : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 91,645 - 12x2,700 = 124,045.00 (மாதாந்தம்) சம்பள அளவு உரித்தாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
4. **வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)
5. **ஆட்சேர்க்கும் முறை** : கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு**

| | |
|---|---|
| இயைபுடைய மேலதிக அனுபவம் | - 30 புள்ளிகள் |
| இயைபுடைய மேலதிகக் கல்வி / தொழில்சார் தகைமை | - 30 புள்ளிகள் |
| ஏனைய செயற்றிறன் மற்றும் திறமைகள் | - 15 புள்ளிகள் |
| நேர்முகத் தேர்வின்போதான செயற்றிறன் | - 25 புள்ளிகள் |
| **மொத்தப் புள்ளிகள்** | **- 100 புள்ளிகள்** |

நேர்முகத் தேர்வின்போது பெற்றுக்கொள்ளும் வரிசைக்கிரம புள்ளிகளின் அடிப்படையில் தேர்வுகள் இடம்பெறும்.

### 02. பிரதிப் பொது முகாமையாளர் (அபிவிருத்தி) - 01 பதவி

1. **சேவை வகுதி** : **முகாமைத்துவ சேவை வகுதி (HM 1-1)**
2. **தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானம் / விவசாயம் / வியாபார நிர்வாகம் / முகாமைத்துவம் தொடர்பான அடிப்படை (Basic) பட்டத்தைப் பெற்றிருத்தல்

அத்துடன்

பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமான, பட்டப் பின்படிப்பு (Masters) பட்டத்தைப் பெற்றிருத்தல் / அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை. நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் விவசாய அபிவிருத்தி / விவசாய விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு இயைபாக முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

02. பதவிக்கு இயைபான பாடத்துறைக்குப் பொருத்தமாக அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

அரச, அரச கூட்டுத்தாபனம், சபை. நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் விவசாய அபிவிருத்தி / விவசாய விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு இயைபாக முகாமைத்துவ மட்டப் பதவியொன்றில் குறைந்தபட்சம் பதினைந்து (15) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

01. மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்
02. தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் அபிவிருத்தி / விரிவாக்கல் நடவடிக்கைகள் தொடர்பான முகாமைத்துவ MM 1-1 சேவை வகுதியில் 1ஆந் தரப் பதவியொன்றில் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

3. **சம்பள அளவு** : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 80,295 - 15x2,270 = 144,345/- (மாதாந்தம்) சம்பள அளவு உரித்தாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
4. **வயது** : 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது)
5. **ஆட்சேர்க்கும் முறை** : (அ) கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் வெளிவாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படுவர்.
(ஆ) கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் உள்வாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படுவர்.

**கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு**

| | |
|---|---|
| இயைபுடைய மேலதிக அனுபவம் | - 30 புள்ளிகள் |
| இயைபுடைய மேலதிகக் கல்வி/ தொழில்சார் தகைமை | - 30 புள்ளிகள் |
| ஏனைய செயற்றிறன் மற்றும் திறமைகள் | - 15 புள்ளிகள் |
| நேர்முகத் தேர்வின்போதான செயற்றிறன் | - 25 புள்ளிகள் |
| **மொத்தப் புள்ளிகள்** | **- 100 புள்ளிகள்** |

நேர்முகத் தேர்வின்போது பெற்றுக்கொள்ளும் வரிசைக்கிரம புள்ளிகளின் அடிப்படையில் தேர்வுகள் இடம்பெறும்.

### 03. உதவி முகாமையாளர் (மனிதவளம்/ நிர்வாகம்) - 01 பதவி

1. **சேவை வகுதி** : **முகாமைத்துவ சேவை வகுதி (MM 1-1)**
2. **தரம்** : **(MM 1-1-II)**
3. **தகைமைகள்** : வெளிவாரி விண்ணப்பதாரிகள்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / அரச முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் அல்லது முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் நிர்வாகம்/ மனிதவள முகாமைத்துவத் துறையில் ஆகக்குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**தகைமைகள்**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகள்

அல்லது

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் கனிஷ்ட முகாமைத்துவம் JM சேவை வகுதியின் மனிதவளம் மற்றும் நிர்வாகத்திற்கு இயைபான பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்புடைய சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

### 04. உதவி முகாமையாளர் (அபிவிருத்தி) - 01 பதவி

1. **சேவை வகுதி** : **முகாமைத்துவ சேவை வகுதி (MM 1-1)**
2. **தரம்** : **(MM 1-1-II)**
3. **தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயம்/ பெருந்தோட்ட முகாமைத்துவம்/ சமூக விஞ்ஞானம்/ விரிவாக்கல் முகாமைத்துவம்/ பொருளியல் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் பெருந்தோட்டம்/ விவசாயத் துறையில் சமூக/ மனிதவள அபிவிருத்தி தொடர்பாக ஆகக்குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**தகைமைகள்**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகள்

அல்லது

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் கனிஷ்ட முகாமைத்துவம் JM சேவை வகுதி பதவியில் சங்கம் / சமூக அபிவிருத்தி/ வெளிக்கள அபிவிருத்தி/ விரிவாக்கல் நடவடிக்கைகளுக்கு இயைபான பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்புடைய சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

### 05. உதவி பிராந்திய முகாமையாளர் (திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி) - 05 பதவிகள்

1. **சேவை வகுதி** : **முகாமைத்துவ சேவை வகுதி (MM 1-1)**
2. **தரம்** : **(MM 1-1-II)**
3. **தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயம் / உயிரியல் / பெருந்தோட்ட முகாமைத்துவம் / முகாமைத்துவம் / பொருளியல் / புள்ளிவிபரவியல் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் பெருந்தோட்டம் / விவசாயத் துறையில் சமூக / மனிதவள அபிவிருத்தி தொடர்பாக ஆகக்குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**தகைமைகள்**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகள்

அல்லது

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் கனிஷ்ட முகாமைத்துவம் JM சேவை வகுதி பதவியில் அபிவிருத்தி/ விரிவாக்கல்/ திட்டமிடல் நடவடிக்கைகளுக்கு இயைபான பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்புடைய சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

### 06. உதவி பிராந்திய முகாமையாளர் (விரிவாக்கல்) - 02 பதவிகள்

1. **சேவை வகுதி** : **முகாமைத்துவ சேவை வகுதி (MM 1-1)**
2. **தரம்** : **(MM 1-1-II)**
3. **தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாயம் / பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்

மற்றும்

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச, அரச கூட்டுத்தாபனம், நியாயாதிக்கச் சபை நிறுவனமொன்றில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் பெருந்தோட்டம்/ விவசாயத் துறையில் சமூக/ மனிதவள அபிவிருத்தி தொடர்பாக ஆகக்குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**தகைமைகள்**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகள்

அல்லது

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் கனிஷ்ட முகாமைத்துவம் JM சேவை வகுதி பதவியில் அபிவிருத்தி / விரிவாக்கல் துறைக்கு இயைபான பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்புடைய சேவை காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**மேற்கூறப்பட்ட 03ஆம் இலக்கம் முதல் 06ஆம் இலக்கம் வரைக்குமான சம்பள அளவு:**

இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 53,175 – 10x1375 – 15x1910 – 95,575.00 (மாதாந்தம்) சம்பளம் உரித்தாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**மேற்கூறப்பட்ட 03ஆம் இலக்கம் முதல் 06ஆம் இலக்கம் வரைக்குமான ஆட்சேர்க்கும் முறை:**

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் வெளிவாரி விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படுவர் என்பதுடன் புள்ளிகள் வழங்கும் முறை பின்வருமாறாகும்.

| | |
|---|---|
| 01. இயைபுடைய மேலதிக அனுபவம் | - 30 புள்ளிகள் |
| 02. இயைபுடைய மேலதிகக் கல்வித் தகைமை | - 30 புள்ளிகள் |
| 03. ஏனைய செயற்திறன் மற்றும் திறமைகள் | - 15 புள்ளிகள் |
| நேர்முகத் தேர்வின்போதான செயற்றிறன் | - 25 புள்ளிகள் |
| **மொத்தப் புள்ளிகள்** | **- 100 புள்ளிகள்** |

நேர்முகத் தேர்வின்போது பெற்றுக்கொள்ளும் வரிசைக்கிரம புள்ளிகளின் அடிப்படையில் தேர்வுகள் இடம்பெறும்.

### 07. விடயப்பொறுப்பு அதிகாரி / வலய தேயிலை அபிவிருத்தி விரிவாக்கல் அதிகாரி - 12 பதவிகள்

1. **சேவை வகுதி** : **கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதி (JM I-I)**
2. **தரம்** : **(JM 1-1 - II)**
3. **தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விவசாய விஞ்ஞானம் அல்லத பெருந்தோட்ட முகாமைத்துவம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருத்தல்

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகள்

அல்லது

தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையில் முகாமைத்துவ உதவியாளர் வகுதியில்: (தொழில்நுட்பம்) MA 2-3 சேவை வகுதியில் IIஆம் தரப் பதவியொன்றில் ஐந்து (05) வருடங்களுக்குக் குறையாத உயிர்ப்புடைய சேவை காலத்தைப் பூர்த்தி

**மேற்கூறப்பட்ட 07ஆம் இலக்க பதவிக்கான சம்பள அளவு :**

இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 42,600 – 10x755 – 18x1,135 – 70,580.00 (மாதாந்தம்) சம்பளம் உரித்தாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**மேற்கூறப்பட்ட 07ஆம் இலக்க பதவிக்கு ஆட்சேர்க்கும் முறை :**

நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வகையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**எழுத்துமூலப் பரீட்சைக்கான பாடப்பரப்புகள் பின்வருமாறாகும்.**

- மொழித் தேர்ச்சி
- உளச்சார்புப் பரீட்சை
- பதவிக்கு இயைபான வகையில் விடய அறிவு

**மொழித் தேர்ச்சி:**

வெளிப்படுத்தல், புரிந்துகொள்ளல், அரிச்சுவடு ஒழுங்கு, சரள இலக்கணப் பாவனை போன்ற விடயங்கள் தொடர்பில் அபேட்சகரின் அறிவை அளவிடுவதற்கான வினாப் பத்திரம்.

**உளச்சார்பு பரீட்சை:**

தமது உத்தியோகபூர்வ கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதற்கான அபேட்சகரின் உளச்சார்பையும் இயலுமையையும் அளவிடுவதற்கான வினாப் பத்திரம்.

**பதவிக்கு இயைபான வகையிலான விடய அறிவு:**

பதவிக்கு இயைபான வகையில் குறித்த விடயங்கள் தொடர்பில் அபேட்சகரின் அறிவை அளவிடுவதற்கான வினாப் பத்திரம்.

பரீட்சையில் சித்தியடைவதற்கு அபேட்சகர்கள் ஒரு விடயத்தில் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் மொத்தப் புள்ளிகளின் கூட்டுத்தொகையாக ஆகக்குறைந்தது 50% பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படும்

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேரிவில்˙ பின்வரும் வகையில் புள்ளிகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| 1. இயைபுடைய மேலதிக அனுபவம் | - 30 புள்ளிகள் |
| 2. இயைபுடைய மேலதிக தகைமை | - 30 புள்ளிகள் |
| 3. ஏனைய செயற்திறன் மற்றும் திறமைகள் | - 15 புள்ளிகள் |
| 4. நேர்முகத் தேர்வின்போது காட்டும் திறமை | - 25 புள்ளிகள் |
| **மொத்தப் புள்ளிகள்** | **- 100 புள்ளிகள்** |

- எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படும் போது போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட 60% மொத்தப் புள்ளிகள் மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்றுகொண்ட 40% புள்ளிகள் எனும் வகையில் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
- கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வினால் மட்டும் தெரிவு செய்யப்படும் போது வெறுமனே அந்த நேர்முகத் தேர்வில் பெற்றுக்கொள்ளப்படும் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**மேற்கூறப்பட்ட 03ஆம் இலக்கம் முதல் 07ஆம் இலக்கம் வரைக்குமான வயதெல்லை:**

22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல

### 08. தேயிலை பரிசோதகர் விரிவாக்கல் அதிகாரி - 07 பதவிகள்

1. **சேவை வகுதி** : **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) MA 2-3**
2. **தரம்** : (MA 2-3 - III)
3. **தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**தகைமைகள்:**

விவசாயம், பெருந்தோட்ட முகாமைத்துவம் அல்லது பெருந்தோட்ட விரிவாக்கல் முகாமைத்துவம் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில் தகைமை (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**தகைமைகள்:**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகள் ஏற்புடையதாகும்

4. **சம்பள அளவு** : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 31,510 – 445x10 – 660x11 – 730x10 – 750x10 = 58,020.00 ரூபா உரித்தாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

### 09. புத்தகம் பேணுநர் - 01 பதவி

1. **சேவை வகுதி** : **முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) (MA 2-2)**
2. **தரம்** : (MA 2-2 - III)
3. **தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**தகைமைகள்:**

கணக்கியல் அல்லது புத்தகம் பேணுதல் தொடர்பில் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/தொழிற் பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில் தகைமை (NVQ) ஐந்தாம் (05) மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

**தகைமைகள்:**

மேற்படி வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குரித்தான தகைமைகள் ஏற்புடையதாகும்

4. **சம்பள அளவு** : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 30,310 – 10x300 - 7x350 - 4x600 - 20x710 - 52,360.00 ரூபா உரித்தாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**மேற்கூறப்பட்ட 08ஆம் மற்றும் 09ஆம் இலக்க பதவிக்கு ஆட்சேர்க்கும் முறை :**

நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும் வகையில் விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் அந்தந்த பதவிக்கு இயைபான வகையில் எழுத்துமூல போட்டிப் பரீட்சையொன்றின் மூலம் மற்றும் நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**எழுத்துமூலப போட்டிப் பரீட்சை - தேயிலை பரிசோதகர் விரிவாக்கல் அதிகாரி**

| | |
|---|---|
| **வினாத்தாள் I** | : 01 மணித்தியாலம் |
| **பாடப்பரப்பு** | : பொது அறிவு, அறிவுப் பரிசோதனை, விவசாய சித்தாந்தம், தேயிலை தொழில்நுட்பம், தேயிலைக் கைத்தொழிலுக்கு இயைபான விடயங்கள் |
| **புள்ளிகள்** | : 50 வினாக்கள் x 2 புள்ளிகள் வீதம் 100 |
| **வினாத்தாள் II** | : 1 ½ மணித்தியாலம் |
| **பாடப்பரப்பு** | : தேயிலைக் கைத்தொழில் கோட்பாடு, தேயிலைத் துறைக்கு இயைபான விடயங்கள், தேயிலைக் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்பம், விவசாய விரிவாக்கல் மற்றும் தொலைத்தொடர்பாடல் |

**வினாக்கள் மற்றும் புள்ளிகள் :**

(I) பகுதி

சுருக்கமான விடைகளை எதிர்பார்க்கும் வினாக்கள்

இதில் 6 வினாக்களுக்கு விடைகள் எதிர்பார்க்கப்படும்.

வினாக்கள் 6 x 05 புள்ளிகள் = 30 புள்ளிகள்

(II) பகுதி

கட்டுரை ரீதியான 7 வினாக்கள் இதில் 5 வினாக்களுக்கு விடைகள் எதிர்பார்க்கப்படும்.

வினாக்கள் 5 x 14 புள்ளிகள் = 70 புள்ளிகள்

மொத்தம் = 100 புள்ளிகள்

சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளையும் 2ஆம் வினாப் பத்திரத்திற்கான மொத்தமாக குறைந்தபட்சம் 50% பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை - புத்தகம் பேணுநர்**

**எழுத்துமூலப் பரீட்சைக்கான விதிமுறைகள்**

**இரண்டு வினாப்பத்திரங்கள்**

**வினாத்தாள் I** : 1 ½ மணித்தியாலம் (100 புள்ளிகள்)

**பாடப்பரப்பு** : பொது அறிவு, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அடிப்படை விடயம், பொதுவான கணித சிக்கல்கள்

**வினாத்தாள் II** : 1 ½ மணித்தியாலம் (100 புள்ளிகள்)

**பாடப்பரப்பு** : நிதி ஒழுங்குவிதிகள், கணக்கு பேணுதல், அலுவலக முகாமைத்துவம் (அடிப்படை)

சித்தியடைவதற்காக ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளையும் 2ஆம் வினாப் பத்திரத்திற்கான மொத்தமாக குறைந்தபட்சம் 50% பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**மேற்கூறப்பட்ட 08ஆம் மற்றும் 09ஆம் இலக்கத்திற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு**

1. இயைபுடைய மேலதிக அனுபவம் - 30 புள்ளிகள்
2. இயைபுடைய மேலதிக தகைமை - 30 புள்ளிகள்
3. ஏனைய செயற்திறன் மற்றும் திறமைகள் - 15 புள்ளிகள்
4. நேர்முகத் தேர்வின்போது காட்டும் திறமை - 25 புள்ளிகள்

**மொத்தப் புள்ளிகள் - 100 புள்ளிகள்**

எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படும் போது போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட 60% மொத்தப் புள்ளிகள் மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்றுகொண்ட 40% புள்ளிகள் எனும் வகையில் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

## 10. முகாமைத்துவ உதவியாளர் - 15 பதவிகள்

1. **சேவை வகுதி** : **முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் அல்லாதது (MA 1-2)**
2. **தரம்** : **(MA 1-2 - III)**
3. **தகைமைகள்** : **வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

**கல்வி**

(அ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். ஆங்கில பாடத்திற்கு சாதாரண சித்தி இருத்தல் வேண்டும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தரப்) பரீட்சையில் குறைந்தபட்சம் 03 பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

(அ) ஆரம்ப தரம் - தேர்ச்சி அற்ற, அரைத்தேர்ச்சி மற்றும் தேர்ச்சிபெற்ற சேவை வகுதிகளில் பின்வரும் (ஆ), (இ) மற்றும் (ஈ) என்பவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள பணியாளர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

(ஆ) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ் மற்றும் கணிதம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகள் சகிதம் ஒரே அமர்வில் 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல். ஆங்கில பாடத்திற்கு சாதாரண சித்தி இருத்தல் வேண்டும்.

(இ) சேவையில் நிரந்தர நியமனம் வகித்தல் வேண்டும் என்பதுடன் நியமனத்தில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஈ) நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன் நிரந்தர நியமனத்தில் குறைந்தபட்சம் 05 வருடங்கள் தொடர்ச்சியான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. **சம்பள அளவு** : இப்பதவிக்கு முகாமைத்துவச் சேவை 02/2016ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் பிரகாரம் ரூபா 27,910 - 10x300 - 7x350 - 12x600 - 12x710 - 49,080.00 ரூபா உரித்தாகும். இதற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்க்கும் முறை:**

விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

**எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை**

**திறந்த போட்டிப் பரீட்சை (IIIஆம் தரத்திற்கு ஆட்சேர்த்தல் - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு)**

**1வது வினாத்தாள்** : 01 மணித்தியாலம்

**பாடப்பரப்பு** : பொது அறிவு, அறிவுப் பரிசோதனை, காலம், விவசாயம், சமூக மற்றும் பொருளாதார தகவல்கள் தொடர்பான அறிவு சம்பவ ஆய்வுகள், அடிப்படை முகாமைத்துவ தகவல்கள்

சுருக்கமான விடைகளை எதிர்பார்க்கும் 08 வினாக்கள் சகலவற்றிற்கும் விடைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

8 x 5 புள்ளிகள் = 40 புள்ளிகள்

கட்டுரை ரீதியான 7 வினாக்கள் இதில் 5 வினாக்களுக்கு விடைகள் எதிர்பார்க்கப்படும்.

வினாக்கள் 5 x 12 புள்ளிகள் = 60 புள்ளிகள்

மொத்தம் = 100 புள்ளிகள

**2வது வினாத்தாள்** : 1 ½ மணித்தியாலம்

**பாடப்பரப்பு** : சிங்கள மொழி / தமிழ் மொழி, மொழி அறிவு, கையெழுத்து, கருத்துக்களை வெளிப்படுத்தும் எளிய நடை இலக்கண அறிவு, கணித சிக்கல்கள், கணனி அறிவு

6 வினாக்களில் 5 வினாக்களுக்கு விடை எதிர்பார்க்கப்படுகின்றது.

20 x 5 புள்ளிகள் = 100 புள்ளிகள்

இந்தப் பரீட்சையில் சித்தியடைவதற்காக அபேட்சகர்கள் ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் குறைந்தபட்சம் 40% புள்ளிகளையும் 2ஆம் வினாப் பத்திரத்திற்கான மொத்தமாக குறைந்தபட்சம் 50% பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை (IIIஆம் தரத்திற்கு ஆட்சேர்த்தல் - முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாதது உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு)**

இரண்டு வினாப் பத்திரங்களைக் கொண்டது.

| விடயம் | காலம் | புள்ளி |
|---|---|---|
| **I வினாப்பத்திரம்** | 03 மணித்தியாலம் | |
| அதிகார சபையின் வேலைகளில் சிறு தேயிலைப் பற்றுநில் பிரிவிற்குரித்தான அடிப்படைத் தகவல்கள், பொது அறிவு, சுருக்கமான பதில்களுக்கான 8 வினாக்கள். அதில் 05 வினாக்களுக்கு விடை எதிர்பார்க்கப்படுகின்றது. | | |
| 8 x 5 புள்ளிகள் | | 40 புள்ளிகள் |
| **II வினாப்பத்திரம்** | | |
| சாதாரண கணித சிக்கல்கள், சிங்கள மொழி/ தமிழ் மொழி, எளிய இலக்கணம் மற்றும் கருத்துக்களை வெளிப்படுத்தும் பாணியில் 05 வினாக்கள் இதில் 4 வினாக்களுக்கு விடை எதிர்பார்க்கப்படுகின்றது. | | |
| 15 x 4 புள்ளிகள் | | 60 புள்ளிகள் |
| மொத்தம் | | 100 புள்ளிகள் |

இந்தப் பரீட்சையில் சித்தியடைவதற்காக அபேட்சகர்களால் குறைந்தபட்சம் 50% பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**நேர்முகத் தேர்வு**

1. இயைபுடைய மேலதிக அனுபவம் - 30 புள்ளிகள்
2. இயைபுடைய மேலதிக தகைமை - 30 புள்ளிகள்
3. ஏனைய செயற்திறன் மற்றும் திறமைகள் - 15 புள்ளிகள்
4. நேர்முகத் தேர்வின்போது காட்டும் திறமை - 25 புள்ளிகள்

மொத்தப் புள்ளிகள் - 100 புள்ளிகள்

எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் மூலம் ஆட்சேர்க்கப்படும் போது போட்டிப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட 60% மொத்தப் புள்ளிகள் மற்றும் நேர்முகத் தேர்வில் பெற்றுகொண்ட 40% புள்ளிகள் எனும் வகையில் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வினால் மட்டும் தெரிவு செய்யப்படும் போது வெறுமனே அந்த நேர்முகத் தேர்வில் பெற்றுக்கொள்ளப்படும் திறமை வரிசைக்கிரமத்தின் அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.

**மேற்கூறப்பட்ட 08ஆம் இலக்கம் முதல் 10ஆம் இலக்கம் வரைக்கான வயதெல்லை:**

18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல)

**ஏனையவை** : அனைத்து ஆட்சேர்ப்பு தொடர்பிலும் நிறுவன கடமைசார் ஒழுங்குவிதி கோவையின் விதிமுறைகள் உரித்தாகும்.

**மேலதிக அனுகூலம்** : தங்கியிருந்து மற்றும் வெளிவாரியாக சிகிச்சை பெறும் மருத்துவத் திட்டத்தின் கீழான வசதிகள்

1958இன் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிச் சட்டம் மற்றும் அல்லது அச்சட்டத்தின் கீழ் உள்ள ஊழியர்களின் வேறு சேமலாப நிதிக்கு தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரரினால் சிறு பற்றுநிலங்கள் அதிகார சபையில் சேவையாற்றும் முழுமையான காலத்திற்கு அவரின் முழுமையான சம்பளத்தின் 10%த்திற்குக் குறையாத தொகை செலுத்தப்படும் என்பதுடன் அதிகார சபையினால் 15% த்திற்குக் குறையாத தொகை அங்கத்துவத் தொகையாகச் செலுத்தப்படும்.

இதற்கு மேலதிகமாக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 3% அதிகார சபையினால் செலுத்தப்படும்.

**விண்ணப்பப்படிவம்** : விண்ணப்பதாரர்கள் தமது அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய விண்ணப்பங்களை பிறப்புச் சான்றிதழ், கல்விச் சான்றிதழ் மற்றும் அனுபவத்தைக் காட்டும் சான்றிதழ் மற்றும் வினைத் திறன் மற்றும் திறமைகளுக்கு இயைபான சான்றிதழ்களின் பிரதிகளுடன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். அரச / அரச கூட்டுத்தாபனம் / நியாயாதிக்கச் சபைகளில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது நிறுவனத் தலைமையின் ஊடாக அவர்களின் சிபாரிசு சகிதம் விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள்**

2023 ஒக்டோபர் மாதம் 08ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழக் குறிப்பிடப்பட்டுள்ளவருக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**தேயிலை சிறு பற்றுநிலங்கள் அபிவிருத்தி அதிகார சபை,**
**இல. 70, பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**

The Housewives' companion
Classifieds on
Daily News

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

1. பின்வரும் சேவைகளை வழங்குதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகிறார்.

**அட்டவணை - 01**

| | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | விலைக் கோரல் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைக் கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதிகளுக்கான House Keeping சேவையை வழங்குதல் - 2023/2024<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/HK/2023/2024** | 2024.01.16 | ரூபா 8,000.00 | ரூபா 313,000.00 | 2024.02.15 |
| 02 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதிகளுக்கான சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல் - 2023/2024<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/CL/SH/2023/2024** | 2024.01.16 | ரூபா 11,000.00 | ரூபா 446,400.00 | 2024.02.15 |
| 03 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் A வலயத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவை மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றும் சேவையை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/CL/ZA/2023/2024** | 2024.01.16 | ரூபா 13,500.00 | ரூபா 547,800.00 | 2024.02.15 |
| 04 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் B வலயத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/CL/ZB/2023/2024** | 2024.01.02 | ரூபா 6,000.00 | ரூபா 226,700.00 | 2024.01.30 |
| 05 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் இரத்மலானை மற்றும் ராவத்தாவத்தை வளவில் அமைந்துள்ள பொறியியல் பீடத்திற்கு சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல் (தோட்டப் பிரதேசம் உட்பட) மற்றும் கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்தும் சேவையை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/CL/FOE/2024** | 2024.01.02 | ரூபா 4,000.00 | ரூபா 113,800.00 | 2024.01.30 |
| 06 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் A வலயத்திற்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/SEC/ZA/ 2023/2024** | 2024.01.02 | ரூபா 5,000.00 | ரூபா 162,100.00 | 2024.01.30 |
| 07 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் B வலயத்திற்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/SEC/ZB/ 2023/2024** | 2024.01.02 | ரூபா 5,500.00 | ரூபா 204,800.00 | 2024.01.30 |
| 08 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் C வலயத்திற்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/SEC/ZC/ 2023/2024** | 2024.01.16 | ரூபா 8,500.00 | ரூபா 347,900.00 | 2024.02.15 |

2. உத்தேச சேவைக் காலம் 365 நாட்களாகும்.
3. இந்தக் விலைக்கோரல் செயற்பாடுகள் தேசிய போட்டி விலைக்கோரல் ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும்.
4. பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு 1998ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனத்தை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு தகுதியைப் பெறுவர். (ஒப்பந்த இலக்கம் **USJP/EIS/SEC/ZA 2023/2024, USJP/EIS/SEC/ZB 2023/2024** மற்றும் **USJP/EIS/SEC/ZC 2023/2024)**
5. இது தொடர்பில் ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் / நிறுவனம் (தகவல் மற்றும் சேவைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 011-2802856) மற்றும் பின்வரும் முகவரியில் 2023-09-25ஆம் திகதி முதல் 2023-10-16ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வாரத்தின் எந்தவொரு வேலை நாளிலும் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023-09-25ஆம் திகதி முதல் 2023-10-16ஆம் திகதி வரையான காலத்தில் கடமை நேரங்களினல் மேற்கூறிய 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தையும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றையும் செய்வதன் பேரில் முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். இக்கொடுப்பனவுகளை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் பல்கலைக்கழகத்தின் சிறாப்பர் கருமபீடத்திற்கு ரொக்கப் பணமாக மட்டும் செலுத்தப்படல் வேண்டும்.
7. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்திலுள்ள பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்ட வகையில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.

**அட்டவணை இல. 02**

| | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | விலைக் கோரல் முன்னோடிக் கூட்ட நேரம் | விலை மனுக்கள் திறக்கப்படும் நேரம் |
|---|---|---|---|
| 01 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதிகளுக்கான House Keeping சேவையை வழங்குதல் - 2023/2024<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/HK/2023/2024** | 2023.10.05 மு.ப. 10.30 மணிக்கு | 2023.10.17 பி.ப. 2.30 மணிக்கு |
| 02 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மாணவர் விடுதிகளுக்கான சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல் - 2023/2024<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/CL/SH/2023/2024** | 2023.10.05 மு.ப. 11.00 மணிக்கு | 2023.10.17 பி.ப. 2.30 மணிக்கு |
| 03 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் A வலயத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவை மற்றும் கழிவுப் பொருட்களை அகற்றும் சேவையை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/CL/ZA/2023/2024** | 2023.10.05 மு.ப. 11.00 மணிக்கு | 2023.10.17 பி.ப. 2.30 மணிக்கு |
| 04 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் B வலயத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/CL/ZB/2023/2024** | 2023.10.05 மு.ப. 11.00 மணிக்கு | 2023.10.17 பி.ப. 2.30 மணிக்கு |
| 05 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் இரத்மலானை மற்றும் ராவத்தாவத்தை வளவில் அமைந்துள்ள பொறியியல் பீடத்திற்கு சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல் (தோட்டப் பிரதேசம் உட்பட) மற்றும் கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்தும் சேவையை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/CL/FOE/2024** | 2023.10.05 மு.ப. 11.00 மணிக்கு | 2023.10.17 பி.ப. 2.30 மணிக்கு |
| 06 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் A வலயத்திற்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/SEC/ZA/ 2023/2024** | 2023.10.05 பி.ப. 2.30 மணிக்கு | 2023.10.17 மு.ப. 10.30 மணிக்கு |
| 07 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் B வலயத்திற்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/SEC/ZB/ 2023/2024** | 2023.10.05 பி.ப. 2.30 மணிக்கு | 2023.10.17 மு.ப. 10.30 மணிக்கு |
| 08 | ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் C வலயத்திற்கான பாதுகாப்புச் சேவைகளை வழங்குதல்<br>ஒப்பந்த இல. - **USJP/EIS/SEC/ZC/ 2023/2024** | 2023.10.05 பி.ப. 2.30 மணிக்கு | 2023.10.17 மு.ப. 10.30 மணிக்கு |

8. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்திலுள்ள பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபத்தில் 02ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் விலைமனுப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவுறுத்தப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் (ஒரு விலைமனுதாரருக்கு ஒரு பிரதிநிதி வீதம்) விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
9. விலைமனுப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம், விலைக்கோரலின் விபரம் மற்றும் திறக்கப்படும் திகதி என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 02ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நேரம் அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கங்கொடவில, நுகேகொடயில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் / நிறுவனம் (தகவல் மற்றும் சேவைகள்) அவர்களுக்கு பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கலாம் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலே விலைமனுதாரருக்கு திருப்பியனுப்பப்படும். தாமதம் தொடர்பில் தபாலில் அனுப்பப்பட்டதை உறுதி செய்யும் சாட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
10. இது தொடர்பில் திணைக்கப் பெறுகைக் குழுவினரே இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வர்.
11. ஒவ்வொரு ஒப்பந்தத்திற்குமான விலைக்கோரல் செல்லுபடிக் காலம் 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
12. விலைமனுக்களுடன் விலைமனுத் தரவுகளில் வழங்கப்பட்டுள்ள பெறுமதிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரின் பெயருக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி மற்றும் செல்லுபடிக் காலம் என்பன 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
12. தெரிவுசெய்யப்பட்ட சேவை வழங்குநர் நாட்டில் நிலவும் தொழிலாளர் சட்டத்திற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு இயைபான முகவரியானது பின்வருமாறாகும்.

கேள்விப் படிவங்களைப் பரீட்சித்தல், கேள்விப் படிவங்களைச் சமர்ப்பித்தல், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ஒப்படைத்தல்

**உதவிப் பதிவாளர்,**
**நிறுவனப் (தகவல் மற்றும் சேவைகள்) பிரிவு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**கங்கொடவில, நுகேகொடை.**

**விலைமனுக்கள் திறக்கப்படும் முகவரி:**
**நிர்வாகக் கட்டிடத்தின் பணியாட்தொகுதியினர் கூட்ட அறை,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில,**
**நுகேகொடை.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.**
**2023-09-21.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மேல் மாகாணம்)

**மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில், மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – (மேல் மாகாணம்)**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கட்டிட நிர்மாண வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சார்பில் பெறுகைக் குழுவின் தலைவர் இத்தால் கோருகிறார்.
2. ஒப்பந்தத்தை பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு சித்திகரமான ஒப்பந்தக்காரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்வாங்காதவர்களாகவும் மற்றும் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் எதிரில் தரப்பட்டுள்ள CIDA (ICTAD) பதிவுடன் மேல் மாகாண நிர்வாக எல்லைக்குள் கம்பனி பதிவாளரிடம் பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
3. **5.0 மில்லியன் ரூபாவை** விஞ்சும் ஒவ்வொரு ஒப்பந்தத்தையும் பெற்றுக்கொள்வதற்கான தகைமை பெறுவதற்கு 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8ம் பந்தியின் கீழ் **கம்பனிப் பதிவாளரினால்** வழங்கப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு-12, இல. 59, செபஸ்தியன் மேடு, 2ஆம் மாடி, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), பெறுகை அதிகாரியிடமிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் **(தொ.பே. 011-4849835)** என்பதுடன், மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் 2023 செப்டெம்பர் 25 ஆம் திகதி முதல் வேலை நாட்களின் அலுவலக நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் PE/2023/AG/24,GA/25,GA/26/GA/27 **என்பதற்காக 2023 செப்டெம்பர் 25 ஆம் திகதி முதல் 2023 ஒக்டோபர் 09 ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையிலும்** PE/2023/HO/28 **என்பதற்காக 2023 செப்டெம்பர் 25 ஆம் திகதியிலிருந்து 2023 ஒக்டோபர் 16 ஆம் திகதி வரையும்** வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணத்தையும் மற்றும் எழுத்துமூல விண்ணப்பமொன்றையும் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), பெறுகை அலுவலகரின் அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
6. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு வெவ்வேறு உறைகளில் இட்டு, கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''திட்டப் பெயரை''க் குறிப்பிட்டு தலைவர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12 என முகவரியிட்டு கொழும்பு-12, இல. 59, புனித செபஸ்தியன் மேடு, வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா) பெறுகை அலுவலருக்கு PE/2023/AG/24,GA/25,GA/26/GA/27 **என்பதற்காக 2023 ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கும்** PE/2023/HO/28 **என்பதற்காக 2023 ஒக்டோபர் 17 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும்.** தாமதமான விலைமனுக்கள் மற்றும் இலத்திரனியல் மூலமாக அனுப்பப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
7. நேரடியாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் மற்றும்/அல்லது தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க முடிவுறுத்தப்பட்டுள்ள நேரத்திற்கு பின் உடனடியாகத் திறக்கப்படும்.
8. அனைத்து விலைமனுக்களுடனும் PE/2023/AG/24,GA/25,GA/26/GA/27 **என்பதற்காக 2024 பெப்ரவரி 05 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையிலும்** PE/2023/HO/28 **என்பதற்காக 2024 பெப்ரவரி 12 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும்** தன்மையிலுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். பிணை முறியானது விலைமனு ஆவணத்தின் நிலையான படிவத்தில் உள்ளவாறு வங்கி உத்தரவாதம்/ காப்புறுதி பிணை முறியாகவிருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்களைத் தயாரித்தல் மற்றும் ஒப்படைத்தல் தொடர்பில் விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் எவ்விதமான செலவுகளுக்கும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்புக்கூற மாட்டாது.
10. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது பெற்றுக் கொண்ட எந்தவொரு விலைமனுவையும் நிராகரிப்பதற்காக அல்லது எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் செயற்பாட்டை இல்லாதொழிப்பதற்கும் ஒப்பந்தக்காரர்களின் பட்டியலே பொருத்தமானதென கருதப்படுமளவிற்கு கட்டுப்படுத்துவதற்குமான உரிமையைக் கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மேல் மாகாணம்),**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு-12.**

**விலைமனு அட்டவணை – 2023**

| தொ. இல. | நிதிகளின் வளம் | நி.பொ. இன் பிரிவு மற்றும் பி.செ. இன் பிரிவு | கேள்வி இல. | செயற்றிட்ட பெயர் | செயற்றிட்ட விபரங்கள் | பெசேவ நீங்கலாக கேள்வியிடக்கூடிய தொகை (மில்லியனில்) | ஆகக்குறைந்த ICTAD தரம் | செயற்றிட்ட காலம் (மாதங் களில்) | 15% பெசேவ அத்துடன் SSCL 2.5% உடனான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூபாவில்) | விலைமனு உத்தரவாதப் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | ரொக்கப் பணத்தில் | வங்கி உத்தரவாதம் அல்லது காப்புறுதி பிணையம் |
| 1. | PDG - Common | அகலவத்த (மத்துகம) | PE/2023/ AG//24 | கல்மத்த பல்லேகொட ரிட்டிகெட்டிய வீதி | 1/3 மதகை அகலமாக்கல் மற்றும் தடுப்புச் சுவரின் நிர்மாணம் | 18.44 | சி-05, சி-06 அல்லது சி-07 (நெடுஞ்சாலை மற்றும் பாலங்கள்) | 3 | 5,304.38 | ----- | 276,700.00 |
| 2 | PDG - Health | கம்பஹா (கம்பஹா) | PE/2023/ GA/25 | கம்பஹா தள வைத்தியசாலையின் புதுப்பித்தல் - வெநோபி (உள்ளகம்) | கதவுகள்/ யன்னல்கள் மற்றும் அலுமினிய வேலைகள் | 5.36 | எஸ்பி-04 இற்கு மேற்பட்டது (அலுமினியம் மற்றும் மெருகூட்டல்) | 1 1/2 | 3,536.25 | 40,250.00 | 80,500.00 |
| 3 | PDG - Health | கம்பஹா (கம்பஹா) | PE/2023/ GA/26 | கம்பஹா தள வைத்தியசாலையின் புதுப்பித்தல் - வெநோபி (உள்ளகம்) | Double side Non-Asbestas Fiber Cement Dry Wall partition | 9.68 | எஸ்பி-04 இற்கு மேற்பட்டது (அலுமினியம் மற்றும் மெருகூட்டல்) | 1 1/2 | 3,536.25 | 72,600.00 | 145,200.00 |
| 4 | OG-Health | கம்பஹா (கம்பஹா) | PE/2023/ GA/27 | கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையின் ஏழாவது மாடி கட்டிடத்தின் 3 ஆம் மாடியின் புனர்நிர்மாணம் மற்றும் மேம்படுத்தல் | Supply & Installation of managing space restroom partition system | 3.14 | எஸ்பி-04 இற்கு மேற்பட்டது (அலுமினியம் மற்றும் மெருகூட்டல்) | 1 1/2 | 2,357.50 | 23,550.00 | 47,100.00 |
| 5 | PDG-Common | ஹொரண (புளத்சிங்கள) | PE/2023/ HO/28 | ஹோரட்டிய முக்கலான வீதி | பாலத்தின் நிர்மாணம் | 28.04 | சி-04, சி-05 அல்லது சி-06 (நெடுஞ்சாலை மற்றும் பாலங்கள்) | 6 | 8,840.63 | -- | 420,600.00 |

The Housewives' companion
Classifieds on
Daily News

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## பொது வைத்தியசாலை அம்பாறை

அம்பாறை பொது வைத்தியசாலையில் கீழ்க்காணும் கட்டிட பழுதுபார்த்தலுக்காக 2023.10.13 மு.ப. 10.30 வரை பொறியிடப்பட்ட பெறுகைகள் ஏற்கப்படும்.

மீளளிக்கப்படும் வைப்பை செலுத்திய பின்பு 2023.09.26 முதல் 2023.10.12 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் அம்பாறை பொது வைத்தியசாலையின் கணக்காளர் பிரிவில் காசு வைப்புச் செய்வதன் பேரில் வைத்தியசாலையின் பணிப்பாளர் பணிமனையில் விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடிவதுடன், அந்த மாதிரிப் பத்திரங்களில் மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

அதனடிப்படையில் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியொன வேறுவேறு கடித உறையில் இட்டு பொறியிட்டு ஒட்டி ஒரு கடித உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும் அத்துடன் கடித உறையின் இடது மூலையில் ''அம்பாறை பொது வைத்தியசாலையின் தாதியர் கல்லூரியின் பழுதுபார்த்தல்'' என்று குறிப்பிடுதல் கட்டாயமாகும்.

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நேரம் 2023.10.13 மு.ப. 10.30 ஆவதுடன் அன்றே மு.ப. 11.00 இற்கு அம்பாறை பொது வைத்தியாசலையின் கணக்காளர் பணிமனையில் பெறுகைச் சபையின் முன்னிலையில் விண்ணப்பங்கள் திறக்கப்படும். விண்ணப்பங்கள் திறக்கப்படும் வேளையில் பெறுகைதாரருக்கு அல்லது அவரது பிரதிநிதகளுக்கு சமுகமளிக்கலாம்

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் (இக்டாட்) மூலம் அபிவிருத்தி ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல் மற்றும் கீழ்க்காணும் தரப்படுத்தல் தேசிய திட்டத்தின் கீழ் குறித்த தரத்திற்கு மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட தரங்களுக்கு கட்டிட நிர்மாண ஒப்பந்தக்காரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படும்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:
தலைவர்,
பிரதேச பெறுகைக் குழு
பொது வைத்தியசாலை, அம்பாறை

பொறியிடப்பட்ட விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதி இறுதி நேரத்திற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து கணக்காளர் அறையில் உள்ள பெறுகைப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது.

விண்ணப்பங்கள் பற்றிய இறுதித் தீர்மானம் எடுத்தல் பெறுகைக் குழுவிற்கு உரியது விசாரணைகள்: 063-2223317

| வேலை விடயம் | இக்டாட் தரம் | மீளளிக்கப்படும் வைப்பு | மீளளிக்கப் படாத வைப்பு |
|---|---|---|---|
| அம்பாறை பொது வைத்தியசாலையின் தாதியர் கல்லூரியின் பழுதுபார்த்தல் | C8 தரம் | 40,000.00 | 2500.00 |

**வைத்தியர் பீ. கார்த்திகேயன்**
**பணிப்பாளர்**
**2023.09.22**

# கேள்விகளுக்கான அழைப்பு

## விவசாயத் திணைக்களம்

## பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம், நுவரெலியா

விவசாயத் திணைக்களத்தின் நுவரெலியா பிரதி விவசாய பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் பின்வரும் வேலைகளுக்காக உள்நாட்டு விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | |
|---|---|---|---|---|---|
| தொ. இல. | வேலை விபரங்கள் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்ய வேண்டிய கேள்விப் பிணை மற்றும் கேள்வி செல்லுபடியாக வேண்டிய காலம் | | |
| | | | ரொக்கப் பணமாக | வங்கிப் பிணை முறியாக | பிணை செல்லுபடியாக வேண்டிய காலம் |
| 01 | சீத்தாஎலிய விதை உருளைக்கிழங்கு களஞ்சிய சாலைக்கு (600x400x320) mm பிளாஸ்டிக் தொட்டிகளைக் கொள்வனவு செய்தல் | நுஎ /பிவிப/கே / தே.போ/ 2023/13 | 40,000.00 | 80,000.00 | 2024-01-15 |

இதில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் மேற்படி விடயத்தின் பொருட்டும் பெற்றுக்கொண்ட கேள்விப் படிவங்களைப் பயன்படுத்தி விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் நுவரெலியா பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகத்தின் பிரதான முகாமைத்துவ சேவை அதிகாரிக்கு மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கட்டணத்தை செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து 2023-09-25ஆம் திகதி முதல் 2023-10-13ஆம் திகதி வரையான வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி அறிவுறுத்தல்களுக்கு அமைவாக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை ''தலைவர், பிரதேச பெறுகைக் குழு, பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம், சந்ததென்ன வீதி, நுவரெலியா'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

சகல வழங்குநர்களும் மேற்படி அட்டவணையின் D நிரலின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் பிணைப் பணத்தை வைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன் வங்கிப் பிணை முறியின் ஊடாக பிணையை வைப்புச் செய்வதானால் அது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் 2023-10-16ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நிறைவுறும் என்பதுடன் உடன் திறக்கப்படும். இந்நிகழ்வில் கேள்விதாரர்கள் அல்லது அவரது எழுத்து மூல அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) அலுவலகம்,**
**சந்ததென்ன வீதி,**
**நுவரெலியா.**
**052-2222611**

Daily News Classifieds, the Housewives' companion

Marriage Proposals
Decades of Trusted Service
Sunday Observer For 15 Words - Rs. 1,500/- For each additional word Rs. 25/-
For 15 Words - Rs. 1,200/- For each additional word Rs. 25/-
வாரமஞ்சரி For 15 Words - Rs. 600/- For each additional word Rs. 25/-

COLOMBO DISTRICT

AVISSAWELLA 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

ANGODA 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

ATHURUGIRIYA 011 2760479, 011 4876968
267, Godagama Road,

BATHTHARAMULLA 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

BORALESGAMUWA 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

HANWELLA 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

HOKANDARA 071 8685437
No. 501, North Hokandara,

HOMAGAMA 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

KADUWELA 011 2579609
Nayana Bake House

KADUWELA 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

KALUBOWILA 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

KESBEWA 011 2703415
Seedevi Newspaper Office, 19, Horana Rd,

KIRULAPONE 071 5439396, 011 2514166
Ramani Book Shop, 27-A High Level Rd,

KOTTAWA 011 2842569, 071 2510950
Srisara Groceries, No. 101/2,

MAHARAGAMA 077 7686683, 011 2896373
Supermarket Complex, 88, High Level Rd,

MALABE 011 2791782
Kumudu Stores,

MEEGODA 011 2858290, 011 2831120
Nandana Stores, No. 635/3, Padukka Rd.,

MORATUWA 011 2647410, 077 5486719
Wijesekara Stores,

MORATUWA 0112 657326, 0114 212989
S.J.M. Fareed, 222, Egoda Uyana, Modera

MT. LAVINIA 011 2724820
Dayal Stores, Galle Rd,

NUGEGODA 077 3458785, 011 2811833
Ekwaththa Rd, Mirihana,

NUGEGODA 011 2846100, 077 1652800
No. 4, High Level Plaza, Delkanda,

PADUKKA 011 2859186, 011 5638677
No. 03, Hanwella Road,

PILIYANDALA 011 2619967, 072 8069487
No. 05, Seeko Gardens, Gedabuwana,

PITAKOTTE 011 2823960, 077 0858585
No. 435, Pothgula,

RAJAGIRIYA 011 2861338
No. 51/2A, Rajahewavitharana Road,

RATHMALANA 011 2626106, 011 2632006
Thusitha Newspaper Agency, Galle Rd,

RAWATHAWATTE 011 2655153, 071 4274689
No. 3, Soysa Road, Galle Road

UDAHAMULLA 077 6859780, 011 2810042
No 138, Station Rd,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

## மக்கள் வங்கியில் அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகள் பொது ஏல விற்பனை

30.06.2022 வரை புத்தளம் பிராந்தியத்திலுள்ள மக்கள் வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை மையங்களில் அடகு வைக்கப்பட்டு 13.10.2023 வரையில் மீட்கப்படாத தங்க நகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள திகதி மற்றும் வளாகத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணிக்கு ஏலம் தொடங்கும்.

| | |
|---|---|
| ஏல விற்பனை திகதி | 14.10.2023 & 15.10.2023 |
| ஏலவிற்பனை இடம் | மக்கள் வங்கி வென்னப்புவ கிளை வளாகம் |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள் | புத்தளம், சிலாபம், வென்னப்புவ, நாத்தாண்டிய. கல்பிட்டி, மாதம்பே, ஆனமடுவ, தங்கொடுவ, மஹாவெவ, மாரவில |
| அடகு வைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் | மதுரங்குளிய, சிலாபம் கடற்றொழில், ஆராச்சிக்கட்டுவ, உடப்புவ, போலவத்த, லுனுவில, உல்ஹிட்டியாவ, கொட்டாரமுல்ல, வெலிப்பன்னகஹமுல்ல, நாரவில, நொரேச்சோலை, ஆண்டிகம, தொடுவாவ |

இந்த ஏல விற்பனையை பொது மக்களுக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் மாற்ற, ரத்து செய்ய, ஒன்றிணைக்க, அல்லது ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமை அலுவலகம் (புத்தளம்),**
**தொலைபேசி எண்: 032-2253301**

PEOPLE'S BANK
Pride of the Nation

## கேள்வி அறிவித்தல்

## வெலிகம நகர சபை – 2024ம் ஆண்டு

2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலத்திற்கு இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சேவைகளை குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

01. கேள்வி விண்ணப்பங்கள் விநியோகித்தல் 2023.09.25 முதல் 2023.10.16 பி.ப. 12.00 வரை அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

02. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2023.10.17 பி.ப. 2.00 இற்கு முன் பதிவுத் தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைப்பதன் மூலம் கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

03. கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2023.10.17 பிற்பகல் 2.00 இற்கு நடைபெறும்.

இது பற்றிய மேலதிக விபரங்களை மற்றும் கேள்வி நிபந்தனைகளை அலுவலக நேரங்களில் வருமானப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். 041-2250274

**செயலாளர்,**
**வெலிகம நகர சபை**

**அட்டவணை**

| விடயம் | மீளளிக் கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூ. சதம் | மீளளிக் கப்படும் கேள்வி வைப்பு ரூ. சதம் | குறைந்த பட்ச கேள்வி ரூ. சதம் |
|---|---|---|---|
| **நகர சபைக்குச் சொந்தமான கடை அறைகளை குத்தகைக்கு விடல்** | | | |
| 01. கல்பொக்க மாட்டிறைச்சிக்கடை இல. 01 | 1500.00 | 20,000.00 | 561,000.00 |
| 02. கல்பொக்க கோழியிறைச்சிக்கடை இல. 02 | 1500.00 | 2000.00 | 58,000.00 |
| 03. கல்பொக்க ஆட்டிறைச்சிக்கடை இல. 03 | 1500.00 | 2000.00 | 35,000.00 |
| **வரித்தொகை சேகரிக்கும் உரிமையை குத்தகைக்கு விடல்** | | | |
| 01. மஹவீதிய மீன் மற்றும் மரக்கறி கடை | 1500.00 | 20,000.00 | 1,442,297.00 |
| 02. கல்பொக்க மீன் மற்றும் மரக்கறி கடை | 1500.00 | 20,000.00 | 208,000.00 |
| 03. கப்பரதொட்ட, பள்ளியவெல்ல, எலென் எகொடவத்த மீன் சந்தை | 1500.00 | 20,000.00 | 1,401,000.00 |
| 04. பெலேன சிறிய மீன் சந்தை | 1500.00 | 5,000.00 | 20,000.00 |
| 05. மஹவீதிய மீன் சந்தை | 1500.00 | 5,000.00 | 70,000.00 |
| 06. ரன்பொஹொனிய மரக்கறி கடை | 1500.00 | 5,000.00 | 88,000.00 |
| **வேறு** | | | |
| 01. மஹவீதிய கன்துவ அருகில் பொது மலசலகூடம் | 200.00 | 500.00 | 12,100.00 |
| 02. வெலிகம பஸ் நிலைய பொது மலசலகூடம் | 1500.00 | 5,000.00 | 115,100.00 |
| 03. கப்பரதொட்ட மயான பூமி விளைச்சல் வரி | 200.00 | 500.00 | 9,000.00 |
| 04. நவீன சந்தை தொகுதி வாகன நிறுத்துமிடம் | 1500.00 | 20,000.00 | 340,000.00 |

**கவனிக்கவும்:** ரூ. 40,000.00 இற்கு சகல கேள்விகளுக்கும் பெற்றுக்கொள்ளும் கேள்வித் தொகையை ஒரே முறையில் செலுத்துதல் வேண்டும்.

## கிளிநொச்சி மாவட்ட பொதுவைத்தியசாலைக்கு தேவையான AIR CONDITIONER

## கேள்வி கோரல் 2023

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைகள் குழுத்தலைவர் தகுதியான ஆர்வமுள்ளவர்களிடம் கீழ் குறிப்பிடப்படும் பொருட்களுக்கான முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இல | கேள்விகள் | மதிப்பீட்டுப் பெறுமதி | மீளளிப்பு செய்யப்படாத கட்டணம். |
|---|---|---|---|---|
| 01 | NP/DGH/K/PSDG/Air.con/2023 | AIR CONDITIONER 48000BTU-06<br>AIR CONDITIONER 24000BTU-01 | 7.4MN | 2000/- |

1. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இவ்வைத்தியசாலை அலுவலகத்தில் கிடைக்க பெறும் விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி பெறுகைப் பத்திரங்களை அலுவலக நாட்களில் 25.09.2023 தொடக்கம் 10.10.2023 வரையான காலப்பகுதியில் 09.00 மணி தொடக்கம் 03.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

2. கேள்விகள் 11.10.2023ம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய பெறுகைக்குழு மாவட்ட பொதுவைத்தியசாலை, A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் கேள்வி இலக்கத்தினை தபாலுறையின் இடதுமேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகை தர விரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமுகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.

3. நாட்டமுள்ள கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களினையும், நடைமுறைகள் தொடர்பான படிவத்தினையும், விலைக்கேள்வி பத்திரங்களையும் அலுவலக நேரங்களில் மாவட்ட பொதுவைத்தியசாலை கிளிநொச்சி (தொலைபேசி இல 0212285329/0212284111) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

4. கேள்வி முன் ஆயத்தக் கலந்துரையாடல் 02.10.2023 அன்று மு.ப 10.00 மணிக்கு மாவட்டப்பொது வைத்தியசாலை கிளிநொச்சி மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும்.

5. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது ஏற்றுக்கொள்வதற்கு இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புக்கள் எதிலும் இருந்து விடுபட்டு முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**தலைவர்**
**பிராந்திய பெறுகைகள் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**கிளிநொச்சி**

## மீட்கப்படாதிருக்கும் அடகு நகைகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கி மட்டக்களப்பு பிராந்தியத்தின் பின்வரும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 30.06.2022 வரை அடகு வைக்கப்பட்டு 13.10.2023ஆம் திகதி வரை மீட்கப்படாத நகைகள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள திகதி இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் முன் அறிவித்தல் எதுவுமின்றி இவ் ஏல விற்பனையை ஒருங்கிணைக்கவோ இரத்துச் செய்யவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு உரிமை உண்டு என்பதை அறியத் தருகிறோம்.

ஏல விற்பன ஆரம்பமாகும் நேரம் முற்பகல் 9.00 மணி

| | |
|---|---|
| **ஏல விற்பனை நடை பெறும் திகதி** | **14.10.2023** |
| ஏல விற்பனை நடைபெறும் இடம் | மட்டக்களப்பு நகரக் கிளை |
| கிளையின் பெயர் | காத்தான்குடி, கொக்கட்டிச்சோலை, களுவாஞ்சிக்குடி, ஏறாவூர், வாழைச்சேனை, ஓட்டமாவடி |
| சேவை நிலையம் | ஆரையம்பதி, கிரான்குளம், வவுணதீவு, மண்டூர், வாகரை, கிரான் |

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**மட்டக்களப்பு.**
**(065 2224476)**

PEOPLE'S BANK
Pride of the Nation

## பெறுகை அறிவித்தல்

## மாவட்ட பொது வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை

ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் கீழ்க்காணும் விடயங்களுக்காக பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல | விடயம் | மீளளிக்கப் படாத வைப்பு (ரூ) | மீளளிக்கப்படும் வைப்பு / கேள்விப் பிணைமுறி (ரூ) |
|---|---|---|---|
| | **நிர்மாணம்** | | |
| 01 | Refurbishment of nurses hostel (Ground 1st, 2nd, 3rd floor and relevant roof and external work) (கட்டிட நிர்மாண விடயங்களுக்காக ICTAD இல் C8 அல்லது C7 தரத்தில் பதிவு செய்திருத்தல்) | 2,000.00 | 38,000.00 |
| | **பாவனைப் பொருட்கள்** | | |
| 02 | குப்பைப் பைகளை கொள்வனவு செய்தல் (20"X24" மற்றும் 34"X36" அளவில் நிறத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்டுள்ளது) | 2,000.00 | 50,000.00 |

பெறுகை மாதிரிப் பத்திரங்களை 2023.09.26 முதல் 2023.10.17 வரை அலுவலக நேரங்களில் புதிய ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். உங்களால் சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை 2023.10.18 மு.ப 10.00இற்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விலைமனுக்களை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை விடயங்களை குறிப்பிட்டு தலைவர், பிரதேச பெறுகைக் குழு, மாவட்ட பொது வைத்தியசாலை, ஹம்பாந்தோட்டை என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து குறித்த நேரத்திற்கு முன்பு ஒப்படைக்கலாம். மேற்படி விடயம் பற்றிய பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

மேலதிக விபரங்களுக்காக தொ.பே. இலக்கம் : **047-2256417**

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**ஹம்பாந்தோட்டை**

## மீட்கப்படாத அடகு நகைகள் பகிரங்க ஏல விற்பனை

30.06.2022ம் திகதி வரை வன்னிப் பிராந்தியத்தில் உள்ள மக்கள் வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் அடகு வைக்கப்பட்டு 10.10.2023 திகதி வரை மீட்கப்படாத நகைகள் கீழே கொடுக்கப்பட்ட திகதி மற்றும் இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

ஒவ்வொரு நாளும் முற்பகல் 9.00 மணிமுதல் ஏல விற்பனை நடைபெறும்.

| | |
|---|---|
| **ஏலவிற்பனை திகதி** | **11.10.2023 மற்றும் 12.10.2023** |
| **ஏலவிற்பனை இடம்** | **பிராந்திய காரியாலயம், வன்னி, வவுனியா** |
| **அடகு வைக்கப்பட்ட கிளை** | **முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், கிளி-நொச்சி, பரந்தன், மாங்குளம், முருங்கன், செட்டிக்குளம்** |
| **அடகு வைக்கப்பட்ட சேவை நிலையம்** | **புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், வவுனியா நகரம். நெடுங்கேணி, பேசாலை, கிளிநொச்சி நகரம், பளை, மல்லாவி, கனகராயன்குளம். நானாட்டான், சிலாவத்துறை** |

மேற்படி ஏல விற்பனையை முன்னறிவித்தலின்றி ரத்துச் செய்யவோ, ஒன்று சேர்க்கவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு சகல அதிகாரமும் உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைச் செயலகம், வன்னி**
**தொலைபேசி இல. 024-2225054/ 024-2222972**

PEOPLE'S BANK
Pride of the Nation

## மீட்கப்படாத அடகு வைக்கப்பட்டுள்ள நகைகளின் பொது ஏல விற்பனை

## மக்கள் வங்கி - கொழும்பு தெற்கு பிராந்திய தலைமைக் கரியாலயம்

மக்கள் வங்கி கொழும்பு தெற்கு பிராந்தியத்துக்கு உட்பட்ட கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளில் மற்றும் சேவை மையங்களில் 30.06.2022 வரை அடகு வைக்கப்பட்டதும் 13.10.2023 வரை மீட்டெடுக்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாததுமான நகைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் கிளைகளில் பொது ஏல விற்பனை செய்யப்படும்..

| | |
|---|---|
| **ஏல விற்பனை நிகழும் திகதி** | **14.10.2023** |
| தேவைப்படின் ஏல விற்பனை செய்யும் மற்றைய திகதி | 15.10.2023 |
| ஏல விற்பனை செய்யப்படும் இடம் | கோல்டின் ஜுபிளி, பொரளை |
| அடகு வைக்கப்பட்ட கிளைகள் | கோல்டின் ஜுபிலி, நாரஹேன்பிட்டி, சுதுவெலலு, லிபர்டி பிளாசா, லக்கி சிளாசா, பொரளை, தலைமைக் கிளை, மருதானை, பம்பலப்பிட்டி, மெஜஸ்ட்டிசிட்டி, கிருலப்பனை, வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, கூட்டுறவு இல்லம், திம்பிரிகஸ்யாய, பார்க் வீதி, நகர மண்டபம், யூனியன் பிளேஸ். |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | சுதுவெல்ல, தேசிய லொத்தர் சபை, ஹெவ்லொக் டவுன், கொழும்பு பல்கலைக்கழகம், கொம்பனி வீதி, (S;ave Is;and), மருத்துவக் கல்லூரி, திறைசேரி பிரிவு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |

- ஏல விற்பனை நிகழும் நாட்களி எண்ணிக்கையானது ஏல விற்பனைக்கு உட்படுத்தப்படும் தங்க நகைகளின் எண்ணிக்கைக்கேற்ப வேறுபடலாம்.

இந்த ஏல விற்பனையில் பங்குபெறுவோர் தமது அடையாள அட்டையைக் (NIC) கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். இந்த ஏலங்களை மறு அறிவிப்பு இன்றி இரத்துச் செய்ய ஏல வபிற்பனை செய்யும் இடத்தை மாற்ற ஒன்றிணைத்துச் செயற்பட அல்லது இச் செயற்பாட்டை ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உண்டு.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமைக் காரியாலயம் (கொழும்பு தெற்கு),**
**இல. 11, டியூக் வீதி, கொழும்பு -01**
**தொலைபேசி இல. 011-2327847**

PEOPLE'S BANK
Pride of the Nation

## பன்னல பிரதேச சபை

# 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தினுள் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சேவைகள், பொருட்களை வழங்குதல் மற்றும் ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து கொள்வதற்கு விரும்பும் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். சுயமாகத் தயாரித்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் பெயர், முகவரி, வியாபாரத்தின் தன்மை, தகைமை மற்றும் ஏனைய விபரங்களைக் குறிப்பிட்டு பதிவுக் கட்டணம் சகிதம் பதிவுத் தபாலில் எனக்கு அனுப்புதல் வேண்டும். காசோலைகள் மற்றும் காசுக் கட்டளைகளை ''தலைவர், பன்னல பிரதேச சபை - பன்னல'' என்று எழுதி அனுப்புதல் வேண்டும். பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2023-12-20ம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முடிவுறுத்தப்படும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2024ஆம் வருடம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

| | வழங்கல்கள் | பதிவு கட்டணம் |
|---|---|---|
| 1. | மின்னுபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் (வீதி விளக்குகளுக்கான பகுதிகளுடன்) | 3000.00 |
| 2. | அலுவலக உபகரணங்கள் - மரம், உருக்குத் தளபாடங்கள் | 2000.00 |
| 3. | காகிதாதிகள், அச்சடிக்கப்பட்ட படிவங்கள் மற்றும் ஆவணங்கள், புத்தகங்கள் | 2000.00 |
| 4. | வாகன உதிரிப்பாகங்கள் - டயர், டியூப் மற்றும் பட்டறிகள் | 2000.00 |
| 5. | நீர்க்குழாய் வேலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் | 2000.00 |
| 6. | வாகன அனுமதிப்பத்திர தகடுகள், வரிப்பணத் தகடுகள், வாகன ஸ்டிக்கர்கள் | 2000.00 |
| 7. | சுகாதார பிரிவிற்கான உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினித் திரவங்கள் (கம்பூட்ஸ், கையுறைகள் உட்பட) | 2000.00 |
| 8. | நூலகப் புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் | 2000.00 |
| 9. | கைத்தொழிலுக்குத் தேவையான பொருட்கள் (கல், மணல், கிரவல், சீமெந்து, தார், பிரிமிக்ஸ், சிறிய கற்கள்) | 2000.00 |
| 10. | வீதிப் பராமரிப்பு உபகரணங்கள் (தாச்சி, இரும்பு ஏணி, ரேக்கை, வீல்பரோ, பிரம்புக் கூடை, புல் வெட்டும் இயந்திரம் போன்றன) | 2000.00 |
| 11. | சீருடைத் துணிகள், முன்பள்ளி சீருடைகள் (துணி, சாரி, தொப்பிகள், பைகள், தண்ணீர் போத்தல்கள், குடைகள் உட்பட) | 2000.00 |
| 12. | விளையாட்டுப் பொருட்கள் | 2000.00 |
| 13. | சகல வகையான குழாய்கள், கம்பித் தூண்கள் மற்றும் கொங்கிறீட் உற்பத்திகள் | 2000.00 |
| 14. | சகல வகையான தும்பு உற்பத்திகள் மற்றும் இறப்பர் உற்பத்திகள் (ஈர்க்கிள், பிரஸ், காபட்) | 2000.00 |
| 15. | சகல வகையான நிறப்பூச்சுகள் | 2000.00 |
| 16. | விளம்பரப் பலகைகள் | 2000.00 |
| 17. | நாய்களுக்கான கழுத்துப் பட்டிகள் | 2000.00 |
| 18. | புகைப்படப் பிரதி இயந்திரம் மற்றும் அச்சு இயந்திரங்களுக்குத் தேவையான மை மற்றும் டோனர் வழங்கல் | 2000.00 |
| 19. | எரிவாயு (L.P) 37.5 கி.கிராம் | 2000.00 |
| 20. | நடமாடும் மலசலகூடம் | 2000.00 |
| 21. | கன்று வகைகள் (பழ வகைகள், மரக்கறி, மலர்கள், மூலிகைகள், கும்புக், மீ போன்ற ஏனையவை) | 2000.00 |
| 22. | மலர்ச்சாடிகள் | 2000.00 |
| 23. | அப்பியாசக் கொப்பிகள் உட்பட பாடசாலை உபகரணங்கள் | 2000.00 |
| 24. | மின்பிறப்பாக்கி | 2000.00 |
| 25. | வளிச்சீராக்கி இயந்திரங்கள் | 2000.00 |
| 26. | திரைச்சீலைகள் | 2000.00 |
| 27. | வீட்டுத் தளபாடங்கள் | 2000.00 |
| 28. | கணனி மற்றும் டெப்கள் | 2000.00 |
| 29. | ஆயுர்வேத ஒப்பனைப் பொருட்கள் | 2000.00 |
| 30. | வேல்டிங் வேலைகள், அறிவித்தல் பலகைகள் | 2000.00 |
| 31. | உணவு பானங்கள் வழங்குதல் | 2000.00 |
| 32. | வைபவ மண்டபங்களை வழங்குதல் | 2000.00 |
| 33. | பென்சி பொருட்கள் | 2000.00 |

### சேவைகள்

| | | |
|---|---|---|
| 1. | வாகனங்களை சேர்விஸ் செய்தல் மற்றும் வாகன திருத்தவேலைகள் (அதிகாரப் பிரதேசத்திற்குள் அல்லது அதற்கண்மையில் அமைந்திருத்தல் வேண்டும்) | 2000.00 |
| 2. | அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் (கணனி, புகைப்படப் பிரதி, தட்டச்சுப்பொறி, ரோணியோ இயந்திரம்) | 2000.00 |
| 3. | இறப்பர் முத்திரை வெட்டுதல், விளம்பரம் மற்றும் பதாகைகள் அச்சிடல் | 2000.00 |
| 4. | டயர் மற்றும் டியூப்களை மீள நிரப்புதல் | 2000.00 |
| 5. | போக்குவரத்திற்கான வாகனங்களை வாடகைக்கமர்த்துதல் (டிராக்டர், லொறி, டிப்பர் 1, 2, 3 கியூப், ஒரு கி.மீற்றர் மற்றும் 1 கி.மீற்றருக்கு மேற்பட்டவைகளுக்கான வாடகை, தண்ணீர் பவுசர்கள் 3000/5000 லீட்டர், 8/10/12 தொன் வீதி அழுத்தும் இயந்திரம், வெக்கர், டிரேலருடனான டிராக்டர் சகிதம் பகோ 30W JCB) | 2000.00 |
| 6. | அபாயகரமான மரங்களை வெட்டி அகற்றுதல் | 2000.00 |
| 7. | பத்திரிகைகள், போத்தல் மற்றும் சிதைந்த பொருட்களை கொள்வனவு செய்தல் | 2000.00 |
| 8. | மரத்தளபாடங்களின் திருத்தவேலைகள் | 2000.00 |
| 9. | சட்டச் சேவை மற்றும் நிலஅளவைச் சேவைகள் | 2000.00 |
| 10. | ஒலிபெருக்கிகள் மற்றும் கொண்டாட்டங்களுக்கான பொருட்களை வாடகைக்கு வழங்குதல் | 2000.00 |
| 11. | தச்சு வேலை, மேசன் வேலை, உருக்கியொட்டும் வேலை, நீர்க்குழாய் தொழில்நுட்பச் சேவை, உள்ளக தொலைபேசிச் சேவை | 2000.00 |
| 12. | அலுவலக அடையாள அட்டைகளைத் தயாரித்தல் | 2000.00 |
| 13. | நீரிறைக்கும் இயந்திர திருத்தவேலைகள் | 2000.00 |
| 14. | கணனி வலையமைப்பிடல் | 2000.00 |
| 15. | ஒலிபெருக்கி இயந்திரங்களை வழங்குதல் | 2000.00 |

ஒப்பந்தக்காரர்கள்

(கவனிக்கவும்: 10 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்ட ஒப்பந்தப் பதிவுகளுக்கு ICTAD சான்றிதழ் கட்டாயமாகும்)

| | | |
|---|---|---|
| 1. | ஒரு இலட்சம் ரூபா (100000.00) முதல் 500000.00 வரையான வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் | 4000.00 |
| 2. | ரூபா 500000.00 முதல் 1000000.00 வரையான வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் | 6000.00 |
| 3. | ரூபா 1000000.00க்கு மேற்பட்ட வேலைகளுக்கான ஒப்பந்தக்காரர்கள் | 8000.00 |

பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் சகல வழங்குநர்களும் ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக வியாபாரப் பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியொன்றை விண்ணப்பத்துடன் அனுப்புதல் வேண்டும்.

தேவையான வேளைகளில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் அல்லது ஒப்பந்தக்காரர்களைத் தவிர்ந்த ஏனைய வழங்குநர்களிடமிருந்து வழங்கல் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் அதிகாரத்தை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை கடமை நேரங்களில் அலுவலகத்தில் விசாரித்தறிந்து கொள்ளலாம்.

**தொலைபேசி: 037-2246069**
**ஜே. ஏ. சுஜீவனீ ஜயசிங்ஹ, செயலாளர்**
**2023-09-19ஆம் திகதி**
**தலைவர்,**
**பன்னல பிரதேச சபை தலைமை அலுவலகத்தில்.**
**பன்னல பிரதேச சபை.**

# பொது மக்களுக்கு அறிவிப்பு



வெள்ளசுவாமி, முன்னர் சுபுன் சுப்பர் சென்டர் (பி.வி. 14127), இல. 16, ஆர்.ஏ.தி மால் மாவத்தை, கொழும்பு 05, கடைசியாக இல. 35/7, அடம்பொலவத்தை வீதி, ஹெந்தலை, வத்தளை, டில்ஷான் (NIC 853290246V) இல் வசிக்கிறார், (மேலே உள்ள படம்), 16செப்டம்பர் 2023 முதல் அவர் எங்கள் நிறுவனத்தின் சேவையில் இருந்து ராஜினாமா செய்துள்ளார் என்பதை எங்கள் வாடிக்கையாளர்கள், பொதுமக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிவிக்கிறோம்.

அன்றைய தேதியில் இருந்து எங்கள் நிறுவனத்தின் சார்பாக எந்த விதத்திலும் பணம் பெறவோ அல்லது செயல்படவோ அல்லது செயற்படுவதைத் தவிர்க்கவோ மேற்கூறிய நபருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதை அனைவருக்கும் இதன் மூலம் முறையாக எச்சரிக்கின்றனர். அன்றைய திகதியிலிருந்து அவருடன் தொடர்பு கொள்ளும் எவரும் அவரது சொந்த ஆபத்தில் மற்றும் பொறுப்பின் பேரில் அவ்வாறு செய்வார்கள், மேலும் அத்தகைய செயல் அல்லது புறக்கணிப்புக்கு எங்கள் நிறுவனம் எந்த வகையிலும் பொறுப்பேற்காது.

**சுபுன் சூப்பர் சென்டர் (பிரைவேட்) கோ., லிமிடெட்**
**உத்தரவு படி.**

**சுற்றுலாத் துறை மற்றும் காணி அமைச்சு**

**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை (SLTDA)**

## விலைமனு சமர்ப்பித்தலை நீடித்தல்

### இலங்கையில் இருந்து வெளிச்செல்லும் சுற்றுலா பயணிகள் மற்றும் உள்வரும் சுற்றுலா பயணிகள் தொடர்பான கணக்கெடுப்புக்கான தரவு சேகரிப்புக்கு சேவை வழங்குநர் ஒருவரை பணியமர்த்தல்

**ஒப்பந்த இல.: SLTDA/R&IR/S/NCB/Data Collection – Departing/2023/13**

இது மேலுள்ள விடயம் தொடர்பில் 2023 செப்டெம்பர் 6 ஆம் திகதி வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரம் தொடர்பானது. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளது.

**விலைமனுக்களை சமர்ப்பிக்கும் இறுதித் திகதி: 2023 ஒக்டோபர் 06 அன்று பி.ப. 2:00**

**விலைமனு செல்லுபடித் திகதி: 91 நாட்கள் (2024 ஜனவரி 5ஆம் திகதி உள்ளிட்டவரை அமையும்)**

**விலைமனு பிணை செல்லுபடித் திகதி: 119 நாட்கள் (2024 பெப்ரவரி 2ஆம் திகதி உள்ளிட்டவரை அமையும்)**

மற்ற விதிகள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி நீடிக்கிறது.
விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு நிமிடங்கள் தொடர்பில் பிற்சேர்க்கைகள் (ஏதேனும் இருந்தால்) SLTDA இணையதளத்தில் tenders இன்கீழ் (https://sltda.gov.lk/tender) மேலும் அறிவுறுத்தப்படும்.
ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மின்னஞ்சல் முகவரி: sltdaproc@srilanka.travel , தொடர்பு இல. 0112426800, நீடிப்பு (303, 305, 277) இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, உதவிப் பணிப்பாளரிடம் (பெறுகை) மேலதிக விபரங்களை பெறலாம்.

**தலைவர்**
**திணைக்கள பெறுகைக் குழு**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை**
**இல. 80, காலி வீதி, கொழும்பு 03**

## வென்னப்புவ பிரதேச சபைக்கு சூரிய சக்தி முறைமையை (SOLAR PV SYSTEM) வடிவமைத்தல், வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரிப்பதற்கான விலைமனுக்களை அழைத்தல்

2023-09-20ஆம் திகதிய (தினகரன், தினமின, டெய்லி நியூஸ்) பத்திரிகைகளில் பிரசுரமான மேற்கூறப்பட்ட விலைக்கோரலுக்கு இயைபான அறிவித்தலில் சூரிய சக்தி முறைமையை 120 நாட்களுக்குள் வழங்கி, போக்குவரத்து செய்தல் மற்றும் நிறுவுதல் வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்பதுடன் அது 180 நாட்கள் என திருத்தப்படல் வேண்டும்.

**டப். டீ. லூஷன்,**
**செயலாளர்,**
**பெறுகைக் குழு,**
**வென்னப்புவ பிரதேச சபை, வென்னப்புவ.**

**2023-09-22ஆம் திகதி**
**பிரதேச சபை அலுவலகம், வென்னப்புவ.**

**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு**

**துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு**
**இல. 19, சைத்திய வீதி, கொழும்பு 01**

### 2024 ஆண்டிற்கான வாகன பழுதுபார்த்தல்கள் மற்றும் சேர்விஸ் செய்வதற்கான நிறுவன பதிவு செய்தல் அமைச்சிற்கு உரிய வாகனங்களைப் பழுதுபார்த்தல்.

வாகன பழுதுபார்த்தல் மற்றும் பெயின்ட் செய்தல், வளிச்சீராக்கி பழுதுபார்த்தல், குஷன்வேலை, ஆசன உறை மற்றும் காபர்ட் இடல், சேர்விஸ் செய்தல், டயர் மற்றும் பற்றரி கொள்வனவு செய்தல் (வாகன பழுதுபார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்வதற்காக இவ் அமைச்சில் இருந்து அதிகூடிய தூரம் 20 KM வரையானதாக இருத்தல் வேண்டும்)

மேற்படி தேவைப்பாட்டிற்காக நிறுவனங்களைப் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. ரூ. 500/- மீளளிக்கப்படாத தொகையை இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் இல. 7040298 கணக்கிற்கு அல்லது துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சின் காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச் சீட்டுடன் இணைத்து அமைச்சினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பத்துடன் பிரதான நிதி அதிகாரி, துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, இல. 19, சைத்திய வீதி, கொழும்பு 01 என்ற முகவரிக்கு 2021.10.11 பி.ப. 2.00 இற்கு முன்பு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டு வந்து ஒப்படைக்குமாறு அறிவித்துக் கொள்கிறேன்.

தொடர்புகள்:
பிரதம கணக்காளர் - 0112542554

செயலாளர்,
துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு,
இல. 19, சைத்திய வீதி,
கொழும்பு - 01

The Housewives' companion
Classifieds on
Daily News

# விலைமனு அழைத்தல்

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு உரித்தான கீழ்க் காணப்படும் அலகுகளிற்கு குறித்த கொள்வனவுகளிற்காக தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E | F |
|---|---|---|---|---|---|---|---|
| தொடர் இல. | கருமங்களின் விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்யப்பட வேண்டிய விலைமனுப் பிணையம் மற்றும் செல்லுபடிக் காலம் | | | விலைமனுப் படிவக் கட்டணம் | ICTAD தரம் |
| | | | காசாக எனின் | வங்கி வரைவு ஒன்றெனின் | பிணையம் செல்லுபடிக் காலம் | | |
| 01 | பெல்வெஹெர பிரதி விவசாயப் பணிப்பாளர் (விதைகள்) பணியகத்திற்கு சொந்தமான சுற்றுலா இல்ல பழுதுபார்த்தல் | SPD/2/5/4/48/(2023) | 32,000/- | 64,000/- | 2024.01.15 | ரூ. 2,500.00 | C9, C8 & C7 |
| 02 | மஹஇலுப்பள்ளம பிரதி விவசாயப் பணப்பாளர் (விதைகள்) பணியகத்தின், பணியகக் கட்டிட பழுது பார்த்தல் (கட்டம் IV) | SPD/2/5/4/53/(2023) | 58,000/- | 116,000/- | 2024.01.29 | ரூ. 3,000.00 | C8, C7 & C6 |
| 03 | பொலன்னறுவை அரச விதை உற்பத்தி பண்ணையின் உள்ளக பாதையை அமைத்தல் - கட்டம் V | SPD/2/5/4/54/(2023) | 47,000/- | 94,000/- | 2024.01.15 | ரூ. 2,500.00 | C9, C8 & C7 |

ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதற்காகப் பெற்றுக் கொள்ளும் விலைமனுப்படிவங்களில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் மீளளிக்கப்படாத மேற்படி 'E' நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை இத்திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் நிர்வாக அலுவலகரிடம் சமர்ப்பித்து 2023.09.26 முதல் 2023.10.13 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர் இல 02 இற்காக விலைமனு சமர்ப்பிக்கும், விலைமனுதாரர்கள் 1987 இல. 03 என்ற பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விலைமனுப் படிவங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனு அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும் 'தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதெனிய' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் மேற்படி அட்டவணையில் Dஇன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத் தொகையொன்றை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன் வங்கி வரைவு ஒன்றாக பிணை வைப்புச் செய்வதாயின் அது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக் கொள்ளல் 2023.10.16 அன்று பி.ப. 2.00 இற்கு முடிவுறுவதுடன் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், பேராதெனிய,**
2023.09.25
**081-2388106/122**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 25ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.